Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 24 ரூபா 16/50

දිනමුරසු වාරමලර් ஏப்ரல் 21 - 27, 2005

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S முரசு 610



## கருணாவின் புதிய நிலைப்பாடு

## உப்பாறு தாக்குதல்

## உணர்த்தும் உண்மைகள்


## அநீதியை எதிர்க்கும் பாக். பெண்

## சமஷ்டியும் சர்வஜன வாக்கெடுப்பும்

## சிறப்புச் சிறுகதை

# மனிதனாக வாழ தெய்வ ஆசி அவசியம்

## ஆன்மீகம்



மனிதப் பிறவி மகத்தான படைப்பு. ஆறறிவு படைத்தவன் மனிதன். மனிதனாகப் புனிதம் கெடாமல் வாழ்வதுதான் வையத்துள் பிறந்த ஒரு மனிதனின் தலையாய கடமை.

எப்படியும் வாழலாம் என்ற தப்பான எண்ணக் கருத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு இப்படித்தான் வாழ வேண்டும் என்ற ஒரு மகத்தான கோட்பாட்டுக்குள் வடிவம் அமைத்து வாழ்ந்து புகழோடு மடிய வேண்டும்.

இந்து மத நூல்களில் இராமாயணம், மகாபாரதம் இரண்டும் இதிகாசங்களாகும். இவற்றை இந்து மகன் எவனாவது படிக்காமல் இருக்கக் கூடாது. இந் நூல் சிறந்த படிப்பினையூட்டும் தத்துவக் கதைகளாகும்.

தோன்றிற் புகழோடு தோன்றல் வேண்டும். புகழ்பெற மனிதனாக வாழ முயல வேண்டும். திருவள்ளுவப் பெருந்தகையின் திவ்விய மணிக்குறள்கள் அத்தனையும் மனிதனைப் புனிதனாக்கும் அரும் பெரும் அமுதத் துளிகள். அள்ளிப் பருகி அதன் பொருளை உணர்ந்துகொண்டால் அவன் சுத்தமான மனிதனாகிவிடுவான். மாமனிதன் என்ற மகுடம் சூட்டப்பட்ட புகழுக்குரியவனாகிவிடுவான். இப்படிப்பட்டவன் இறந்தாலும் வாழ்வான்.

பொய்யும், புரட்டும், ஊழலும் இவ்வையகமெல்லாம் மலிந்துள்ளன. இந்தச் சுனாமி வந்து சுக்குநூறாக்கிச் சிதைத்த பின்னும் மனிதன் திருந்தவில்லை. இக் கொடிய உலகில் விடிவு கிடைக்காமல் தவிக்கும் மக்களுக்குத் தக்க வழி திறக்க, சாந்தி, சமாதானம் கிடைக்க, போராட்ட சூழல் புதையுண்டு போக ஆண்டவனே அருள்புரிவாய். சுனாமி மீண்டும் இங்கு வந்து உயிர்களை அள்ளிக் கொண்டு போக, இடமளியாமல் ஆண்டவனே அருள் வழங்கி ஆசிதர ஓடி வருவாயா?

**-சிவஸ்ரீ அ.அரசரெத்தினம், சேனையூர் - 06.**

# உன் விசுவாசத்தின்படி ஆகக்கடவது

"வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும். சங்கீதம் 121:2

சகோதரனே! சகோதரியே! உன்னுடைய தேவன் வானத்தையும் பூமியையும் உண்டாக்கினவர். தமது வார்த்தையால் எல்லாவற்றையும் சிருஷ்டித்தவர். அவரால் எல்லாம் ஆகும். உன்னுடைய பிரச்சினைகள், துன்பங்கள், நோய்கள் தொடர்ந்து தொல்லை கொடுத்துப் பின்தொடர்ந்து வருகிறதா? இந்த எல்லாக் காரியங்களிலிருந்தும் மீட்டு என்னைக் காப்பாற்ற வல்லவர் என்னுடை இயேசு என விசுவாசி. அவர் உன்னுடையவர். உன்னை மீட்டுக்கொள்ளவே மரித்தார். ஆனாலும் சதா காலங்களிலும் உயிரோடிருக்கிறார். கர்த்தராகிய இயேசு ஒவ்வொரு பிணியாளியையும் சொஸ்தப்படுத்துகிறபோது உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது" என்றே கூறுகிறார், என்னுடைய தேவன் இந்தப் பிரச்சினையில் இருந்து என்னை மீட்டுக்கொள்ள வல்லவர் என்று உறுதியோடு விசுவாசிக்கிறபோது அவர் கட்டாயமாக அதை உனக்குச் செய்வார், சாத்தானால் எல்லாவற்றையும் இழந்துபோன யோடி சொல்லுகிறான், "தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர்; நீர் செய்ய நினைத்தது தடைப்படாது என்பதை அறிந்திருக்கிறேன். யோபு 42:2

சரீரம் குஷ்டரோகத்தால் அழுகிப்போன நிலை, எல்லாவற்றையும் இழந்து மனைவி கூட அலட்சியப்படுத்துகிறாள், சிநேகிதர் எல்லோரும் கைவிட்டுவிட்டனர். ஆனாலும் யோபுவுக்கு ஒரு சத்தியம் தெரியும். அது என்ன தெரியுமா? என் மீட்பர் உயிரோடிருக்கிறார். யோபு - 19:25

ஆம் சகோதரனே! சகோதரியே! உன்னுடைய மீட்பர் உயிரோடிருக்கிறார். உன்னுடைய இயேசு, உனக்காக மரித்தவர் உயிரோடியிருக்கிறார். அவரை விசுவாசி. பிரச்சினைகள் தூசியாய்ப் பறந்துவிடும். நீ வேறு யாருக்கோ அல்ல, சர்வ வல்லமையுள்ள தேவனுடைய பிள்ளை என்பதை எப்போதும் நினைவில் வைத்துக்கொள். ஆமென்.

**-போல் ஜோன், தெல்தெனிய.**

# ஈருலக ஈடேற்றம்

இறை தூதர் அவர்கள் கூறுகின்றார்கள், "உலோபித்தனத்தை விட்டு நீங்கி இருங்கள். ஏனென்றால் உங்களுக்கு முன் வாழ்ந்தோரை அது அழிவில் தள்ளி ஹலாக்காக்கி இருக்கிறது" என்று.

உலோபியாக இருப்பவனுக்கும் தன் செயல் மூலமோ போதனைகள் மூலமோ பிறரையும் உலோபிகளாக இருக்கத் தூண்டுபவர்களுக்கும் கடுமையான தண்டனை இருப்பதாக அல்லாஹ் தன் அருள் மறையில் எச்சரிக்கின்றான்.


எவர்கள் கஞ்சத்தனம் செய்வதுடன் பிறரையும் கஞ்சத்தனம் செய்வதற்குத் தூண்டி அல்லாஹ் தன் அருள் பெருக்கால் அவர்களுக்குக் கொடுத்ததையும் பிறருக்கு வழங்காமல் மறைத்துக்கொள்கின்றனரோ, அத்தகைய இறை நன்றி மறுப்போருக்கு இழிவான வேதனையை நாம் ஏற்படுத்தி இருக்கிறோம்.

அல்குர் ஆன் 4:37

ஆகவே மனிதர்களே! உலோபித்தனத்தை ஒழித்து தான் தேடியவற்றில் இருந்து தான தருமங்களைச் செய்யுங்கள். அது உங்களுக்கு ஈருலக ஈடேற்றத்திற்கும் வழிவகுக்கும்.

**-எம்.சீ.கலீல், கல்முனை - 05.**

## கவிதைப் போட்டி இல.607



பரிசுக்குரிய கவிதை

### ஆசை

ஹிட்லர் மீசை
சிறுத்திருந்தது!
வீரப்பன் மீசை
பெருத்திருந்தது!
அவனுக்கு ஆசை
நாடாள!
இவனுக்கு ஆசை
காடாள!
ஆயுதத்தால்
வாழ்ந்தார்கள்;
ஆயுதத்தாலேயே
வீழ்ந்தார்கள்!

*நா. ஜெயபாலன், பிபிலை.*

### தனி ஆட்சி

பலி வெறி பிடித்தவனே.....
ஆடும் ஆட்டமெல்லாம்
இங்குதானடா!
இப்போது கேட்பாயா
தனி ஆட்சி - மண்ணுக்குள்?

*ரம்ஸான், யாழ்ப்பாணம்.*

### (அ)நியாயம்

காட்டுக்குள் கடத்தியதால் நீ
தீவிரவாதி - அதை
நாட்டுக்குள் கடத்தியிருந்தால்
இன்று நீ அரசியல்வாதி.

*ஆ. ஜெகதீஸ்வரன், கோதைநகர்.*

### தத்துவம்

வீரப்பனே!
கொன்றாய்;
கொல்லப்படுவாயென்ற
தத்துவத்திற்கு
உரமானாய்.

*யு.யு. பாத்திமா தீனா, ஏறாவூர் - 01யு.*

### சமரசம்

துப்பாக்கிப் பலமும்
தும்புக்கட்டு மீசையும்
போராட்ட ஆரம்பத்துக்குப்
பொருந்தும்
சமர் செய்தபின்
சமரசம் செய்வது சமயோசிதம்
இது வீரப்பனுக்கு மட்டுமல்ல....
நம் வீரருக்கும் பொருந்தும்.

*சீ. தங்கவடிவேல், மட்டக்களப்பு.*

### வாழ்வும் தாழ்வும்

சந்தனம் கடத்தி
வாழ்வைத் தேடினாய்
ஆட்களைக் கடத்தி
அழிவைத் தேடினாய்!

*வி. ராதுலன், ஆரையம்பதி - 01.*

### தவறே!

தவறு செய்வது தவறே
என்றால்!
அவர்கள் செய்ததும் தவறே;
நீ செய்ததும் தவறே.

*தேவசகாயம் மோகனதாஸ், ஆரையம்பதி.*

## கவிதைப் போட்டி இல.610



*எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி 27.04.2005.*

கவிதைப் போட்டி இல.610
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### ஆடாதடா ஆடாதடா மனிதா!

காட்டிலிருந்து நாட்டையே
கலக்கினான்
கர்மவினை
கடைசி ஊர்வலத்துக்கு
கண்ணீர்விட யாருமில்லை....?
கடவுள் மட்டுமே.

*எஸ்.பீ. பாலமுருகன்.*

### கானகன்

கடத்தல் மன்னன்
காலத்தின் நக்ர்வால்
கானகம் ஆண்ட
கலியுக வரதன்
வன்முறைக்கு வாழ்ந்து
வயதானவன்.

*ஐ. ஜெயந்தன், வவுனியா.*

### நம்ப முடியவில்லை

ஆயுதம் எடுத்தவன்
ஆயுதத்தாலேயே
அழிவதாகச்
சொல்கின்றனர்
சதி வலையில் சிக்க
உன்னிடம் கூடவா
"புறூட்டஸ்"கள்
இருந்தனர்?

*இ.சிவதர்சினி, உரும்பிராய்.*

### பெயரில்லை

தட்டிக் கேட்டான்
விதண்டாவாதியானான்
தடுத்துப் பார்த்தான்
சமூகவிரோதியானான்
வெட்டிப் போட்டான்
தேசத்
துரோகியானான்
வெடிகுண்டு வீசினான்
தீவிரவாதியானான்
ஆனால்
மரணித்தபோது கூட
இவனால்
மனிதனென்று
பெயரெடுக்க
முடியவில்லையே!

*க.அல். ஆஸாத், ஏறாவூர் - 03.*




# வாசக[ர்] சாலை தினமுரசு

## தித்திக்கும் தேனான தினமுரசிற்கு

தித்திக்கும் தினமுரசே!
தினந்தோறும் நீ தரும்
திடுக்கிட வைக்கும் செய்திகள்
திணற வைக்கின்றன.
திரு அற்புதனின் ஆரம்பம்
திசைகள் எங்கும் பரந்து
திரும்பிப் பார்க்க வைக்கிறது.
திருட்டுத்தனமாக நடாத்தும்
திருட்டுச் செயல்களை
திருமுகத்துடன் பயப்படாமல்
திகிலாய் தருகின்றாய்.
திருப்பு முனைகள் வந்தாலும்
திடுக்கிடாமல் தருகின்ற
திட்டங்கள் அனைத்தும்
திரும்பத் திரும்ப வாசிக்க
தின்பண்டமாய் இனிக்கிறது.
திரும்பாதவர்களை எல்லாம்
திரும்பிப் பார்க்க வைக்கிறது.
திருவிளையாடல் உன்னைப் போல்
திரும்பத் தீட்ட யாருக்குத் துணிவு வரும்
திருந்தாத ஜென்மங்களை
திருந்தவைக்கும் உன் சேவை
தினம் என்ன நொடிக்கு நொடி
திருமுகத்துடன் ஒளியாய்ப் பரவ
திக்குத் திசை மூலை முடுக்கெல்லாம்
திரள வேண்டும் உன் சேவை
திருடாமல் யோசித்து யோசித்து
தினமுரசு எனவரும் உன்முன் எழுத்து
தி(னா) அழியாமல் உலகே அறிய
தினந்தோறும் உன் சேவை வேண்டும்
திருமுகத்துடனே வாழ்த்தி
திரும்பவும் உனக்காக வரைவேன்
தித்திக்க வைப்பேன் உன்
தினவரவை எதிர்பார்த்து!

*-ஜெ.முகுந்தகுமார், வவுனியா.*

சூரிய குலத்திலே
தாமரை - தினமுரசு
வறுமைக் குலத்திலே
பாரதி - தினமுரசு
கற்பனைக் குலத்தின்
கவிஞன் தினமுரசு
தத்துவக் குலத்தின்
நடுவர் - தினமுரசு
நட்சத்திரக் குலத்திலே
விடிவெள்ளி - தினமுரசு
நன்னீர்க் குளத்திலே
ஆம்பல் - தினமுரசு
பன்னீர்க் குடத்திலே
சுத்தம் - தினமுரசு
பத்திரிகைக் குலத்திலே
பாண்டவர்கள் - தினமுரசு

*-அ.கா.மு.றிஸ்வின், மூதூர் - 01.*

# உங்கள் பக்கம்

## ஆலங்குளம் ஊடாகச் செல்லும் வாங்காமம் வீதி புனரமைக்கப்படுமா?

அட்டாளைச்சேனை பிரதேச செயலக எல்லையையும் அக்கரைப்பற்று பிரதேச செயலக எல்லையையும் இணைத்திருக்கும் ஆலங்குளம் வீதி, அதிலிருந்து மேற்கு நோக்கி அமைந்திருக்கும் இறக்காம பிரதேச சபைக்கு உட்பட்ட வாங்காமம் வீதி என்பன மிக மோசமாகப் பழுதடைந்த நிலையில் பொதுமக்கள் அவசர பயணம் மேற்கொள்ள முடியாதவாறு சேதமுற்றுக் கிடப்பதையிட்டு கிராம மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இரவு நேரங்களில் யாராவது சுகயீனமுற்றால் அல்லது வேறு அவசர தேவைகள் ஏற்பட்டால் அக்கரைப்பற்றுக்கே செல்ல வேண்டியுள்ளது. அப்படி போக நேரிடும் நேரங்களில் பிரதான வீதியில் காட்டு யானைகளின் அச்சுறுத்தல் அடிக்கடி ஏற்படுவதால் அனேகமான மக்கள் இந்த ஆலங்குளம் ஊடாகச் செல்லும் இசங்கணிச்சீமை வீதியையே விரும்புகின்றனர்.

ஆனால் அந்த வீதி குறிப்பிட்ட சில மைல் தூரத்திற்கு தார் வீதியாக இருந்தபோதும் மிகவும் மோசமாக உடைந்து குண்டும் குழியுமாக இருக்கின்றது. எனவே பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் கவனத்தில் எடுத்து இவ்வீதியைப் புனரமைப்புச் செய்துதவுமாறு வாங்காமம், ஆலங்குளம், இசங்கணிச்சீமை ஆகிய கிராமங்களில் வாழும் பொதுமக்கள் சார்பில் வேண்டிக் கொள்கிறேன்.

**-ரோஷன் ஏ.ஜிப்ரி, வாங்காமம், ஆலம்குளம்.**



மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -4-514282
தொலை நகல் (Fax):-4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# வட - கிழக்கு அனர்த்த நிவாரணம்; மக்களுக்குப் பணியாற்ற பரந்த ஜனநாயகக் கட்டமைப்பு உடன் நிறுவப்பட வேண்டும்

## - அமைச்சர் டக்ளஸ்

வடக்கு, கிழக்கு கரையோரப் பகுதிகளைச் 'சுனாமி' தாக்கி நான்கு மாதங்கள் பூர்த்தியாகப் போகின்ற இந்த நிலையில், அந்தரித்து அல்லாடும் பல்லாயிரக் கணக்கான அகதிகளுக்கு உடனடி மற்றும் குறுகிய கால, நீண்டகால நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கு புலிகள் மற்றும் சகல ஜனநாயக தரப்புகளையும் உள்ளடக்கிய இணைக் கட்டமைப்பொன்று உடனடியாக உருவாக்கப்பட வேண்டுமென்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவசர வேண்டுகோளொன்றினை விடுத்துள்ளார்.

வடக்கு, கிழக்கில் கடற்பேரலைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசர மனிதாபிமான நிவாரணப் பணிகளையும் மீள்கட்டுமாணப் பணிகளையும் மேற்கொள்வதற்கு அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான உத்தேச பொதுக் கட்டமைப்பு விரைவில் ஏற்படுத்தப்படுமென்று வழமைபோல் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் நம்பிக்கை தெரிவித்துள்ளார். 'சுனாமி' தாக்கி நான்கு மாதங்கள் கடக்கின்ற இந்த நிலையிலும் வடக்கு, கிழக்கு மக்கள் உரிய நிவாரணம், பாதுகாப்பான வதிவிட வசதிகள் போன்றவையின்றி அல்லாடுகின்றனர். இந்த நிலையில் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு சிங்கள, முஸ்லிம் தரப்புகள் மட்டுமல்ல, தமிழ் மக்கள் மத்தியிலான ஜனநாயகப் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய கட்டமைப்பொன்று உடனடியாக ஏற்படுத்தப்பட வேண்டுமென்று



எரிக் சொல்ஹெய்ம்

அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கில் அரச கட்டுப்பாட்டிலில்லாத பகுதிகளும் இருப்பதால் இந்தக் கட்டமைப்புக்குள் புலிகளும் உள்வாங்கப்பட வேண்டும். ஒவ்வொரு தடவையும் இலங்கைக்கு வருகை தரும்போது எரிக் சொல்ஹெய்ம் பொதுக்கட்டமைப்புப் பற்றி நம்பிக்கை தரும் தகவல்களைக் கூறிக்கொண்டே கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்திறங்குகிறார். பின்னர் கொழும்புக்கும் கிளிநொச்சிக்கும் ஆலாய்ப் பறந்து பேச்சுவார்த்தைகளை நடத்திவிட்டு வெறுங்கையுடன் மீண்டும் நாட்டைவிட்டு வெளியேறுகிறார். எம்மைப் பொறுத்த வரையில் ஜனநாயக ரீதியான, பன்முகத் தன்மை கொண்ட, உண்மையிலேயே வடக்கு, கிழக்கு மக்களுக்குச் சேவையாற்றக்கூடிய பொதுக் கட்டமைப்பொன்றே தேவையென்றும் அவர் சொன்னார். வேண்டுமானால் அரசும் புலிகளும் தொடர்ந்தும் பேசிக்கொண்டேயிருக்கட்டும். நோர்வேயும் நம்பிக்கையை வெளியிட்டுக் கொண்டிருக்கட்டும். செயலுறப்பெறமாட்டாத, யதார்த்தத்துக்குப் புறம்பான காரிய சித்தியற்ற, ஜனநாயக விரோத இப்பொதுக் கட்டமைப்பு ஏற்படப் போவதில்லையென்றும் அவர் சொன்னார். மட்டக்களப்பில் மட்டும் முப்பதுக்கு மேற்பட்ட நலன்புரி முகாம்களில் முப்பதாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் உள்ளனரென்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

## புலிப் பேச்சாளரைக் கைது செய் - கோருகிறது அவுஸ்திரேலியா அமைப்பு

வயது குறைந்த சிறுவர்களைப் பலாத்காரமாகக் கடத்திச் சென்று புலிகள் தமது படையணிகளில் சேர்த்துக்கொள்வது தொடர்பாகப் புலிகளின் பேச்சாளர் அன்ரன் பாலசிங்கத்தைக் கைது செய்யுமாறு அவுஸ்திரேலியாவில் இயங்கும் 'ஸ்பர்' என்ற அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. 'இலங்கையில் சமாதானம் மற்றும் மனித உரிமைகளை ஏற்படுத்துவதற்கான அமைப்பு' என்ற பெயரில் இயங்கும் இந்த நிறுவனம், லண்டன் நகர பொலிஸ் ஆணையாளருக்கு அனுப்பிவைத்த கடிதமொன்றில் இக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கடந்த 15ஆம் திகதி இக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அன்ரன் பாலசிங்கம் ஐ.நா.சபையின் சட்டதிட்டங்களை மீறி நடக்கிறாரென்று குற்றஞ்சாட்டியுள்ள இந்த அமைப்பு இதற்குத் தேவையான ஆதாரங்களை முன்வைக்க முடியுமென்றும் தெரிவித்திருக்கிறது. 1,600க்கு மேற்பட்ட சிறுவர், சிறுமியர்களைப் புலிகள் கடத்திச் சென்றுள்ளதாக 'யுனிசெப்' அமைப்பு மேற்கொண்ட குற்றச்சாட்டையும் இந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. பிரிட்டிஷ் பிரஜையான அன்ரன் பாலசிங்கம் சர்வதேசச் சட்டவிதிகளை மீறி நடக்கிறாரென்றும் பிரிட்டிஷ் சட்டதிட்டத்தின்படி அவர் மீது நடவடிக்கை எடுக்கும்படியும் கோரப்பட்டுள்ளது.

## முன்னாள் தமிழ் எம்.பீயின் சாரதிக்கு நீதிவான் எச்சரிக்கை

யாழ். மாவட்ட முன்னாள் எம்.பி அ.விநாயகமூர்த்தியின் கார்ச் சாரதி மனோரஞ்சன் சிறிபத்மநாதன் கடந்த 18ஆம் திகதி கொழும்பு மாஜிஸ்திரேட் சி.கருணாரத்னவால் கடுமையாக எச்சரித்து விடுதலை செய்யப்பட்டார். நீதிமன்றத்துக்கு அருகே காரை நிறுத்திவிட்டு, தன்னியக்க அபாய ஒலியெழுப்பும் கருவியை இயக்க நிலையில் வைத்துவிட்டுச் சாரதி எங்கோ சென்றுவிட்டார். சட்டத்தரணியான விநாயகமூர்த்தி தனது கறுத்தக் கோட்டை எடுப்பதற்கு காரை நெருங்கியபோது அபாய ஒலி எழுப்பப்பட்டதால் நீதிமன்ற நடவடிக்கைகள் சிறிது நேரம் பாதிக்கப்பட்டன. இதனையடுத்துப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட சாரதி எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டார்.

## வெளிச்சமில்லையா? வேட்டு விழும்

கிழக்கு மாகாணத்தில் உள்ள இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதிகளில் இரவு 10 மணிக்குப் பின்னர் 'டோர்ச் லைட்' வெளிச்சமின்றி வெளியில் நடமாடும் எவரும் கருணா அணி விசுவாசிகள் என்ற சந்தேகத்தின் பேரில் சுட்டுத்தள்ளப்படுவார்கள் என்று பிரபாவின் புலித் தலைமை எச்சரிக்கை விடுத்துள்ளது. அண்மைக் காலங்களில் கருணா அணியினர் நடத்திய திடீர்த் தாக்குதல்களால் தடுமாறிப்போயுள்ள நிலையிலேயே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. திருமலையிலுள்ள இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் இரவு 9 மணிக்குப் பின்னர் வெளிச்சமின்றி நடமாடக் கூடாதென்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே கிழக்கிலுள்ள தமது சோதனைச் சாவடிகளில் புலிகள் கூடுதலாகத் தமது அணியினரை நிறுத்தியுள்ளதாகவும் தெரிகிறது. அந்நியர்கள் பற்றியோ சந்தேகத்திற்கிடமாக நடமாடுவோர் பற்றியோ தெரியவரும் பட்சத்தில் தமக்கு அறிவிக்குமாறும் புலிகள் கேட்டுள்ளனர்.

## மேலும் 5,000 அகதிகள் நாடு திரும்புவர்

தமிழகத்திலுள்ள நூற்றுக்கு மேற்பட்ட நலன்புரி முகாம்களில் அறுபதாயிரத்துக்கு மேற்பட்ட இலங்கைத் தமிழ் அகதிகள் இன்னமும் தங்கியிருக்கின்றனர். கிட்டத்தட்ட பதினொராயிரம் அகதிகள் படகுப் பயணம் போன்ற சட்டவிரோத வழிமுறைகளைப் பாவித்து இலங்கை திரும்பியுள்ளனர். சுமார் பத்தாயிரம் பேர் சட்டரீதியாக நாடு திரும்பியுள்ளனரென்று நிவாரண, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் ஏ.எஸ்.குணசிங்கம் தெரிவித்தார். கடந்த வருடம் அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஸ்தானிகராலயத்தின் அனுசரணையுடன் சுமார் 3,500 பேர் இலங்கை திரும்பியுள்ளனர். மேலும் ஐயாயிரம் பேரை இவ்வருட முடிவுக்குள் சட்டரீதியாக அழைத்து வருவதற்கான திட்டங்கள் உள்ளதாகவும் அவர் சொன்னார்.

## ஜெயலலிதா அறிக்கை

புலிகளின் அண்மைக்கால நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையொன்றைத் தமிழக முதல்வர் ஜெயலலிதா அண்மையில் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் கையளித்தார். இந்திய மாநிலங்களின் முதலமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொள்வதற்காகப் புதுடில்லி சென்றிருந்த வேளையிலேயே ஜெயலலிதா இந்த அறிக்கையைச் சமர்ப்பித்தார். அத்துடன் இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் விரைவில் நிறைவேற்றப்பட வேண்டுமெனவும் அவர் வற்புறுத்தியுள்ளார்.

## நூரளையில் ஆன்மீக முகாம்

இந்து சமய அலுவல்கள் அமைச்சு, மற்றும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் என்பவற்றின் அனுசரணையோடு விஷ்வ ஹிந்துப் பரிஷத்தின் இலங்கைக் கிளை ஏற்பாடு செய்த இந்து இளைஞர்களுக்கான ஆன்மீக முகாம் கடந்த 15ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை நுவரெலியா, கெல்பொட தமிழ் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இப்பயிற்சி நெறி இந்துசமய அடிப்படைத் தத்துவங்களை விளக்குவதாகவும், இளைஞர்களை ஆன்மீக எழுச்சியில் தூண்டுவதாகவும், மன பலத்தையும், உடல் பலத்தையும் வளர்ப்பதாகவும் அமைந்தமை குறிப்பிடத் தக்கது.

## இராணுவத்தை ஆத்திரமூட்டுவதற்கு தொடர்ந்தும் துப்பாக்கி வேட்டுகள்

"திருமலை, சேருவிலவிலுள்ள மஹிந்தபுர இராணுவ முகாமுக்கு மேலாகத் தொடர்ந்தும் புலிகள் அவ்வப்போது வேட்டுக்களைத் தீர்த்து வருகின்றனர். இராணுவத்தினரை ஆத்திரமூட்டுவதற்காகவே யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மீறும் விதத்தில் இவ்வாறு துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்படுகிறது. மஹிந்தபுர இராணுவ முகாமுக்கு அப்பாலுள்ள புலிகளின் சோதனைச் சாவடியிலிருந்தே வேட்டுகள் தீர்க்கப்படுகின்றன" என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயா இரத்நாயக்கா தெரிவித்தார். சில தினங்களுக்கு முன்னர் இந்த இராணுவ முகாமுக்கு அப்பாலுள்ள புலிகளின் சோதனைச் சாவடி மீது கருணா அணியினர் தாக்குதல் நடத்தியிருந்தனர். இதனால் எம்மை ஆத்திரமூட்டுவதற்காக புலிகள் இவ்வாறான அத்துமீறல் சம்பவங்களில் ஈடுபடுகின்றனரென்றும் அவர் சொன்னார். சில தினங்களுக்கு முன்னரும் புலிகள் மஹிந்தபுர முகாம் மீது தாக்குதல் நடத்தியபோது சில சிப்பாய்கள் காயமுற்றனர். புலி உறுப்பினர்கள் பதினைந்து பேர் துப்பாக்கிப் பிரயோகங்களை மேற்கொள்கின்றனரென்றும் அவர் சொன்னார். தோப்பூரிலுள்ள இராணுவ முகாம் மீதும் புலிகள் தாக்குதல் நடத்தியமை குறிப்பிடத் தக்கதாகும்.

## பாலசிங்கத்தை 3 மணி நேரம் லண்டன் பொலிஸார் விசாரித்தனர்

புலிகள் இயக்கத்தின் பேச்சாளர் அன்ரன் பாலசிங்கம், தொடர்ந்து மூன்று மணித்தியாலங்களாக லண்டன் பொலிஸாரினால் விசாரிக்கப்பட்டார். பிரித்தானியப் பிரஜைகளான ராஜசிங்கம் ஜெயதேவன் மற்றும் ஏ.கே.விவேகானந்தன் ஆகிய இருவரையும், புலிகள் வன்னியில் சிறை வைத்தது பற்றி, பாலசிங்கம் மிகவும் நுணுக்கமான முறையில் விசாரிக்கப்பட்டார். ஜெயதேவன் 59 நாட்களும், விவேகானந்தன் 42 நாட்களும் புலிகளால் சிறைவைக்கப் பட்டிருந்தார்கள். இவ்விரு பிரித்தானியப் பிரஜைகளும் சிறைவைக்கப்பட்டமை குறித்து, பாலசிங்கம் அறிந்திருந்தாரா என்றும், மேலும் பல விடயங்கள் குறித்தும் பாலசிங்கம் பொலிஸாரினால் விசாரிக்கப்பட்டார் எனவும் தெரிவிக்கப் படுகிறது.

## மக்கள் சேவகன்

மக்களுக்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய மகோன்னத இளைஞர் தோழர் விஜேதாசன் விஜேந்திரன் என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி 'குஞ்சன்' என்றழைக்கப்படும் விஜேந்திரனின் மரணம் தொடர்பாக வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளது. மாற்றுக் கருத்துக்களை ஏற்றுக்கொள்ள முடியாத புலிகளின் வேட்டுகளுக்கு இலக்காகி அமரத்துவமடைந்த இவரின் நாமம் மக்கள் மத்தியில் நிலைத்து நிற்குமென்றும் அந்த அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. திருமலை, உட்துறைமுக வீதியில் கடந்த பதினொராம் திகதி அன்னார் சுட்டுக் கொல்லப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

## புலிகளின் சித்திரவதைகளைத் தடுத்து நிறுத்த உடனடி நடவடிக்கை வேண்டும் -சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் கமிட்டிக்கு ஜெயதேவன் கடிதம்

புலிகளின் மிலேச்சத்தனமான சித்திரவதைகளையும் பயமுறுத்தல்களையும் நிறுத்துவதற்கு ஜெனிவாவிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் கமிட்டி உடனடியாகவே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று புலிகளால் கடத்தப்பட்டு வன்னிக்கு அழைக்கப்பட்டு, இரு மாதங்களுக்கு மேலாகத் தடுத்து வைக்கப்பட்டுச் சித்திரவதை செய்யப்பட்ட ராஜசிங்கம் ஜெயதேவன் மேற்படி அமைப்புக்கு அனுப்பி வைத்த கடிதத்தில் கேட்டுள்ளார். 'புலிகளால் கைது செய்யப்பட்டேன்' என்ற தலைப்பில் கடந்த 18ஆம் திகதி அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தனக்கும் விவேகானந்தன் என்பவருக்கும் நேர்ந்த அனுபவங்களை விலாவாரியாக அவர் விளக்கியுள்ளார். "நான் வன்னியில் சிறைபிடிக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்தபோது, வன்னியில் புலிகளின் பொலிஸ் புலன்விசாரணை நிலையமொன்றினை அமைப்பதற்குச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் கமிட்டி அங்கீகாரம் வழங்கியதாகவும் தேவையான சகல தாரதம்மியங்களைக் கொண்டிருப்பதாலேயே அங்கீகாரம் வழங்கப்பட்டதாகவும் தமிழ் ஊடகங்கள் மூலம் அறிந்து கொண்டேன். மக்கள் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுச் சித்திரவதை செய்யப்படுகின்ற இவ்வாறான பல தடுப்புக் காவல் நிலையங்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருப்பதை நான் கவலையுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சில சந்தர்ப்பங்களில் மக்கள் காலவரையறையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவ்வாறான செயற்பாடுகளுக்குப் புலிகளே பொறுப்பாவர். புலிகளின் இந்த மனித உரிமை மீறல்களைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு போன்ற சர்வதேச தன்னார்வத் தொண்டர் நிறுவனங்களின் ஆதரவுடன் புலிகளின் இந்தத் தடுப்பு முகாம்களில் பரிசோதனை மேற்கொள்வதற்கு 'சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் கமிட்டி' வழிமுறையொன்றினை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்" என்று அவர் அக் கடிதத்தில் தெரிவித்துள்ளார். "நாங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த இடத்திலிருந்து கூப்பிடு தூரத்தில் செஞ்சிலுவைச் சங்க கமிட்டியின் காரியாலயம் ஒன்று இருந்தமை குறிப்பிடத் தக்கது. பல்வேறு இரகசிய முறைகள் ஊடாக இந்த அலுவலகத்தோடு தொடர்பு கொள்ள நாம் முயற்சியெடுத்த போதும் அங்கு நிலவிய சூழ்நிலைகளின் காரணத்தினால் அது வெற்றியளிக்க வில்லை. புலிகளின் கைதிகளாக இருப்பவர்களின் விபரங்கள் செஞ்சிலுவைச் சங்க கமிட்டிக்கு அறிவிக்கப்பட வேண்டும். எனது அனுபவமும் 'இவ்வாறு தடுத்து வைக்கப்படும் ஏனையவர்களின் துயரங்களும் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்" என்றும் அவர் அக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். "புலிகளின் முகவர் அமைப்பான 'சிவயோகம்' என்ற அறநிலைய அமைப்புக்கு இலண்டன் வெம்ப்ளியில் நிருவகித்து வரும் ஈழபதீஸ்வரர் ஆலயத்தைக் கையளிப்பதற்காக ஏன் நாம் சிறையில் வைக்கப்பட்டோம். இந்த ஆலயத்தின் நிருவாகப் பொறுப்பு புலிகளுக்குக் கைமாறியதும் என்னைக் கொல்வதற்காக அவர்கள் திட்டமிட்டிருந்ததும் எனக்குத் தெரியும். பாமபொன்றினை நான் தடுத்து வைக்கப்பட்டிருந்த அறைக்குள் வீசி என்னைக் கொல்வதற்கும் அவர்கள் திட்டமிட்டிருந்தனர். வன்னியில் எனக்கு நேர்ந்தவற்றை நான் மறந்து விட வேண்டும் என்பதற்காக என்னைப் பைத்தியக்காரனாக்க அவர்கள் திட்டமிட்டிருந்ததும் எனக்குத் தெரியும்" என்றும் அவர் அக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். கடிதத்தின் பிரதி சர்வதேச மன்னிப்புச் சபைக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

**தினமுரசு வாரமலர்,**
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# முரசம்

## பங்காளிகள் இல்லாத பார்வையாளர்களைப் பகிஷ்கரிப்போம்

**அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.**

மீலாதுன் நபி விழாவைக் கொண்டாடும் அனைத்து வாசகர்களுக்கும் எமது வாழ்த்துக்கள்.

சுனாமிப் பேரழிவுக்குப் பின்னரான மீள்கட்டுமாணப் பணிகளை ஆரம்பிப்பது தொடர்பாக ஏனைய சக்திகளை விடவும் ஒரு படி மேலாகவே 'முரசு' கருத்துக்களைத் தெரிவித்துள்ளது.

நிபந்தனைப் பிரியர்களான புலிகளின் வலுக்குமரப் போக்கும், வெளிநாட்டு நிதிகளுக்குள் விழுந்து துணிச்சலைத் தொலைத்துவிட்ட அரசும் நடத்தும் விவேகமற்ற முன்னெடுப்புக்கள், யுத்தத்தாலும் சுனாமியாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எவ்வித நலனையும் பெற்றுத்தரப் போவதில்லை. யுத்தத்தின் வடுக்களைச் சுமந்துகொண்டு, எப்படி மக்கள் ஏதிலிகளாக வாழ்க்கை நடத்தினார்களோ, அதுபோலவே சுனாமியின் வடுக்களையும் சுமந்துகொண்டு வாழ வேண்டிய கட்டாயத்தில் மக்கள் வாழ்கிறார்கள்.

சமரச முயற்சிக்கு மத்தியஸ்தம் வகித்துவந்த நோர்வே, இப்போது ஆகக் குறைந்தது பொதுக் கட்டமைப்புக்குக்கூட இணக்கம் காண முடியாதளவில் தன் கையாலாகாத்தனத்தால் கையைச் சுட்டுக்கொண்டு முழிக்கிறது.

பன்முகத்தன்மையற்ற ஜனநாயக மரபுகள் மறுக்கப்பட்ட அதிகாரத்தையே புலிகள் கோரி நிற்கின்றனர் என்பதும், இதை இலங்கை யாப்புகளுக்கு உட்பட்ட விதத்தில் நிறைவேற்ற முடியாமல் அரசு திணறுவதும் இன்று வெட்ட வெளிச்சம். இதை மூடி மறைத்து வெறும் நம்பிக்கைகளையும், விஜயங்களையும் செய்வதில் எவ்வித அர்த்தமுமில்லை. நோர்வே, சர்வதேச அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் அங்கமாக இலங்கை விவகாரத்தில் இல்லை. தொடரும் படுகொலைகள், சிறுவர் ஆட்சேர்ப்பு, அச்சுறுத்தலுக்கு மத்தியில் பொதுக் கட்டமைப்பைப் பற்றி பிதற்றிக்கொண்டிருக்கும் நோர்வே முதலில் புரிந்துணர்வு ஒப்பந்தம் உண்மையாகவும், நேர்மையாகவும் அமுல்படுத்தப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

பருவகால மாற்றங்களைப் போல் சமரசப் பேச்சுக்கான விஜயங்கள் என்றும், இடைக்கால சபை தொடர்பான இணக்கப்பாட்டுக்கான விஜயம் என்றும் பொதுக் கட்டமைப்புக்கான விஜயம் என்றும் ஆரம்பத்தில் இருந்த எதிர்பார்ப்புக்களை அழித்துவிட்டுள்ள இந்த வேண்டாத விஜயங்களைச் செய்வதில் எந்தப் பயனும் கிட்டப் போவதில்லை.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கம் தனது கடமையைச் செய்யாமல் தொட்டதுக்கெல்லாம் புலிகளைக் காரணம் காட்டிக்கொண்டு ஒதுங்குவதில் அர்த்தமில்லை. புலிகள் தமது முழு ஆளுமைக்குள் வராத எந்தவொரு செயலையும் எதிர்க்கவே செய்வார்கள். ஆனால், அரசுக்குத் தமது பிரஜைகளைப் பாதுகாக்கவேண்டிய பாரிய பொறுப்பு உள்ளது. அரசு துணிந்து மக்கள் பணிக்காகக் களமிறங்கினால் மக்கள் தமது பங்களிப்பை வழங்கக் காத்திருக்கிறார்கள். படுகொலைகளையும், அச்சுறுத்தல்களையும், சிறுவர் ஆட்சேர்ப்புக்களையும் ஓங்கிக் குரல் கொடுத்தோ, தமது ஆளுமையைப் பிரயோகித்தோ தடுக்கமுடியாத அல்லது புலிகளைக் கட்டுப்படுத்த முடியாத எந்தவொரு சர்வதேச சக்தியையும் உள்ளூர் சக்திகளையும் இறைமையுள்ள இலங்கை அரசும் மக்களும் மதிக்கத் தேவையில்லை. கஞ்சி குடித்தாலும் கௌரவமானவர்கள் இலங்கையர்கள் என்பதை சர்வதேச நாடுகளுக்குத் தெளிவுபடுத்துவது அவசியம். எரியும் எங்கள் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் திறன்மிக்க பங்காளிகளே தேவை, பார்வையாளர்களில்லை.

■■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

---

**எக்ஸ்ரே ரிப்போர்ட்**

**நரன்**

# உப்பாறுச் சம்பவம் உணர்த்தும் உண்மைகள்

திருமலை, உப்பாறுக் கடலில் சென்றுகொண்டிருந்த கடற்படையின் ரோந்துப் படகொன்றின்மீது கடந்த ஐந்தாம் திகதி புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான உப்பாறிலிருந்து நடத்தப்பட்ட தாக்குதல், மீண்டுமொரு யுத்தத்துக்கான முன்னோடி முயற்சியாவென்ற பீதியைச் சமாதான ஆர்வலர்கள் மத்தியில் ஏற்படுத்தியிருந்தது. ஏழு கடற்படை வீரர்களுடனும் நோர்வேயைச் சேர்ந்த யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு உறுப்பினரொருவருடனும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இந்தப் படகின் மீது காலை 9.25 மணியளவில் தாக்குதல் நடத்தப் பட்டதாகவும், சுமார் எழுபத்தைந்து முதல் நூறு தடவைகள் இயந்திரத் துப்பாக்கிகள் மூலம் வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதாகவும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயா இரத்நாயக்கா தெரிவித்திருந்தார். புலிகள் நடத்திய இத் தாக்குதலில் காயமுற்ற யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு உறுப்பினர் திருமலைக் கடற்படைத் தளத்திலுள்ள ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வெளியேறினாரென்றும் முதலில் வெளிவந்த செய்திகள் தெரிவித்தன. திருமலைக் கடற்கரையில் இருந்து பதினைந்து கிலோ மீற்றர்களுக்கு என்று பி.பி.சி. செய்தியாளர் பதில் கேள்வி எழுப்பியபோதுதான் முதலில் கடற்படையினர் சுட்டனரென்றும், பின்னரே புலிகள் திருப்பிச் சுட்டனர் என்றும் எழிலன் கதையளந்தார். மறுநாள் பி.பி.சி. தமிழ்ச் சேவைக்குப் பேட்டியளித்த யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பேச்சாளர் செல்வி ஹெலன் ஒலாப்ஸ்டொரிர் கடற்படையினர் தாக்குதல் நடத்தவில்லையென்று திட்டவட்டமாக அறிவித்ததோடு, புலிகள் தாக்குதல் நடத்தியதன் மூலம் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மீறியுள்ளனர் என்றும் குறிப்பிட்டார். இது குறித்து எழிலனிடம் சுட்டிக்காட்டி, பி.பி.சி. செய்தியாளர் கேள்வியெழுப்பியபோது, இரண்டு படகுகள் வந்திருக்கலாமென்றும் அதிலொரு படகில் இருந்து புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியை நோக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதாலேயே புலிகள் பதில் தாக்குதல் நடத்தினர் என்றும் கூறினார். ஆக, புலிகள் கடற்படைப் படகு மீது வேண்டுமென்றே தாக்குதல் நடத்தியுள்ளனர் என்பதை மறைக்க முடியாத எழிலன், ஏதோ சாக்குப்போக்குச் சொல்லி மழுப்ப முனைந்திருக்கிறார் என்பதே உண்மையாகும்.

முன்னரும் கூடப் புலிகளின் தாக்குதலுக்கு அப்பால் கடற்படைப் படகு சென்றுகொண்டிருந்தபோதே இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், அப்போது அக் கடற்படைப் படகில் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கொடி ஏற்றப்பட்டிருந்ததாகவும் பிரிகேடியர் இரத்நாயக்கா மேலும் தெரிவித்தார்.

இத் தாக்குதல் சம்பவம் பற்றி அன்றைய தினமே பி.பி.சி. தமிழ்ச் சேவைக்குப் பேட்டியளித்த புலிகளின் திருமலை அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன், புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்பதை ஏற்றுக்கொண்டார். ஆனால் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான உப்பாறுத் தரைப்பகுதியை நோக்கி



கடற்படைப் படகு முன்னேறி வந்ததாகவும், கடற்படைப் படகிலிருந்து வேட்டுக்கள் தீர்க்கப்பட்ட பின்னரே, புலிகள் கரைப் பகுதியில் இருந்து பதில் தாக்குதல் நடத்தினர் என்றும் அப் பேட்டியில் எழிலன் குறிப்பிட்டார். கடற் பகுதியில் புலிகளுக்குக் கட்டுப்பாட்டு வலயமில்லையே யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் ஆளாகியிருந்தும் சமாதானத்தின் பேரால் இவற்றை மூடி மறைக்க கண்காணிப்புக் குழு முயற்சி செய்துள்ளது. புலிகளைத் தாஜா பண்ணாவிட்டால், அவர்களைச் சமாதான மேசைக்குக் கூட்டிவர முடியாமல் போய்விடும் என்ற பயம் கண்காணிப்புக் குழுவுக்கு. வவுனியாவிலுள்ள புலிகளின் அரசியல் அலுவலகத்தில் புளொட் உறுப்பினர் ஒருவர் தடுத்து வைக்கப்பட்டுச் சித்திரவதைக்குள்ளாக்கப்படுகிறார் என்று கிடைத்த முறைப்பாட்டை விசாரிக்கச் சென்ற யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் இருவர், அரசியல் புலிகளால் (ஆயுதப் புலிகளாலல்ல) கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளப்பட்டனரென்ற தகவல் வெளியே வந்ததும், யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு மெல்லவும் முடியாமல் சொல்லவும் முடியாமல் மௌனம் காத்தமையும் இங்கு குறிப்பிடக் கூடியது. மற்றொரு சந்தர்ப்பத்தில் புலிகளின் படகொன்றுக்குள் சென்று சோதனையிட முயன்ற கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் இருவர் புலிகளின் தாக்குதலுக்குள்ளாகிக் காயமுற்றமையும் இங்கு சுட்டிக்காட்டப்படத் தக்கது.

**<u>உப்பாறுக் கடலில் தீர்க்கப்பட்ட வேட்டுகளின் அதிர்வலைகள் தணிந்துவிட்டன. உப்பாறு விவகாரம் நெருப்பாறாகப் பாய்வதற்கான ஆரம்ப வேட்டுகளா என்ற பீதியும் ஓய்ந்து விட்டது. திருமலை மீண்டும் எரிமலையாக வெடிக்குமாவெனப் பயந்து கொண்டிருந்தவர்களெல்லாம் விடும் நிம்மதிப் பெருமூச்சு காதுகளில் விழத்தான் செய்கிறது. ஆனாலும் சமாதான மேசையையே ஏக்கப் பெருமூச்சோடு வைத்தகண் வாங்காமல் பேந்தப் பேந்தப் பார்த்துக்கொண்டிருக்கும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும், அரசாங்கமும் இன்னும் எத்தனை நாளைக்குத்தான் புலிகளின் அத்து மீறல்களைப் பொறுத்துக்கொண்டிருக்கப் போகிறார்கள் என்பது இன்றைய கேள்வியாகும்.</u>**

ஏற்கனவே மூன்று ஈழ யுத்தங்களை மூட்டிவிட்ட புலிகள், நான்காவது ஈழ யுத்தத்துக்குத் தயாராவதற்கான ஓர் அச்சவாரச் சம்பவமே உப்பாறுத் தாக்குதலென்ற பயப்பிராந்தி சில மட்டங்களில் எழுந்தது உண்மைதான். முன்னைய மூன்று ஈழ யுத்தங்களும் கிழக்கில்தான் வெடித்தன. திருமலைக் கடலில் தரித்து நின்ற கடற்படைக் கப்பல் ஒன்றின் மீது புலிகள் தாக்குதல் நடத்தி, ஓர் ஈழ யுத்தத்தை ஆரம்பித்து வைத்தனரென்பதும் தற்போது கிழக்குப் பகுதியை மீண்டுமொரு கொலைக் களமாக அவர்கள் ஆக்கிவைத்திருப்பதும் இங்கு கவனிக்கக் கூடியது.

உப்பாறுக் கடலில் தீர்க்கப்பட்ட வேட்டுகளின் அதிர்வலைகள் தணிந்துவிட்டன. உப்பாறு விவகாரம் நெருப்பாறாகப் பாய்வதற்கான ஆரம்ப வேட்டுக்களா என்ற பீதியும் ஓய்ந்து விட்டது. திருமலை மீண்டும் எரிமலையாக வெடிக்குமாவெனப் பயந்து கொண்டிருந் தவர்களெல்லாம் விடும் நிம்மதிப் பெருமூச்சு காதுகளில் விழத்தான் செய்கிறது. ஆனாலும் சமாதான மேசையையே ஏக்கப் பெருமூச்சோடு வைத்தகண் வாங்காமல் பேந்தப் பேந்தப் பார்த்துக்கொண்டிருக்கும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும், அரசாங்கமும் இன்னும் எத்தனை நாளைக்குத்தான் புலிகளின் அத்து மீறல்களைப் பொறுத்துக்கொண்டிருக்கப் போகிறார்கள் என்பது இன்றைய கேள்வியாகும்.

அரசாங்கமும், புலிகளும், யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் நடத்தி வரும் இந்தச் சமாதான விளையாட்டைப் பார்க்கும்போது எனக்கு வாழைச்சேனையிலுள்ள சிறிய கலவன் பாடசாலையொன்றில் பாலர் வகுப்புப் படித்த ஞாபகம்தான் மனதில் வருகிறது. முப்பது முப்பத்தைந்து வருட காலத்துக்கு முந்தைய சம்பவம் இது. நான் படு சுட்டி. பள்ளிக்கூடம் போவதென்றால் வேப்பங்காய் விவகாரம் தான். அப்பாவை ஐயாவென்று அழைப்பது தான் எனது குடும்பத்து வழக்கம். ஐயா வாழைச்சேனை காகிதத் தொழிற்சாலையில் வேலை செய்து வந்தார். சைக்கிளில் என்னை ஏற்றிச்சென்று பள்ளிக்கூடத்தில் விட்டுவிட்டு ஐயா தொழிற்சாலைக்குச் செல்லவேண்டும். நான் பள்ளிக்கூடம் போகமாட்டேன் என்று அடம் பிடிப்பேன். என்னைக் குளிப்பாட்டி வெளிக்கிடப் பண்ணுவதில் அம்மா படும் பாடு சொல்லி மாளாது. என்னை 'ராசாவெல்லே, பிள்ளைக்கு ஐயா இண்டைக்கு கலர் கலரா இனிப்பு வாங்கித் தருவார். கெதியா வெளிக்கிட்டுப் பள்ளிக்கூடம் போ ராசா' என்பார் அம்மா. எனக்கு மனசெல்லாம் கலர் கலரா இனிப்புகள் பளிச்சிடும். அப்பா சைக்கிளில் ஏற்றிக்கொண்டு பள்ளிக்கூடம் கொண்டுபோகும்போது நான் கேட்பதையெல்லாம் கடையில் வாங்கித் தருவார். வாங்கித் தராவிட்டால் பள்ளிக்கூடம் போகமாட்டேன். முருகேசு வாத்தியாரிட்டையும் ஐயா சொல்லி வைத்திருந்தார். 'பெடியனுக்கு அடிச்சுப்போடாதையுங்கோ. பிறகு அவன் பள்ளிக்கூடம் வர மாட்டான்' என்று. வாத்தியார் அடிக்கமாட்டார். பிறகென்ன அப்படியே காலம் கழிந்ததுதான் மிச்சம்.

வேண்டுமானால் நீங்கள் அம்மாவை ஜனாதிபதிக்கும், ஐயாவை அரசாங்கத்துக்கும், யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவை முருகேசு வாத்தியாருக்கும், என்னைப் புலிகளுக்கும், கலர் கலரான இனிப்புகளை புலிகள் அவ்வப்போது முன்வைக்கும் கோரிக்கைகளுக்கும், பள்ளிக்கூடத்தைச் சமாதான மேசைக்கும் உவமானப்படுத்திப் பாருங்கள். சமாதானத்துக்காக இன்று நடைபெறும் 'கிளித்தட்டு' விளையாட்டை உங்களால் புரிந்துகொள்ள முடியும்.

சமாதான மேசைக்குப் புலிகளை மீளக் கூட்டிவர வேண்டும் என்பதற்காக அரசாங்கமும் சரி, யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் சரி, புலிகளைக் காரசாரமாகக் கண்டிக்கப் போவதுமில்லை. தட்டிக்கேட்கப் போவதுமில்லை. 'ஆமாம் சாமி' என்று சொல்லிக்கொண்டே இருப்பார்கள் போலத்தான் தோன்றுகின்றது. அரசாங்கத்தைப் பொறுத்தவரை டோக்கியோ மாநாட்டில் உறுதியளிக்கப்பட்ட 4,500 கோடிரூபா தலைக்கு மேலால் தொங்கிக் கொண்டிருக்கிறது. போதாக்குறைக்கு 'சுனாமி' மனிதாபிமான நிதி பற்றிய உறுதிமொழிகளும் 'பாச்சா' காட்டிக் கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் புலிகள் என்ன செய்யப் போகிறார்கள் என்பதே இன்றைய முக்கிய கேள்வியாகும். 'தட்டிக் கேட்க ஆளில்லையென்றால் தம்பி சண்டப் பிரசண்டம்' என்பது போலத் 'தம்பி'யின் புலிகள் தட்டிக் கேட்க யாருமில்லாத நிலையில் மாற்றுத் தமிழ்த் தரப்புகளின் உறுப்பினர்களைத் 'தட்டிக் கொண்டே' வருகிறார்கள். கருணா அணியா, புளொட்டா, ஈ.பி.டி.பி.யா - வகை தொகையின்றித் தட்டிக் கொண்டே போகிறார்கள்.

புலிகள் சமாதான மேசைக்கு வரப்போவதில்லை. வந்தாலும் கலர் கலரான இனிப்புகள் கேட்டுக்கொண்டே இருப்பார்கள். அவர்களால் உடனடியாக யுத்தத்துக்கும் போக முடியாது. கருணாவென்ற 'கண்ணிவெடி' கிழக்கில் அவர்களை அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது. 'கருணாவின் பிரிவு' அவர்களைத் தற்காப்பு நிலைக்குத் தள்ளியிருக்கிறது. இந்தப் பலவீனங்களுக்கு மத்தியில் சர்வதேச அழுத்தமும் இந்தியாவின் 'நெற்றிக் கண்' பார்வையும் அவர்களை அச்சுறுத்திக் கொண்டே இருக்கின்றன. எனவே தாங்களும் சக்தியோடு இருக்கிறோம் என்பதைக் காட்டிக் கொள்வதற்காக உப்பாறுச் சம்பவம் போன்ற சில்லறைத்தனமான விடயங்களிலும் அவர்கள் ஈடுபடுவார்கள். இப்போதைக்கு இவை எரிமலையாகாது. உப்பாறும் நெருப்பாறாகாது.

ஆனால் இவ்வாறான புலிகளின் 'விளையாட்டுக்கள்' அவ்வப்போது இடம் பெறவே செய்யும்.

# சமஷ்டியும் சர்வஜன வாக்கெடுப்பும்

பேரினவாத சிங்கள அரசுகள் சிறுபான்மை இனத்தவரான தமிழர்களுக்கு அநீதி இழைத்ததும் அதற்கு எதிராகப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதும் போராட்டத்தின் ஆரம்பகாலத் தேவையாக இருந்தது. பின்னர் போராட்டம் உத்வேகம் பெற்று இளைஞர், யுவதிகளின் பாரிய பங்களிப்பினாலும், பொதுமக்களின் உந்துதலாலும் தனிநாடுதான் தமிழருக்கான தீர்வு என்ற நிலை வலுப்பெற்றது. உரிமைக்கானதும், தனி நாட்டுக்கானதுமான போராட்டங்கள் நியாயமானதாகவும், காலத்தின் கட்டாயமாகவும் அனைத்துத் தமிழ் மக்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.



1987ஆம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் வரை இந்தப்போக்கு சரியெனச் சொல்ல முடியும். இதற்குப் பின்னர் போராட்டம் பல மாற்றங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அதுவரையான ஆயுதம் ஏந்திய போராட்டமும் ஒரு மாற்றத்தை வேண்டி நின்றது.

வடக்கு, கிழக்கு உத்தியோகப் பூர்வமாக இணைக்கப்பட்டது. அதன் மாகாண சபைக்கான தேர்தல் நடத்தப்பட்டது. புலிகள் தவிர்ந்த ஏனைய இயக்கங்களும் ஜனநாயக வழியில் அந்த மாகாணசபை நிர்வாகத்தில் பங்கு கொள்வதற்காகக் களமிறங்கின. இவை எல்லாவற்றையும் பின்னாலிருந்து ஊக்குவிக்கும் சக்தியாகவிருந்த இந்தியா, தமிழ் மக்களுக்குப் பாதுகாவலாக இருந்தது. இந்தியாவின் நெருக்கடிமிக்க தலையீடும், தமிழ் இயக்கங்களின் வளர்ச்சிப்போக்கும், 1983 ஜூலைக் கலவரத்தால் சர்வதேச அரங்கில் இலங்கைக்கு ஏற்பட்ட தலைகுனிவும் இந்தக் காலகட்டத்தில் தமிழர்களின் போராட்ட வடிவத்துக்கு ஒரு நியாயத்தை ஏற்படுத்தின. இவ்வகையான சாதகமான அம்சங்களுக்கூடாக ஒரு தீர்வைக்காண புலிகள் பின் வாங்கினார்கள். மத்திய அரசின் கீழான மாகாண சபை அல்லது வடக்கு கிழக்குக்கு ஒரு நிர்வாக அலகு என்பதை நிராகரித்தார்கள். தனிநாடே தமிழர்களுக்கான தீர்வு என்று மீண்டும் ஆயுதவழிப் போராட்டத்தை முன்னெடுத்தார்கள். ஜனநாயக நீரோட்டத்தில் பங்குகொண்ட சகோதர இயக்கங்களை வேட்டையாடினார்கள். இந்திய இராணுவத்தை வெளியேறுமாறும், தமது பிரச்சினையை தாம் சிங்கள அரசுகளுடன் பேசித் தீர்வு காண முடியும் என்றும் கூறி இந்திய அரசாங்கத்தைத் தலைகுனிய வைத்தார்கள். அதன் உச்சக்கட்டமாக இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியை தற்கொலைக் குண்டுதாரியை அனுப்பிப் படுகொலை செய்தார்கள்.

புலிகளின் இந்த இரத்த வெறியாட்டத்துக்கு என்ன காரணம் என்று ஆராய்ந்தபோது அதிர்ச்சியான தகவல்கள் வெளியாகின. வடக்கு, கிழக்குக்காக நிறுவப்படும், எந்தவொரு தீர்வு முயற்சியிலும் அது தனிநாடாக இருந்தாலும் அல்லது ஆகக் குறைந்த அலகு முறையாக இருந்தாலும், அது புலிகளின் ஏகபோகத் தலைமையின் கீழ் - புலிகளின் கட்டுப்பாட்டுக்குக் கீழ் - இருப்பதாக அமைய வேண்டும். அதுவுமல்லாமல் பல கட்சிகளின் பங்கெடுப்பு, அதில் புலிகளும் உள்ளடக்கம் என்பதோ, பன்முகத்தன்மை, ஜனநாயகம் அதாவது புலிகளின் ஆளுமைக் குறைபாடுகளை விமர்சிப்பது போன்ற எந்தவொரு பிற சக்தி தலையீடோ இருக்கக் கூடாதென்ற புலிகளின் போக்கேயாகும். இதன் உண்மையை பதினெட்டு ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் இன்றைக்குப் புலிகள் ஆகக் கடைசியாகக் கேட்டு நிற்கும்

> ராஜீவ் காந்தியின் படுகொலைக்குப் பிறகு இலங்கையில் ஆயுதமேந்திப் போராடிய விடுதலை வீரர்களைப் பயங்கரவாதிகளாகச் சர்வதேச சமூகம் பார்க்கத் தொடங்கியது. இந்த நிலைப்பாட்டை உறுதிப்படுத்துவதாகவே புலிகளின் பாசிஸ நடவடிக்கைகள் இடம்பெற்றன.

பொதுக்கட்டமைப்பு வரை காணமுடியும்.

ராஜீவ் காந்தியின் படுகொலைக்குப் பிறகு இலங்கையில் ஆயுதமேந்திப் போராடிய வீடுதலை வீரர்களைப் பயங்கரவாதிகளாகச் சர்வதேச சமூகம் பார்க்கத் தொடங்கியது. இந்த நிலைப்பாட்டை உறுதிப்படுத்துவதாகவே புலிகளின் பாசிஸ நடவடிக்கைகள் இடம்பெற்றன. மூர்க்கத்தனமாக முன்னெடுக்கப்பட்ட ஆயுதவழிப் போர் பேரினவாதத்துக்கு எதிராகவும், சகோதர முஸ்லிம் சமூகத்திற்கு எதிராகவும், சொந்தத் தமிழ் இனத்துக்கு எதிராகவும் நடத்தப்பட்டதுதான் வேடிக்கை. தனி நாட்டுக்கான போராட்டம் தனிக் காட்டுக்கான போராட்டமாக நடத்தப்பட்டபோது மக்கள் போராட்டத்தைக் கண்டு அஞ்சினார்கள். அதிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள எந்தப் பேரினவாதத்துக்கு எதிராகப் போராடச் சொன்னார்களோ, அதே பேரினவாதத்திடம் பாதுகாப்புக் கோரினார்கள். வட, கிழக்கை விட்டு தமிழ் மக்கள் வெளியேறினார்கள். இது புலிகளைத் தனிமைப்படுத்தியதால், ஒரு பகுதி மக்களை புலிகள் சுற்றிவளைத்தார்கள். தமது பிடிக்குள் அகப்படாத தமிழ் மக்களை துரோகிகளாகப் புலிகள் சுட்டிக்காட்டினார்கள். இதில் வெளிநாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களும் அடங்குவர். போராட்டம் சூறாவளியைப் போல் மையம் கொண்ட இடத்தை விட்டுத் தாறுமாறாக வட - கிழக்கை அழித்தது. இப்போது தமிழ் மக்களைப் பொறுத்தவரை "பிச்சை வேண்டாம் நாயைப் பிடி" என்பது போல "தனிநாடும் வேண்டாம் கூட்டு நாடும் வேண்டாம்; மனுசனை நிம்மதியாக இருக்கவிட்டால் போதும்" என்ற இறுதிக்கட்ட நிலையில் தள்ளப்பட்டுள்ளனர்.


சர்வதேச அரங்கில் பயங்கரவாதத்துக்கு எதிராக எடுக்கப்பட்ட கடுமையான நடவடிக்கையும், மக்களுக்கும் போராட்டத்துக்கும் இடையில் ஏற்பட்ட இடைவெளியும் சகோதர அமைப்புகளை அழித்ததால் எஞ்சியவர்கள் ஜனநாயக கருத்துக்களை முதன்மைப்படுத்தியதும், தனித்துவிட்ட மன நிலையும் புலிகளை போர் ஓய்வுக்கான தேவைக்குத் தள்ளின. காகம் இருக்கப் பனம் பழம் விழுந்தது போல் அப்போது ஏற்பட்டதே இந்தப் போர் நிறுத்த ஒப்பந்தம்.

இந்தப் போர் நிறுத்த ஒப்பந்தம் தொடர்பான பேச்சுக்கள் எழுந்தபோது மீண்டும் ஒரு எதிர்பார்ப்பு புலிகளின் தலைவரும் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஒன்றாகத் தோன்றி ஆச்சரியப்பட வைக்கப்போகிறார்கள் என்று. அதுவும் நடக்கவில்லை. ஒரு விவாகரத்துக்கூட இருவர் முன்னிலையிலேயே நடைபெறும். ஆனால் தற்போதிருக்கும் ஒப்பந்தமோ தனித்தனியாக நடைபெற்றது. இந்த நேர்மையற்ற தனமே பல சந்தேகங்களை எழுப்பியது. பின்னர் அது நிஜமானது. புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு அரச தரப்போ, வேறு யாருமோ செல்லமுடியாது. ஆனால் புலிகள் நாட்டின் எந்தப் பகுதிக்கும் போகலாம். மாற்று இயக்கம் மீது புலிகள் படுகொலை செய்யலாம். அவ்வளவு ஏன்? தற்கொலைத் தாக்குதலையே நடத்தலாம். தேவைப்பட்டால் அரச ஊழியர்களைக்கூட கொலை செய்யலாம் என்றளவில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்தானது.

கட்டம் கட்டமாகப் புலிகள் பேச்சுக்கான பேச்சு நடத்தினார்கள். அதை சமாதானத்துக்கான பேச்சுவார்த்தையாகவே அரசும் - புலிகளும் - ஊடகங்களும் வெளிக்காட்டின. பின்னர் இன்னொரு யுத்தம் இடம்பெறாது என்ற எந்த உத்தரவாதமும் இல்லாமலே, இடைக்கால நிர்வாக சபையைத் தமக்கு வழங்கவேண்டுமென புலிகள் ஒரு வரைபை முன்வைத்துள்ளனர். இதைக்கூட வழங்க முடியாத இலங்கையின் அரசியல் யாப்பு மாற்றப்பட வேண்டியதாகும் என்பதை எவரும் அப்போது கவனத்தில் எடுக்கவில்லை.

இந்தச் சிக்கல்கள் நிறைந்த காலப்பகுதியில்தான் ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் அரசியல் வாழ்வு இறுதிக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது. தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஆகக் கூடிய வழிமுறை அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பதாகும் என்ற யதார்த்தத்தை இன்று தென் இலங்கை சிங்களத் தலைமைகளும், சர்வதேச சமூகமும் ஏற்றுக்கொண்டுள்ளன. இதைச் செய்வதற்கும், ஜனாதிபதி முறையில் மாற்றம் ஒன்றைச் செய்வதற்கும் ஒரே வழி இலங்கையின் அரசியல் யாப்பில் தேவையான மாற்றங்களைச் செய்வதேயாகும் என்று உணரப்பட்டுள்ளது. அரசியல் அமைப்பு மாற்றம் ஜனாதிபதிக்கு தற்போது இன்றியமையாத ஒன்றாக இருப்பதால், சமஷ்டி தொடர்பாகவும் அரசியல் அமைப்பு மாற்றம் தொடர்பாகவும் சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்த அவர் திட்டமிட்டுள்ளார். தென் இலங்கை சிங்கள அரசியலில் இதுவரை எவரும் முன்வைக்காத சமஷ்டி முறையானது தமிழ் மக்களுக்கு நல்ல சந்தர்ப்பமாகவே கருதப்படுகிறது. இப்படி ஒரு தீர்வை முன்வைக்கும் முதல் அதிகாரத்திலுள்ளவர் என்ற பெருமை ஜனாதிபதி சந்திரிகாவையே சாரும்.

சமஷ்டி முறை மூலம் இலங்கை இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முயற்சிக்கு சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் என இலங்கைவாழ் மக்கள் அனைவரும் தமது ஆதரவைத் தெரிவிப்பது அவசியமாகும். இதன் மூலம் மத்தியிலிருக்கும் அதிகாரங்கள் மாநில, மாகாண அளவில் பகிரப்படுவதோடு அந்தந்த மாநில, மாகாண நிர்வாகங்கள் தமக்குரிய சுய தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளும் வாய்ப்பும் உருவாகும். இதை விட, உலகப் போக்கில் இலங்கையை இரண்டாகப் பிரித்து தனி நாடு பெறுவது சாத்தியப்படாதது மட்டுமல்ல, சர்வதேச அங்கீகாரத்தையும் பெறமுடியாது என்பதையே இரு தசாப்தங்களுக்கு மேலாக நடத்தப்பட்ட போராட்டம் தெளிவுபடுத்துகிறது.



அலசுவது

**- மதியூகி -**

அரசியல் அமைப்பு மாற்றத்தின் ஊடாக தமிழர்களின் தீர்வானது மத்திய அரசில் பங்குகொள்ளும் அதே வேளை இணைந்த வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தனியான நிர்வாக முறைமையைக் கொண்டதாக அமைய வேண்டும். இந்த முயற்சியையும் புலிகள் எதிர்க்கவே செய்வார்கள். ஏனெனில் இந்த நிர்வாக அலகை தனியே தம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என எதிர்பார்ப்பார்கள். அவ்வாறில்லாது பல கட்சிகள் பங்குகொள்ளும் நிர்வாக அமைப்பாக அது அமையுமானால் மீண்டும் ஒரு போர் என்பது சர்வ நிச்சயமாகும். புலிகள் எங்கு முட்டினாலும் போர் என்பார்கள். ஆனால், கௌரவமான தீர்வொன்றை எதிர்கொண்டிருக்கும் தமிழ் மக்களும், சகோதர முஸ்லிம்களும் இந்தச் சந்தர்ப்பத்தில் என்ன முடிவுக்குத் தமது ஆதரவை வெளிப்படுத்தப்போகிறார்கள் என்பதே சமாதானத்துக்காகக் குரல் கொடுப்பவர்களின் எதிர்பார்ப்பாகும். ◎

## அதிரடி அய்யாத்துரை



**புலம் பெயர்ந்து** இருந்த பெடியள் ரெண்டுபேர் கிளிநொச்சிக்குப் போயிருக்கினம். புலம் பெயர்ந்த நாட்டில குளிருக்குத் தண்ணி வாத்தவைக்கு கிளிநொச்சியிலும் தண்ணி தேவைப்பட்டது. சேரன் எண்டும் பாண்டியன் எண்டும் பெயரில ரெண்டெழுத்தார் நடத்திற ரெஸ்டூரண்டுக்கும், தண்ணீர்த்தாகம் தீர்க்கும் கடைகளுக்கும் போன பெடியள் மலைச்சுப் போயிட்டினமாம்.

அந்தத் தாகம் தீர்க்கும் கடைகளில யுவதிகள்தானாம் வாத்துக் கொடுக்கினாம், கவனிக்கினமாம். என்னடாப்பா இது பொரினில மாதிரி பெட்டையள் பரிமாறினம் எண்டு பேசிக்கொண்டவை பக்கத்தில இருந்தவரிட்டை கேட்கவும், அவர் சொன்னாராம் கொஞ்சம் விலை உயர்ந்த தாகத் தண்ணிதான் இங்க கிடைக்கும். லோக்கல் சரக்கெண்டால் எதிர்த்தாப்போல இருக்கிற கண்ணாடி பாருக்குப் போங்கோ எண்டாராம். அங்கதான் கீழ் மட்ட சரக்கு இருக்கு தெண்டாராம். பாத்தியலோ தமிழர் கலாசாரம் என்ன ரேஞ்சில கட்டியெழுப்பப்படுகுதெண்டு.... தாகம் தாகம் எண்டினமே ஒருவேளை இதைத் தானோ.....

**இறுதித் தீர்வெண்டாலும்,** பொதுக் கட்டமைப்பெண்டாலும் பொறுத்தமான நேரத்தில உங்கட கருத்துக்களையும் உள் வாங்க அதிகாரத் தரப்பும் ரெண்டெழுத்தாரும் ஓம்பட்டிருக்கினம் எண்டு எரிக்கானவர் ஏகத்துக்கு எடுத்துவிட்டிருக்கிறார்..... இவைக்கு விருப்பம் எண்டால் ஏன் அவை முழுசிக்கொண்டு இருக்கினம்? சொல்லியிருக்கலாம் தானே. இவர் நோர்வேயிலிருந்து வந்துதான் சொல்ல வேணுமோ எண்டு சந்தேகமாகக் கேட்டவருக்கு மற்றவர் சொன்ன பதில் என்னெண்டு தெரியுமே...... அதிகாரத் தரப்பாரும், ரெண்டெழுத்தாரும் கட்டமைப்புக்கு வராமல் குடும்பிச்சண்டை பிடிக்கினமெல்லோ அவையை ஒரு வழிக்குக் கொண்டு வரும் வரைக்கும் இவையின்ர தரப்பு வாயை அடைக்கத்தானாம் வெள்ளைக்காரர் வியூகம் அமைக்கிறாராம். சனத்துக்கு பூ சுத்தப் பாக்கிறார் எண்டினம். மெத்தப்படிச்ச தனத்தை எப்படியெல்லாம் பாவிக்கிறார் எண்டு சனம் கேக்குதுகள்.

**லண்டனில** கோயில் வச்சிருந்தவரை வன்னிக்குக் கூப்பிட்டு வலுக்கட்டாயமா எழுதி வாங்கின விவகாரத்தில பாவம் ப்ரஸர் சிங்கத்தை இடுக்குப்பிடி பிடிச்சிட்டினமாம். ஜெயமான தேவனையும், விவேகமான காந்தனையும் விடுவிக்காட்டில் ப்ரஸர் எண்டும் பார்க்காமல் தூக்கி உள்ள போட்டு உதைக்க வேண்டிவரும் எண்டு மூண்டு மணி நேரமாக காச்சின காச்சிலதான் ஆள் தாடையை ஆட்டி ஆட்டி போனில மண்டாடினவராம். ஆலோசகர் எண்ட மிடுக்கில திரிஞ்ச மனுசன் நடந்த விசாரணைக்குப் பிறகு வெருண்டு போய் நிக்கிறாராம். ஆலோசகர் எண்ட பேரோடை ஓசில ஏசி வாங்கிக் கொண்டு இங்க வந்து பழைய கள்ளை குடிச்சுப்போட்டு புளிச்சல் கதை கதைக்கிற மாதிரியோ இதெண்டு புலம் பெயர்ந்துள்ள இளம் வட்டங்கள் பகிடியா சிரிக்கினமாம். அது மிஸ்டர் பிரபாகரன் சேயிங்க் .....ஹி.....ஹி......

**வீணைக்** கட்சியின்ர தலைவர் அதானுங்கோ வடக்கு அமைச்சர் பண்டத்தரிப்பு ஜெசிந்தா வித்தியாலய மாணவ மாணவிகளை கூட்டிக்கொண்டு பார்ளிமெண்டுக்குப் போனவராம். அதைப் பாத்த அறளை வேந்தனார் மீனைப் பூனை பார்க்குமாப் போல முழுசிப் பார்த்துக் கொண்டிருந்தாராம். சரி அவரும் ஒரு தமிழ் எம்.பி.தானே எண்டிட்டு வாங்கோ பிள்ளையளோடை வந்து கதைங்கோ எண்டு அமைச்சர் கூப்பிட்டாராம். அறளை வேந்தன் ஆடிப்போய் அது.....அது..... நான் வரமாட்டன் நீங்கள் இங்கால வந்தியள் எண்டால் பிரச்சினை தீந்துடும் எண்டு வார்த்தைகளாலேயே வள்ளம் விட்டிருக்கிறார்.

எட இருபத்திரெண்டு பேர் இருந்தும் இவர் இல்லாதபடியாத்தான் சமாதானம் வரயில்லையெண்ட கணக்கா தப்புக்கணக்கு பார்க்கிறாரே அறளை வேந்தன் எண்டு பிள்ளைகள் இவருக்கு அறளை பேந்துதான் இருக்கெண்டதை கொண்போர்ம் செய்து கொண்டிச்சினமாம்.

**அடுத்த** மாதத்திலிருந்து எரிபொருளுக்கான விலைகள் அதிகரிக்கலாமெண்டு சொல்லினம். மசகு எண்ணெயின்ர கேள்வி சர்வதேச சந்தையில அதிகரித்திருக்கிறதே அதுக்குக் காரணம் எண்டு அதிகாரத்தில இருக்கிறவையளும் சொல்லினம். அதிகாரத்தரப்பு இப்படிச் சொல்லுது. எதிர்த்தரப்பு என்ன சொல்லுது தெரியுமோ நாடு பூராவும் விதவிதமான போராட்டங்களாம்; நாடு பாதாளத்தை நோக்கிப் போகுதாம். இதுக்கு யார் பொறுப்பு எண்டு கேள்வி கேட்டு அவைக்கு பச்சை பூசிற 'சக்தி'யான தொலைக்காட்சியில விளம்பரம் போடினம். அப்பிடியெண்டால் இவை அதிகாரத்தில இருக்கேக்க நாட்டைச்சுத்தி பாலும் தேனுமோ ஓடிச்சுதாம்? அவனவன் வீட்டு வாசலில இருந்து கொண்டு மோண்டு மோண்டு குடிச்சுக்கொண்டே இருந்தவனாம்? இல்லையே. திரும்புற பக்கமெல்லாம் வேலை நிறுத்தமும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமும் நடந்தது சனத்துக்கு மறந்து போயிருக்குமெண்டு எவ்வளவு வசதியா மறந்திட்டினம். யார் அதிகாரத்துக்கு வந்தால் என்ன சம்பவங்களை சனம் மறந்திருப்பினம் எண்டு நினைக்கிற மொல்லை மாறித்தனத்தை கைவிடுங்கோ... அதிகாரத்தில இருந்தால் அடிச்சி முழக்கிறதும், அதிகாரம் பறிபோன பிறகு அடக்கி முழுசிறதும் வழமைதானுங்கோ.......

**அண்டை** நாட்டிலிருந்து போதைப் பொருள் கடத்திறதில பேர்போன அண்ணன் தம்பியல கேள்விப்பட்டிருப்பியள். அதில ஒருவரான கூத்தமைப்பு எம்.பி. அடைக்கலமானவரின்ர தலைக்கறுப்பை மாவட்டத்தில காணயில்லையெண்டு ஒரு கதை அடிபடுகுது. அவருக்கு நெருக்கமானவையள் சொல்லிச்சினம், கடலால வன்னிக்குப் போனவராம். திரும்பினதா தெரியல்லையெண்டு, ஒருவேளை ரெண்டெழுத்தார் ரிமாண்ட் பண்ணிட்டினமோ எண்டு சந்தேகிக்கினமாம். விசாரிச்சுப் பார்த்ததில அடைக்கலமானவர் தனியப் போகலையெண்டும் இன்னொரு கூத்தமைப்பு எம்.பி.யையும் கூட்டிக்கொண்டு, போன ஆறாம் திகதி போட்டில ஏறி இரணைமடுக்குள்ளால போனவர் எண்டும் தெரிய வந்தது. வழமையா பாதையால போறவர் கடலால ஏன் அழைக்கப்பட்டவர் எண்டதை கொஞ்சம் யோசிக்கத்தான் வேண்டிக்கிடக்கு. அப்படியொண்டும் இல்லையெண்டால் சும்மா சரி அடைக்கலத்தார் ஒரு அறிக்கை விடலாம்தானே எண்டு சனங்கள் கேக்குதுகள்.

# புலிகள் முஸ்லிம்களை ஏமாற்றுகிறார்களா?

## அபூஹனீபா பேட்டி

*ஜனாப் எஸ்.எச்.அபூஹனீபா தமிழர் உரிமைப் போராட்டத்தில் பங்குகொண்ட முஸ்லிம் பிரமுகர். கிழக்குத் தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் நன்கு பிரபலமானவர். ஏறாவூர் வர்த்தகர் சங்கத் தலைவர். ஏறாவூர் நகர சபையின் தவிசாளராகவும் இருந்தவர். புலிகளின் பிரமுகர் பாலகுமாரின் நீண்டகால நண்பர். கிழக்கிலே தமிழ் - முஸ்லிம் சமூக நல்லுறவுக்காக முன்னின்று உழைப்பவர். அவர் சமகால நிகழ்வுகள் சம்பந்தமாகவும் சமீபத்தில் புலி முக்கியஸ்தர்கள் பாலகுமார் மற்றும் தமிழ்ச்செல்வனுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டமை பற்றியும் கலந்துரையாடினோம்.*

**நேர்காணல் :- ஹுசைன் பின் ஹமீத்**

*சென்ற வாரத் தொடர்ச்சி....*

கருணாவின் பிளவு, அதனால் அந்த அமைப்புக்குள் ஏற்பட்ட பிளவுகள் பற்றி நாம் விமர்சிக்க வேண்டிய அவசியமில்லை.

புலிகள் தமது வரலாற்றுத் தவறை உணர்ந்தது போலவே ஏனைய தமிழ்க் குழுக்களும், தமிழ்த் தீவிர அரசியல்வாதிகளும் முஸ்லிம்களைப் பற்றி உணரத் தலைப்பட்டு விட்டனர்.

அன்று முஸ்லிம்களைப் பற்றி நினைத்துப் பார்க்காத சர்வதேச சமூகத் தலைவர்களும் இன்று முஸ்லிம்களைச் சந்திக்கிறார்கள். முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் நியாயமான பிரச்சினைகளைச் சர்வதேச சமூகம் உணர்ந்திருக்கிறது. இந்த அழுத்தங்கள், புலிகள் இப்போது முஸ்லிம்கள் மீது கரிசனை கொள்ளக் காலாய் அமைந்திருக்கக் கூடும்.

**கேள்வி:** முஸ்லிம்களை அரவணைத்துப் போவதாகப் புலிகள் கூறுவதை நம்பலாமா?

**பதில்** : நம்பலாமா, நம்பக் கூடாதா என்று பரீட்சித்துப் பார்க்க முடியாது. நம்பக் கூடிய மாதிரியான சில நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது.

**கேள்வி:** தமிழ் - முஸ்லிம் உறவு நீடித்து நிலைக்க வேண்டுமாக இருந்தால் புலிகள் என்ன செய்ய வேண்டும்?

**பதில்** : தமிழ் மக்கள் எவ்வாறு தமது அன்றாட நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார்களோ அதுபோன்று முஸ்லிம்களும் தமது தொழில்களைச் சுதந்திரமாகச் செய்யப் புலிகள் அனுமதிக்க வேண்டும்.

தமிழ்ப் பகுதிகளில் முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைப் புலிகள் நியாயமாகத் தீர்த்துவைக்க வேண்டும்.

போராட்டத்திற்கெதிரான செயற்பாடுகளில் சிலர் ஈடுபட்டார்கள் எனக் கூறி முஸ்லிம்களுக்குத் தீர்ப்பளிக்கப் புலிகள் முயற்சிக்கக் கூடாது. அது பற்றி முஸ்லிம் அமைப்புக்களுக்கும் பள்ளிவாசல்களுக்கும் அறிவிக்க வேண்டும். முஸ்லிம்கள் எந்தத் தரப்பினரதும் ஏஜெண்டுகளாகச் செயற்பட வேண்டிய அவசியமில்லை. அப்படி யாராவது செயற்பட்டதாக நிரூபிக்கப்பட்டால் திருத்திக் கொள்ளும்படி எச்சரிக்கலாம்.

இன்றைய காலகட்டத்தில் சிலருக்கு யுத்தமும் தேவையாக இருக்கிறது. அதற்காகக் கலவரங்களை ஆரம்பிக்கக் குறுக்கு வழிகளைக் கையாளலாம். இவர்களைப் புலிகள் அம்பலப்படுத்த வேண்டும்.


புலிகளின் அடிமட்ட உறுப்பினர்களிடத்தில் தமிழ் - முஸ்லிம் சமூக நல்லுறவு ஏற்பட வேண்டியதன் அவசியம் பற்றி எந்த விதமான புரிந்துணர்வுமில்லை. அவர்கள் முஸ்லிம்களிடம் மட்டுமல்ல, தமிழ் மக்களிடமும் அதிகாரத்துடனே நடந்து கொள்கின்றார்கள். இது நிறுத்தப்பட வேண்டும்.

தமிழ் அதிகாரிகளின் திட்டமிட்ட புறக்கணிப்புக்கள் - இதனை முடிவுக்குக் கொண்டுவர புலிகள் முயற்சிக்க வேண்டும் - வேலை வாய்ப்புக்கள், பங்கீடுகள் என்பனவற்றில் இன விகிதாசாரம் பேணப்பட வேண்டும்.

**கேள்வி** : குறிப்பாக வேறு என்ன கூற விரும்புகிறீர்கள்?

**பதில்** : தமிழ் ஊடகங்களைப் பற்றித்தான் மனதிலே காட்டமான எண்ணங்கள் இருக்கின்றன. தமிழ் - முஸ்லிம் சமூக நல்லுறவைச் சீர்குலைத்ததில் தமிழ் ஊடகங்களுக்குக் கணிசமான பங்குண்டு.

கௌசல்யனின் இறுதிக் கிரியையில் கலந்துகொண்ட தமிழ்ச்செல்வன், பாலகுமார், தமிழ்க் கூட்டமைப்பு எம்.பி.க்களான சிவாஜிலிங்கம், அரியநேந்திரன் மற்றும் மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரன் ஆகிய தமிழ்ப் பிரமுகர்கள் அனைவரும் முஸ்லிம்களுக்குப் பிரச்சினை இருக்கிறது என்பதைப் பற்றிப் பேசினார்கள். ஆனால் அதனைத் தமிழ் ஊடகங்கள் இருட்டடிப்புச் செய்துவிட்டன.




ஜனாப் எஸ்.எச்.அபூஹனீபா

கடந்த காலங்களிலும் புலிகளுடனான பல சந்திப்புக்களில் எமது பல பிரச்சினைகளை அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். வாக்குறுதி தந்தார்கள். அவற்றைத் தமிழ் ஊடகங்களில் வெளியிடுங்கள் என்றோம். ஆனால், அது நடக்கவில்லை.

ஒரு வாரத்திற்கு முன்னர் பி.பி.சி. செய்தியாளர் எல்.ஆர்.ஜெகதீஸன் என்னிடம் வந்து பேட்டி கண்டார். அவரிடமும் பி.பி.சி. தமிழோசை உட்பட ஊடகங்கள் பக்கச் சார்பாக நடந்துகொள்வது பற்றிப் பிரஸ்தாபித்தேன். இனப் பிரச்சினை தீர வேண்டுமாக இருந்தாலும், இனங்களுக்கிடையில் ஒற்றுமை ஏற்பட வேண்டுமாக இருந்தாலும் ஊடகங்கள் - குறிப்பாகத் தமிழ் ஊடகங்கள் நியாயமாகவும் நாகரிகமாகவும் நடந்துகொள்ள வேண்டும்.

**முற்றும்**





**நல்லதே நினைப்போம்! நல்லதே செய்வோம்**

**46 வருடம் நிரூபிக்கும் மலையாள மாந்திரீகம்**

1. எனது 46 வருட அனுபவத்தைக் கொண்டு அனுதினமும் வரும் வாடிக்கையாளர்கள் என்னை நேரில் கலந்து ஆலோசனை பெற இங்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.
2. வெளிநாட்டவர்களுக்கும் என்னிடம் தொலைபேசியில் கலந்து பேச வாய்ப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. அனைத்து தொலைபேசிகளுக்கும் C.L.I. வசதியுள்ளது.
3. ஜாதக, ஜாதகிகள் எதிர்கால வாழ்வு, ஆய்வு கண்ணோட்டம் பற்றி நேரில் வியக்கத்தக்க முறையில் என்னால் அருள் ஞானத்தால் கூறமுடியும். நடந்தது, நடக்கப் போவது, நடக்க இருப்பது, திருமணம் எப்போது எத்தனையாம் திகதி, நினைப்பது எப்போது நடக்கும் என்பதற்கெல்லாம் நேரில் வந்தால் என் அருள் ஞான சித்தத்தால் தெட்டத் தெளிவான பதில் கிடைக்கும்.
4. உங்கள் தேவைகளுக்கு நேரில் மட்டும் எந்த நாட்களும் முன் அறிவித்தல் இன்றி வருகை தரலாம்.
5. ஆணித்தரமாக கைரேகை பார்த்து பலன் தரும் சேவையும் உண்டு

உலக மாந்திரீக சக்கரவர்த்தி பேராசிரியர் டாக்டர். தெய்வீக ஞான குரு P.K. சாமி ஐயாவின் பிரதான அனுசரணையுடன் ஞாயிறுதோறும் சக்தி தொலைகாட்சியில் இரவு 7.00 மணிக்கு வேலன் தொடரை தொடர்ந்து பாருங்கள்

எனது P.K. Saamy Associate (Pvt) Ltd. ஒருங்கமைப்புடன் செயல்படும் நிறுவனத்தில் ஒரு அங்கமே எனது மலையான மாந்திரீக உச்சாடன பீட பிரிவு.

பேராசிரியர். டாக்டர். P.K. சாமி (J.D.G.A.N) J.P.

**ஸ்ரீ துர்கா தேவி மாந்திரீக உச்சாடன பீடம்**

இல. 162, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு - 13.

தொலைபேசி இலக்கங்கள் :

(CLI) Nos. 2342463, 2342464, 2344832, 4613124, 4613133. Fax : 2344831


## தினமுரசு சந்தா விபரம்

**சந்தாக் கட்டண அதிகரிப்பு விபரம்**

இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்பு காரணமாக சந்தாக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. அது சம்பந்தமான விபரம் பின்வருமாறு:

| நாடுகள் | ஒரு வருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 3,500 | ரூ.1,750 | ரூ.875 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 4,400 | ரூ.2,200 | ரூ.1,100 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 3,100 | ரூ.1,550 | ரூ.775 |
| உள்ளூர் | ரூ. 1,050 | ரூ.525 | ரூ.265 |

சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரை பெறவிரும்புவோர் D.D. Enterprises எனும் பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளைகளை முகாமையாளர் தினமுரசு 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. Srilanka என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.

உள்ளூரில் சந்தா பெற விரும்புவோர் சந்தாத் தொகையை காசுக் கட்டளையாக வெள்ளவத்தை தபாற் கந்தோரில் மாற்றும் வண்ணம் 'Manager Thinamurasu' என்னும் பெயருக்கு கட்டளையிட்டு பதிவுத் தபாலில் Thinamurasu Varamalar 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

ஈ-மெயில்: (E-mail):- murasu@sltnet.lk


## ஹோமியோபதி சிகிச்சை

தமிழ்நாட்டில் பிரபல சிகிச்சை நிபுணரும், தமிழக அரசின் ஹோமியோபதி கவுன்சில் உறுப்பினருமான,

**DR.R. தியாகராஜன் DHMS, AMRSH (Lon)** நீரிழிவு, ஆஸ்மா, மூட்டுவாதம், தோல் வியாதிகள், ஆண்மைக் குறைவு போன்ற நாட்ட்ட வியாதிகளுக்கும் சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கிறார்.

காலம் : 25.04.2005 முதல் 30.04.2005 வரை

இடம் : ஹோட்டல் கிறீண்லண்ட்ஸ், பம்பலப்பிட்டி.

தொலைபேசி : 2585592, 2581986, HOTLINE : 0777-602513


## எழுத்தாளர்களின் கவனத்திற்கு

**மலையகச் செய்திகள் எமக்கு அரசியல் சாயம் பூசி அனுப்பப்படுவதால் எமது தெரிவுக்குட்படுவதில்லை. எனவே சுதந்திரமாகவும், நியாயமாகவும் எவரையும் நேரடியாகக் குறிப்பிடாமலும் உண்மைச் செய்திகளை எழுதக் கூடியவர்கள் தாராளமாக எமக்கு எழுதலாம். செய்தியாகவோ / கட்டுரையாகவோ உங்கள் மன எண்ணங்களை எம்மோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.**

1. மலையகச் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவும் முறைப்பாடுகளைச் சம்பந்தப்பட்டவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரவும் நாம் கடமைப்பட்டுள்ளோம். ஏற்கெனவே கவிதை, சிறுகதை என்பவற்றுடன் முரசின் வளர்ச்சியில் ஒன்றித்திருப்பவர்களுக்கு எமது சிரம் தாழ்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

**பி.கு.**

துணிந்து உண்மைச் செய்திகளை நேர்மையாக எமக்கு எழுதக் கூடிய பிராந்தியச் செய்தியாளர்களின் பங்களிப்பும் வரவேற்கப்படுகிறது. வடக்குக் கிழக்குச் செய்திகளை விடவும், மலையகச் செய்திகள் தொடர்பிலும் முரசு கூடிய கவனம் செலுத்தவுள்ளதால் ஒத்தாசை புரிந்து செயலாற்றத் துடிப்பான எழுத்தாளர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.

**நம்மால் முடிந்த சேவையை நம் சமூகத்திற்குச் செய்வோம். நமக்கு என்ன கிடைத்தது என்பதை விடவும் நாம் என்ன கிடைக்கச் செய்தோம் என்ற கேள்வியை நம்மை நோக்கி நாமே கேட்போம்.**

*நன்றி-*
*ஆ - ர்*

இன்னொருவர் பார்வையில்

# புலிகளின் அரசியல் அலுவலகங்கள் கொலைக் குகைகளாகவும் சித்திரவதைக் கூடங்களாகவும் உள்ளன

(கடந்த வாரத் தொடர்ச்சி)

கடந்த மூன்று வருடங்களாக மிக மோசமான முறையில் பிள்ளைகள் கடத்திச் செல்லப்படுவதையும் அரசியல் எதிரிகள் வகைதொகையின்றியும் எவ்வித கட்டுப்பாடுமின்றியும் கொல்லப்படுவதையும் ஸ்தாபனமயப்படுத்தப்பட்ட பயங்கரவாதத்தையும் ஒரு கட்சி அதிகாரத்தையும் இப்போது நன்கு முற்றியுள்ள எதிர்க்கிளர்ச்சியையும் சட்டபூர்வமானதெனவும் தவிர்க்க முடியாதனவெனவும் கிழக்கில் சமாதானத்தின் பெயரால் நாம் ஏற்றுக்கொண்டுள்ளோம். சொல்ஹெய்மின் தர்க்கப்படி இது வடக்கு, கிழக்கின் உள்விவகாரமென்பதோடு புலிகளின் சர்வதேச புலனாய்வுப் பிரிவுத் தலைவரால் தீர்க்கப்படக் கூடியதுமாகும். ஆனால் இதேவேளை அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் புலிகள் அரசியல் அலுவலகங்களைத் திறப்பதற்கு யுத்த நிறுத்த ஒப்பந்தம் அனுமதித்துள்ளது. இந்த அலுவலக வளாகங்கள் ஆயுதபாணியான கொலைக் குழுக்களின் குகைகளாகவும் சித்திரவதைக் கூடங்களாகவும் திகழ்கின்றனவென்பது பகிரங்க இரகசியமாகும். அண்மையில் புலிகளின் வவுனியா அரசியல் அலுவலகத்தில் இவ் விடயம் அம்பலத்துக்கு வந்தது. ஜனநாயக அரசியலில் இவ்வாறான செயற்பாடுகள் அனுமதிக்கப்படுவதில்லை.

வடக்கு, கிழக்கில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் இருப்பதால், அங்கு சுனாமி நிவாரண வேலைகளுக்குப் பொறுப்பாகப் புலிகளே அமர்த்தப்படவேண்டுமென்று சில முன்னணிச் சமாதான ஏற்பாட்டாளர்களால் முன்வைக்கப்படும் வாதம், அவர்களின் சமாதான அணுகுமுறை எவ்வாறு அடிமைத்தனமாகவும் கற்பனையாகவும் இருக்கிறதென்பதை விளக்குகிறது. பயங்கரவாத நடவடிக்கைகளால் கைப்பற்றப்பட்ட அதிகாரத்தை மேலும் அதிகரிப்பதற்கு வளங்கள் வெகுமதியாக அளிக்கப்பட வேண்டுமென்ற கருத்து எப்படியிருக்கிறது? தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பெயரைப் பாவித்து மட்டக்களப்பிலுள்ள அகதி முகாம்களுக்குப் புலிகள் செல்ல முடிகிறது. இது பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பத் தலைவர்கள் இருவரைக் கொல்வதற்கு புலிகளுக்கு வழிவகுத்துள்ளது.

லண்டனைச் சேர்ந்த முன்னணிப் புலி உறுப்பினரான ஜெயதேவன் அண்மையில் வன்னியில் தடுத்து வைக்கப்பட்டமை, வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் சமய அநுட்டானங்களோடு தொடர்புடைய ஏனைய நிறுவனங்களின் வருமானத்தைக் கட்டுப்படுத்துவதில் புலிகள் எந்தளவுக்கு வெற்றிபெற்றுள்ளனர் என்பதை வெளிக்காட்டுகிறது. 'புலிகள் 'இவர்களைக் கட்டுப்படுத்துகின்றனர்' என்ற அதே தர்க்கத்தைப் பயன்படுத்தி, தமிழர்கள் பெருமளவில் வாழும் நாடுகளின் அரசாங்கங்களிடம் அவர்களோடு தொடர்புடைய சகல சமூக நிறுவனங்களூடாகக் கிடைக்கும் நிதியைப் புலிகளுக்கு அனுப்பி வைக்கும்படி கேட்கலாமல்லவா?

மக்களை முன்னிலைப்படுத்தாமலும் சில அடிப்படைப் பெறுமானங்களுக்கு முதன்மையளிக்குமாறு வற்புறுத்தாமலும் நிலைமையைச் சீர்திருத்தவோ, சமாதானத்தை மீள ஏற்படுத்தவோ முடியாதென்பதே எமது நிலைப்பாடாகும்.

இந்த நிலையை ஏற்படுத்துமாறும் பொறுப்பான ஓர் அரசாகச் செயற்படுமாறும் மக்கள், அரசாங்கத்தை எதிர்பார்க்கின்றனர். நீண்டகாலமாக இலங்கை அரசாங்கம் இது குறித்து அக்கறை இல்லாமலே இருந்து வந்துள்ளது. இதனால்தான் மேற்குலகு மற்றும் ஜப்பானிய நிபுணர்கள் எம்மைத் தரம் குறைந்த மிருகங்களின் காட்சிச்சாலையாக நினைத்துக்கொண்டு தம்முடைய அபகீர்த்தியான தத்துவங்களைப் பரீட்சிப்பதற்கு

முன்னாள் போராளிகள், அவர்களின் ஆதரவாளர்கள், பத்திரிகையாளர்கள் சுட்டுக்கொல்லப்படுவதை நியாயப்படுத்தி, அதனைச் சட்ட ரீதியானதாக்கும்போது ஜனநாயக ரீதியற்ற அணுகுமுறையும் துப்பாக்கிச் சட்டமும் ஒரேயொரு வழிவகையாகிவிடும். இத் தீங்கான நிலைமை மாற்றப்பட வேண்டும்.

பொய்யான மறுப்புகளுக்குப் பின்னால் மறைந்து நின்றுகொண்டு தமது அலுவல்களை வழமைபோல் செய்ய முடியாதென்ற அறிவுறுத்தலைக் கொலையாளிகளுக்கு விடுக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. ஒரே அடிப்படையில் சகலருக்கும் அரசியல் சுதந்திரம் உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும். இந்த நோக்கோடு, தாமதமாக என்றாலும் ஐரோப்பிய யூனியனின் ஆணையாளர் பெனிட்டா பெரைரோ வால்ட்னர் கொழும்பில் மார்ச் 8ஆம் திகதி புலிகளுக்கு விடுத்திருக்கும் அறிவித்தலை நாம் வரவேற்கிறோம்.

கடந்த மார்ச் மாதம் ஐந்தாம் திகதி தமிழகத்திலிருந்து தாயகம் திரும்ப முனைந்த தமிழ் அகதிகள் கொள்ளைக்கும் கற்பழிப்புக்கும் இலக்காக்கப்பட்டனர். 27 பெண்கள் உட்பட ஐம்பது தமிழ் அகதிகள் இந்திய மீன்பிடிப் படகுகள் மூலம் பயணம் செய்து, இப்போது வழமையாக நடப்பது போன்று தலைமன்னாருக்கு அப்பாலுள்ள மணல் திட்டொன்றில் இறக்கிவிடப்பட்டனர். பொதுவாக இவர்களைக் காணும் மீனவர்கள் இது பற்றிக் கடற்படைக்கு அறிவிப்பார்கள். கடற்படையினர் சென்று அவர்களை ஏற்றி வருவார்கள். இச் சம்பவத்தில் வாள்கள் மற்றும் துப்பாக்கிகளுடன் வந்த ஐந்து பேர் இவர்களின் பொருட்களைக் கொள்ளையிட்டதோடு, சில பெண்களையும் கற்பழித்தனர். மறுநாள் காலை மீனவர்கள் வழங்கிய தகவலையடுத்து உள்ளூர் பங்குத் தந்தையொருவர் கடற்படையினருடன் சென்று அவர்களை அழைத்து வந்தார்.

**மனித உரிமைகளுக்கான யாழ்.பல்கலைக்கழகப் போதனாசிரியர் சங்கம் கடைசியாக விடுத்த நீண்ட அறிக்கையிலிருந்து சில பகுதிகளை மட்டும் இங்கே பிரசுரித்துள்ளோம். அந்த அறிக்கையிலிருந்து எடுத்து நாம் தரும் பகுதி இதுவாகும்.**

பரபரப்பான செய்தியாகியது. ஆயுதப் படையினர் மீதான மக்களின் அவநம்பிக்கைக்கு சிறந்த ஆதாரங்கள் உள்ளன.

வழமையாக மிகச் சிறிய விடயங்களுக்கெல்லாம் உடனடியாகவே எதிர்ப்பைத் தூண்டிவிடும் புலிகள், இந்தப்

அவர்களுடைய 450 கோடி டொலர்களை ஆட்டிக் காட்டுகிறார்கள்.

சமஷ்டி முறையின் மீது ஜனாதிபதி கொண்டிருக்கும் உறுதிப்பாடு நியாயமானது என்றபோதிலும், அராஜகத்தின் மத்தியில் அது ஓர் தீர்வாக அமையாது. சுனாமியின் போது மக்கள் எடுத்துக்காட்டியதைப் போன்று ஒன்றிணைந்து வாழ்வதென்ற மக்களின் ஐக்கியத்தை உறுதிப்படுத்தாமல் இத்

**சிறுவர் போராளிகளைப் புலிகள் பயமின்றிச் சேர்த்துக்கொள்வது அரசியல் கொலைகளோடு நெருக்கமாகத் தொடர்புபடுகிறது. அரசியல் கொலைகள் தொடர்பாக எவரும் புலிகளைக் காத்திரமான முறையில் கண்டிக்கவில்லை. மாறாகப் புலிகளுக்கு ஐரோப்பியத் தலைநகரங்களில் வரவேற்பளிக்கப்பட்டுள்ளது.**

தீர்வை ஏற்படுத்த முடியாது.

யுத்த நிறுத்தக்காலக் கொலைகள் குறித்து யார் என்ன செய்கிறார்களென்பதை அறிந்துகொள்ள விரும்பாதது போல் நீண்ட காலமாகச் சர்வதேச சமூகம் கண்ணை மூடிக்கொண்டிருக்கிறது.

கொலைகள் குறித்து ஆராய்ந்தறிவதற்கு ஸ்தாபனமயப்படுத்தப்பட்ட வரைமுறையில்லாமல் தெந்தெட்டான முடிவுகளை எடுத்து அவற்றைப் பகிரங்கப்படுத்த வேண்டியிருக்கிறது. கருணா குழுவினரால் மேற்கொள்ளப்படும் படுகொலைகள், கிழக்கின் நிச்சயமற்ற தன்மைக்குப் புதிய நிலையொன்றினை ஏற்படுத்தியிருக்கிறது. கருணா தரப்பின் தாக்குதல், ஏற்கெனவே பயமின்றி பிரபாப் புலிகளால் மேற்கொள்ளப்பட்டுவரும் கொலைகளின் வெளிப்பாடாகும். சமாதானத்தின் பெயரால் நிராயுதபாணிகளான அரசியல்வாதிகள்,

வன்செயலைக் கண்டிக்கவும்,

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மதிக்கவும்,

ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டித் தீர்வைக் காண்பதென 2002ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஒஸ்லோவில் தெரிவிக்கப்பட்ட கொள்கைக் கடப்பாடுகளை மீண்டும் வலியுறுத்தவும்,

சிறுவர் போராளிகளைச் சேர்த்துக்கொள்வதை நிறுத்தவும்,

வடக்கு, கிழக்கில் மாற்றுக் கருத்துக்களைக் கொண்ட அரசியல் கட்சிகளுக்கும் மக்களுக்கும் சுதந்திரமாகச் செயற்பட அனுமதிக்கவும் - அந்த அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் இங்கே எழுகின்ற முக்கிய கேள்வி இதுதான். இவ்வாறு சந்தர்ப்பத்துக்கேற்ப தெரிவிக்கப்படும் வார்த்தைக்கு உண்மையிலேயே உயிர் கொடுக்கக்கூடிய விருப்பு சர்வதேச சமூகத்துக்கு உள்ளதா என்பதே அக் கேள்வியாகும். சர்வதேச சமூகம் புலிகளின் கொலைகளை மூடி மறைக்கத் தயாராக இருப்பதால்தான் எவ்வித பயமுமின்றிப் புலிகள் கொலைகளைப் புரிகின்றனர். உதாரணத்துக்கு ஐ.நா.செயலாளர் நாயகம், புலி உறுப்பினர் ஒருவர் (கௌசல்யன்) கொல்லப்பட்டமையை மட்டும் தேர்ந்தெடுத்துக் கண்டித்ததையும், அநேகமாக அதே காலகட்டத்தில் சிறுவர்களைக் கடத்துவது தொடர்பாகப் புலிகளுக்கு தடைகள் விதிக்க வேண்டுமென்று யோசனை தெரிவித்தமையையும் நாம் கவனத்தில் கொள்ளலாம்.

சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபடும் பல அமைப்புகளோடு சேர்ந்து புலிகளையும் ஐ.நா. அதிகாரிகள் பட்டியலிட்டதால் அநேகமாகப் புலிகள் மீது தற்செயலாக இக் கண்டனம் தெரிவிக்கப்பட்டிருக்கலாம். சிறுவர் போராளிகளைப் புலிகள் பயமின்றிச் சேர்த்துக்கொள்வது அரசியல் கொலைகளோடு நெருக்கமாகத் தொடர்புபடுகிறது. அரசியல் கொலைகள் தொடர்பாக எவரும் புலிகளைக் காத்திரமான முறையில் கண்டிக்கவில்லை. மாறாகப் புலிகளுக்கு ஐரோப்பியத் தலைநகரங்களில் வரவேற்பளிக்கப்பட்டுள்ளது.

இக் குற்றச் செயல் அம்பலத்துக்கு வந்தபோது, புலிகளின் ஊடகங்கள் தாமதமெதுவுமின்றிக் கடற்படையினர் மீது குற்றஞ்சாட்டின. இது பற்றிய உள்ளூர் மக்களின் அபிப்பிராயங்கள் இரு வேறுபட்டவையாக இருந்தாலும் வழமை போல் கடற்படையினரே முக்கிய குற்றவாளிகளெனக் கருதப்பட்டனர். இதேவேளை, தென்பகுதிக்கு அப்பாலிருந்து இப் பகுதிக்கு அடிக்கடி வருகை தரும் உள்ளூர் மீனவர்கள், சிங்கள மீனவர்கள், கள்ளக் கடத்தலில் ஈடுபடும் ஏதாவதொரு தரப்பு இக் குற்றச் செயலில் சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய சாத்தியமும் உள்ளது.

ஆனால், நாட்கள் செல்லச் செல்ல, மிகக் கூர்மையாக இவ்விடயத்தை அவதானிப்பவர்கள், வழமைக்குப் புறம்பான சாதாரண சம்பவங்களில் தாக்கப்பட்டுள்ளனர். குண்டுசி கீழே விழுந்தால்கூட சிறு சிறு விடயங்களுக்காகவெல்லாம் கிளர்ச்சிகளில் ஈடுபடும் புலிகள் இதனைக் கண்டுகொள்ளாதவர்களாக இருக்கின்றனர். பொலிஸார் கடந்த மார்ச் மாதம் பதினைந்தாம் திகதி 22 கடற்படையினரை அடையாள அணிவகுப்புக்காக ஆஜர்செய்தனர். ஆனால் பாதிக்கப்பட்டவர்கள் அதில் பங்குபற்ற விரும்பவில்லை.

இதேவேளை 2001ஆம் ஆண்டு மார்ச் மாதம் பொலிஸ் மற்றும் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுக் கற்பழிக்கப்பட்ட சிவமணி, விஜிகலா ஆகிய இரு பெண்களின் விடயம் கவனத்தில் கொள்ளத் தக்கது. பொலிஸாரின் நிர்ப்பந்தத்தின் பேரில் சந்தேக நபர்களை மாஜிஸ்திரேட் தடுப்புக் காவலில் வைக்குமாறு உத்தரவிட்டார். கற்பழிப்பு விவகாரத்தை மூடிமறைக்கும் ஒரு நோக்குடனேயே இத் தடுப்புக் காவல் வலியுறுத்தப்பட்டது. (குற்றவாளிகள் தப்பித்தபோதும்) இறுதியில் இந்த வழக்கு விசாரணை மெதுவாக மேற்கொள்ளப்பட்டது. மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப்பும் நீதியமைச்சர் பட்டி வீரக்கோனும் காட்டிய அக்கறை காரணமாகவே இந்த வழக்கு விசாரணை நடத்தப்பட்டது. தற்போதைய பிரச்சினையைப் போலன்றி முன்னைய விடயத்தில் மன்னார் ஆயர் தலையிட்டதன் பின்னரே அந்த விடயம்

பரபரப்பான சூழ்நிலையில் மிக அமைதியாக இருப்பதே இங்குள்ள வித்தியாசமாகும். புலிகளின் கொடியே தமிழ்த் தேசத்தின் கொடியெனப் புலிகளின் கூற்றை ஆதரித்துப் பகிரங்கமாகவே மிக உணர்ச்சிகரமாக அறிக்கை விடுத்த ஆயர் கூட இந்த விடயத்தில் எவ்வித அக்கறையும் காட்டுவதாகத் தெரியவில்லை. மார்ச் மாதம் 22ஆம் திகதி நடைபெற்ற அடையாள அணிவகுப்புக்குப் பாதிக்கப்பட்டவர்கள் போகத் தவறியபோது, அதாவது ஒரு வார கால மௌனத்தின் பின்னர், புலிகளின் ஊடகங்களில் இப் பிரச்சினை எழுப்பப்பட்டது. கடற்படையினர் பயமுறுத்தினரென்ற கருத்தையே மீண்டும் புலி ஊடகங்கள் தெரிவித்தன. கடற்படையினரின் அச்சுறுத்தலென்று கூறுவதிலும் பார்க்க, புலிகளின் சமிக்ஞையையேற்றுச் செயற்படும் சிவில் சமூகம், பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாகச் செயற்படத் தவறியமை இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

பாதிக்கப்பட்டவர்களில் ஒருவர் (அனேகமாக திருமதி ராஜிதா ராஜன் - வயது 25) கடற்படை முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டாரென்றும் அங்கு தன்னைக் கற்பழித்தவரென்று கடற்படையைச் சேர்ந்த ஒருவரை அடையாளம் காட்டினாரென்றும் சில தினங்களின் பின்னர் தகவலறிந்த உள்ளூர் வட்டாரங்கள் தெரிவித்தன. உள்ளூர் மக்கள் இன்னமும் ஏன் அமைதி காக்கின்றார்களென்பதை விளங்கப்படுத்த முடியாமலிருக்கிறது. இந்தச் சம்பவத்தில் சட்டம் தன் நடவடிக்கையை எடுத்தமை குறித்து தாம் சந்தோஷப்படுவதாக உள்ளூர் மக்கள் தெரிவித்தனர். (முன்னைய இவ்வாறான சம்பவங்களில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை) புலிகள் மக்களைத் தூண்டி விடாமல் இருப்பது குறித்தும் உள்ளூர் மக்களால் விளங்கிக்கொள்ள முடியவில்லை. மன்னாரில் பெப்ரவரி 17ஆம் திகதி மீன் பிடித்துக்கொண்டிருந்த வள்ளங்கள் மீது புலிகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகம் உள்ளூர் மக்களை ஆத்திரம் கொள்ள வைத்தது. இதனால் மன்னாரிலுள்ள புலிகளின் அலுவலகத்தை உள்ளூர் மக்கள் தாக்கினர்.


**(முற்றும்)**

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

"உனக்கும் கீழே உள்ளவர் கோடி; நினைத்துப் பார்த்து நிம்மதி நாடு."

மேற்சொன்னவாறு, நினைத்துப் பார்த்தால், உன் மனம் நிச்சயமாக அமைதியுறும், வாழ்வு பற்றிய ஒரு மெய்யறிவு உன்னுள் உதிக்கும். அந்த ஞானம் வந்தெய்தியபின், மயக்கமாவது, கலக்கமாவது? தெளிந்த நீரோடை போல்



மனம், திக்கெட்டும் சஞ்சரிக்கும்!

'மயக்கமா? கலக்கமா?' பாட்டை என் அறைக்குள் உட்கார்ந்துகொண்டு திரு. P.B. ஸ்ரீநிவாஸ் பாடிக் காட்டிய பொழுது, மேற்கண்ட வாறெல்லாம் என் மனம் பாட்டின் உட்பொருளை உய்த்துணர்ந்து அமைதி பெற்றது.

சென்னையிலேயே தங்கி, மீண்டும் சினிமாவில் இடம் பெற முயற்சிக்க வேண்டும் என உறுதிபூண்டேன்.

சென்னைக்கு வந்து ஐந்தாண்டுகள் ஆகியும் நான் கண்ணதாசனைச் சந்திக்கவில்லை.

அடுத்த நாளே கண்ணதாசனைச் சந்திக்க வேண்டும் என்னும் அவா என்னுள் எழுந்தது.

அவர், நாத்திகத்திலிருந்து ஆத்திகத்துக்கு மாறிவிட்டார் என்பதனால் இந்த அவா மேலும் கூடிற்று.

அடுத்த நாளே கண்ணதாசனைச் சந்தித்தேன்.

### முக்தா ஸ்ரீநிவாசன்

நண்பர் திரு. மா. லட்சுமணன்தான் என்னைக் கண்ணதாசனிடம் அழைத்துச் சென்றார். அப்போது, தியாகராயநகர் உஸ்மான் ரோடில், கண்ணதாசனின் அலுவலகம் இருந்தது. ஆகவே, நானும் மா. லட்சுமணனும் கிளப் ஹவுஸ்ஸிலிருந்து நடந்தே கண்ணதாசன் அலுவலகம் போய்ச் சேர்ந்தோம்.

லட்சுமணன் என்னைக் கவிஞரிடம் அறிமுகம் செய்து வைத்தவுடன், அவரே சொன்னார்:

"தெரியுமே! திருச்சி ரேடியோவ்ல நாடகமெல்லாம் எழுதிக்கிட்டிருந்த வாலிதானே நீங்க?"

கவிஞரின் ஞாபக சக்தியை நான் வியக்கையிலேயே இரண்டு கோப்பையில் காப்பி கொண்டு வரப்பட்டு, கவிஞர் தமது கையாலேயே எங்கள் இருவருக்கும் வழங்கினார்.

"நான் ஒரு தீவிரமான ஆஸ்திகன்... நீங்களும் இப்ப ஆஸ்திகனா மாறிட்டதிலே எனக்கு ரொம்ப சந்தோஷம்.." என்றேன் நான்.

"அட! நான் எப்பவுமே ஆஸ்திகன்தான்யா... ஜுபிடர் பிக்சர்ஸ் இருக்கறப்போ விபூதி குங்குமத்தோடதான் இருப்பேன். நீங்க சுப்பையா நாயுடுவைக் கேட்டீங்கன்னா சொல்வாரு" என்றார் கவிஞர்.

சுப்பையா நாயுடு என்று அவர் குறிப்பிட்டது எனது மரியாதைக்குரிய இசையமைப்பாளர் திரு.எஸ்.எம்.சுப்பையா நாயுடுவைத்தான்.

"உங்களைப் பற்றி நாலு வரி கவிதை எழுதியிருக்கிறேன்; கேக்கறீங்களா?" என்றேன் நான்.

"என்னெப்பத்தியா? சொல்லுங்க; சொல்லுங்க...!" என்று உற்சாகத்தின் விளிம்பிற்கே போனார் கண்ணதாசன்.

நான் கீழ்க் கண்ட வரிகளைப் பாடிக் காண்பித்தேன்.


***"காட்டுக்குள் தேனீக்கள்***
***கூட்டுக்குள் வைத்ததைப்***
***பாட்டுக்குள் வைத்தவனே! -***
***காக்கைக்***
***கூட்டுக்குள் குயிலாகக்***
***கூவித் திரியாமல்***
***காலங் கழித்தவனே!"***

இன்னும் சில வரிகள் பாடினேன்; இப்போது நினைவில்லை.

கவிஞர் வெகுவாகச் சந்தோஷப்பட்டு, என் கைகளைப் பாசத்தோடு பற்றிக்கொண்டு பேசினார். (தொடரும்.......)




## உளவு பார்த்தலால் ஏற்படும் நன்மை, தீமைகள் பற்றிக் கூறும் அனுபவக் கட்டுரைத் தொடர்....




கலாசார தூதுவர்கள், விஞ்ஞான ஆலோசகர்கள், மக்கள் தொடர்பு அதிகாரிகள் என்கிற பெயர்களிலும் இவர்கள் செயல்படுவது உண்டு. ஐக்கிய நாடுகள் சபை அலுவலகத்திலும் ஐ.நா. சார்பு அமைப்புகளிலும்கூட கே.ஜி.பி. மனிதர்கள் உண்டு. ரஷ்யாவின் சார்பாக வெளிநாடுகளில் பிரசுரமாகும் பத்திரிகைகளின் நிருபர்களில் சிலர் கே.ஜி.பி.யிடம் சம்பளம் வாங்கிக் கொண்டு பணியாற்றுகின்றவர்களே. அமெரிக்காவிலுள்ள சோவியத் பத்திரிகை நிருபர்களில் பாதிப்பேருக்குமேல் ரஷ்ய உளவாளிகள் என்பது எட்கார் ஹூவர் என்கிற அமெரிக்கப் பிரமுகரின் கருத்தாகும்.

1951இல் சுவீடன் நாட்டைச் சேர்ந்த ஹில்டிங் ஆண்டெர்சன் என்கிற கடற்படை எஞ்சினியர், ரஷ்யர்களுக்கு இரகசியங்களைக் கொடுத்ததாக விசாரணைக்குக் கொண்டுவரப்பட்டார். அவரை ரஷ்யாவுக்கு வேவுகாரர் ஆக்கியவர் ரஷ்யாவின் செய்தி ஸ்தாபனமான Tass நிறுவனத்தைச் சேர்ந்தவர்.

1953இல் லியோ பீசரேவ் என்கிற Tass செய்தி ஸ்தாபன நிருபர் ஹாலந்து நாட்டின் தலைநகரான ஹேக்கிலிருந்து உளவு வேலை பார்த்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு ஹாலந்து நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டார். 1960இல் அனடோரியன் என்கிற Tass செய்தி நிறுவனத்தைச் சார்ந்தவர் உளவு வேலை பார்த்ததாக பிரேஸிலில் கைது செய்யப்பட்டு அந்த நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டார்.

செய்தியாளர்கள் என்கிற பெயரில் ரஷ்ய உளவாளிகள் பல நாடுகளிலும் செயற்பட்டு வந்திருப்பதற்கு இது சான்று ஆகும்.

இந்தியாவில் கே.ஜி.பி. எவ்வாறு செயல்படுகிறது என்பது குறித்து பீ.என்.லேக்கி என்கிற பிரபல வழக்கறிஞர் வெளியிடும் தகவல் இது:

"அமெரிக்காவின் உளவு நிறுவனமான சீ.ஐ.ஏ.யின் நடவடிக்கைகள் பற்றி நாம் நிறையப் பேசுகிறோம். கூமர் நாராயண் பிடிபடுகின்ற வரை கே.ஜி.பீ.யின் நடவடிக்கைகள் நம்முடைய நாட்டில் எவர் கண்ணிலும் படவில்லை. கே.ஜி.பீ. உளவாளிகள் இந்தியாவில் செயல்படுவதை இப்போதுதான் நாம் உணரத் தொடங்கி இருக்கிறோம். கே.ஜி.பீ.க்கு கம்யூனிஸ்ட் கட்சிகளோடு நெருக்கமான தொடர்பு உண்டு. நம்முடைய உளவுத் துறைகளிலும் அவர்கள் ஊடுருவி இந்திய அரசின் வெளிநாட்டுக் கொள்கைகளிலும் உள்நாட்டுக் கொள்கைகளிலும் தலையீட்டுக்கொண்டுதான் இருக்கிறார்கள். சோவியத் யூனியனுக்கு அடுத்தபடியாக சோவியத் பிரசாரம் இந்தியாவில்தான் பெரிய அளவில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

சோவியத் பிரசுரங்களை விநியோகிக்க அறுபத்தியொரு சாதனங்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவற்றுள் இருபத்தியொரு சாதனங்கள் இந்தியாவில்தான் இருக்கின்றன என்பது குறிப்பிடத் தக்கது.

கே.ஜி.பீ.நிறுவனம் ஐந்து தலைமை அமைப்புகளைக் கொண்டது. அவற்றுள் ஒன்று அந்நிய நாடுகளில் குழப்பத்தை ஏற்படுத்துவதற்கென்று செயற்பட்டுக் கொண்டிருக்கும் அமைப்பாகும். இதன் பலம் பொருந்திய ஒரு கிளை இந்தியாவில்தான் செயல்படுகிறது.

(தொடரும்.......)

(நன்றி : நர்மதா)

மேலைத்தேய நாடுகளில் எப்படியாயினும் ஆசியாக் கண்ட நாடுகளிலே ஒரு பெண், தனக்கேற்பட்ட ஏதேனும் அநியாயங்கள் தொடர்பாக - குறிப்பாகப் பாலியல் ரீதியிலான அநீதிகளுக்கெதிராக - போராடுவது மிகவும் அரிதாகும். அவ்வாறு எழுந்து நிற்பதனால் ஏற்படக்கூடிய பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பதைவிட மௌனமாக அனைத்தையும் தாங்கிக் கொண்டிருப்பதே நல்லது எனும் கருத்தியல் சமூகத்தின் மூலமாகவே பெண்களுக்குள் நுழைக்கப்பட்டுள்ளது. எனினும், நாங்கள் இங்கு காணுகின்ற பெண், தனக்கேற்பட்ட பாலியல் அநீதிக்கு எதிராகப் போராடி எதிர் நீச்சல் போட்டுக்கொண்டிருக்கிறார். இவர் ஓர் ஆசியப்

# அநீதியை எதிர்க்கும் பாக். பெண்

பெண்மணியாவார். அதுவும் பெண்களுக்கென்றே விசேடமான சட்டங்களைக் கொண்டிருக்கும் பெண்மணியாவார். முக்தார் மாயி என்பது இவரது பெயராகும். தனது 12 வயதுடைய சகோதரர் மேற்கொண்ட ஒரு தவறுக்காக முக்தார், 2002 பெப்ரவரி மாதம் சிலரால் கற்பழிக்கப்


முக்தார் மாயி

பட்டார். இதனால் இவரது ஆத்ம கௌரவம், வாழ்க்கை என்பன முற்றிலுமாகப் பாதிக்கப்பட்டதுடன் பொது வாழ்க்கையில் ஈடுபடவும் அது ஒரு வகையில் தடையாக அமைந்துவிட்டது.

பார்ப்பதற்கு அப்பாவிப் பெண்ணாகத் தென்படுகின்ற இவருள் மறைந்திருக்கும் அசுர பலத்தை இவருடன் நெருங்கிப் பழகுகின்றவர்களால் மட்டுமே உணர முடியும். பாகிஸ்தானில் கற்பழிப்புச் சம்பவங்களுக்கு உள்ளாகும் பல பெண்கள் தற்கொலை செய்துகொள்கின்றனர். அவர்களுக்குள்ள ஒரே வழி இதுவாகும். எனினும் முக்தார் அப்படிச் செய்யவில்லை. தன்னைக் கற்பழித்த நபர்களுக்கு எதிராக மூன்று வருடங்களாகத் தைரியத்துடன் கடுமையாகப் போராடினார். இதன்படி தன்னைக் கற்பழித்த நான்கு பேருக்கும், அவர்களுக்கு உதவிய இரண்டு பேருக்கும் சட்டத்தின் பிரகாரம் மரண தண்டனையைப் பெற்றுக் கொடுத்துள்ள முக்தார், அதில் சம்பந்தப்பட்ட இன்னொரு நபருக்கு ஆயுட்காலத் தண்டனையும் பெற்றுக் கொடுத்துள்ளார்.

அத்துடன் நின்றுவிடாமல், நட்டஈடாகத் தனக்குக் கிடைத்த நிதியை வைத்து தனது கிராமத்தில் சிறுவர்களுக்கான இரு பாடசாலைகளைக் கட்டியுள்ளார். தென் பஞ்சாப்பில் உள்ள மிர்வாலா கிராமத்தின் முதலாவது பாடசாலையும் இதுவேயாகும் என்பது குறிப்பிடத் தக்கது.

இப்போது இவர், உலகம் முழுவதிலும் அநீதிகளுக்கு உட்படுகின்ற பெண்களுக்காகக் குரல் கொடுக்கவும் ஆரம்பித்துள்ளார்.

முக்தார் மாயி, தான் முகங்கொடுத்த அந்தச் சம்பவம் பற்றி இப்படி விபரிக்கிறார்:-

"கற்பழிப்புக்கு உட்பட்டதன் பின்னர் ஏனைய பெண்களைப் போல் தற்கொலை செய்துகொள்ளவே நானும் எண்ணினேன். அதன் பின்னர் அந்த எண்ணத்தைத் தோல்விகாணச் செய்யவேண்டும் என்று தோன்றியது. எனக்கு முழுமை யான ஒத்துழைப்பை வழங்கி, சுமார் 200 பேர் வரையி லான ஊர் மக்கள் வந்து என்னைச் சந்தித்தபோதுதான், எனக்கு ஏற்பட்ட அநீதிக்கு எதிராகப் போராட வேண்டும் என்ற உணர்வு எனக்கேற்பட்டது.

எங்கள் கிராமத்தில் பாரியளவில் மக்கள் இல்லை. எனினும் இந்த நிலையை மாற்ற வேண்டும் என்ற எண்ணம், இங்குள்ள ஆண்களுக்குக்கூட இருந்ததை நான் புரிந்துகொண்டேன்.

எங்களது கிராமத்தில் பெண்கள் வீட்டு வேலைகளைச் செய்வதுடன், வயல்களுக்குச் சென்று ஆண்களுடன் சரிசமமாக வேலை செய்யக் கூடியவர்கள். கல்வி மற்றும் அடிப்படைச் சுகாதார வசதிகள்கூட எங்கள் கிராமத்தில் செல்வந்தர்களுக்கு மாத்திரமே ஒதுக்கப்பட்டவை என்றொரு நிலை இருந்து வருகிறது.

மாஸ்தோய் கோத்திர சட்டத்தின் அடிப்படையிலேயே நான் சிலரால் கற்பழிக்கப்பட்டேன். எனது 12 வயதுடைய சகோதரன் ஒருவன், அவர்களது கோத்திரத்தைச் சேர்ந்த நடுத்தர வயதுடைய ஒரு பெண்ணுடன் தகாத உறவு வைத்திருப்பதாகவே என்மீது குற்றஞ்சாட்டப்பட்டது. எங்கள் கிராமத்தில் மாஸ் தோய் கோத்திரத்தினரிடமே அதிகாரங்கள் காணப்படுகின்றன. எனது தம்பி செய்த தவறுக்காக அவர்கள் எனக்குத் தண்டனை கொடுத்தனர்.

ஆனால், இவர்களுடைய கோத்திரத்தைச் சேர்ந்த சிலர், எனது தம்பியைப் பாலியல் ரீதியாகப் பலாத்காரம் செய்து, அச் சம்பவத்தை மூடி மறைப்பதற்காகவே பொய்க் குற்றச்சாட்டினை முன்வைத்துள்ளனர் என்பது நீதிமன்றத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுவிட்டது" என்கிறார்.

எனினும் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள ஒரு சிலரது தண்டனைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும், அதற்கு எதிரான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், பாகிஸ்தான் அரசு அவர்களுக்கு மரண தண்டனை வழங்கத் தயாராகி வருவதாகவும் செய்திகள் கூறுகின்றன.

தண்டனை இடைநிறுத்தப்பட்டுள்ளதால், அந்நபர்கள் மறுபடியும் அக் கிராமத்துக்கு வந்து முக்தாரைக் கொலை செய்யக்கூடிய வாய்ப்புகளும் உண்டென்றும் கூறப்படுகின்றது. இது அவருக்கு மட்டுமல்லாது, அவரது குடும்பத்துக்கும் பேரபாயமாகவும் தென்படுகிறது. இந்த நிலையில் முக்தார் தனது கிராமத்தை விட்டு வெளியேறப் போவதில்லை எனக் கூறியுள்ளார்.


பாகிஸ்தான் பிரதமருடன் முக்தார்

"நான் பாகிஸ்தானை விட்டோ அல்லது எனது கிராமத்தை விட்டோ வெளியே செல்லப் போவதில்லை. தொடர்ந்தும் இங்கிருந்து இந்தப் பாடசாலைகளை முன்னெடுக்கப் பாடுபடப் போகிறேன்" என்கிறார் முக்தார்.

உண்மையிலேயே பாகிஸ்தான் போன்ற ஒரு நாட்டில் தான் கற்பழிக்கப்பட்டதாக உலகின் முன்பாகக் குரல் கொடுப்பதானது பாரதூரமான ஒரு விடயமாகும். எனினும் முக்தார், இதன்போது, "வெட்கப்பட வேண்டியவர்கள், உரிய தண்டனையைப் பெறக் கூடிய இக் குற்றவாளிகளே எதுவிதமான தவறுகளையும் செய்யாததானல்ல" என எண்ணியுள்ளார். இதனிடையே இச்சம்பவம் தொடர்பில் இவருக்குக் கிடைத்துள்ள ஊடகப் பிரசாரங்கள் இவரை வெற்றிகரமாக வழிநடத்தியதாகவும், மரண அச்சுறுத்தல்களில் இருந்து தற்காத்துக்கொள்ள உதவியதாகவும் முக்தார் கூறுகின்றார்.

பெண்களுக்காகக் குரல் கொடுப்பதற்கு முக்தார் தற்போது பல அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றார். 'நியூயோர்க் டைம்ஸ்' பத்திரிகையில் இவரது கதை வெளிவந்தபோது, அதனைப் படித்த வாசகர்கள், முக்தாரின் பாடசாலைக்கென 133,000 அமெரிக்க

-பாரூக்

# சங்கர மடத்துக் கிங்கரர்கள்

**15**

காஞ்சிபுரத்திலிருந்து
**அருண் கண்ணன்**

கும்பகோணம் வீரசைவப் பெரிய மடத்தை ஜனவரி மாதம் தமிழக அரசு கையேற்ற நடவடிக்கை, காஞ்சிமடத்தின் மீது குறிவைத்து எடுக்கப்பட்ட நடவடிக்கையாகப் பாரதீய ஜனதாக் கட்சி கருதியது. இதனால் தமிழக அரசுக்கும் தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்குமெதிராக காரசாரமான கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டன.

கும்பகோணம் தலைமை தபால் அலுவலக சாலையில் சாரங்க தேசிகேந்திர சுவாமிகள் வீரசைவப் பெரிய மடம் உள்ளது. இந்த மடத்தின் மடாதிபதியாக நீகண்ட தேசிகப் பரமாச்சாரிய சுவாமிகள் செயற்பட்டு வருகிறார். அவரது நிர்வாகத்தின் கீழ் மடம் செயற்பட்டு வந்தது. கும்பகோணத்தில் பல இடங்களில் மடத்துக்குச் சொத்துக்கள் உள்ளன. மடத்தின் நிர்வாகம் குறித்து அரசுக்குப் புகார்கள் வரவே, அது குறித்து விசாரணைகள் செய்த பின்னர் மடத்தின் நிர்வாகப் பொறுப்புக்கள் அனைத்தும் அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் கொண்டுவர தமிழக அரசு உத்தரவிட்டது. அரசு உத்தரவுப்படி சுவாமிமலை சுவாமிநாத சுவாமி கோவில் துணைக் கமிஷனர் தனபால், வீரசைவப் பெரிய மடத்தின் பொறுப்பை ஏற்று தக்காராகப் பதவி ஏற்றார். ஜனவரி 7ஆம் திகதி முதல் அறநிலையத் துறை துணைக் கமிஷனர் மடத்தின் நிர்வாகத்தை நடத்தி வருகிறார் என்பது குறிப்பிடத் தக்கது.

இதற்கு முன்பு எத்தனையோ மடங்களில் எவ்வளவோ நிர்வாகக் குறைபாடுகள் ஏற்பட்ட போதும், வேறு பிரச்சினைகள் ஏற்பட்ட போதும் மடங்களின் நிர்வாகங்களில் பெரும்பாலும் அரசு தலையிட்டதில்லை. பல மடங்களின் நிர்வாகங்கள் தொடர்பாகப் பல்வேறு வழக்குகளும் கூட நிலுவையில் இருக்கின்றன. அப்படியுள்ள நிலையில், ஒரு மடத்தை அரசு எடுத்துக்கொண்டுள்ளதால், அது காஞ்சி மடத்தை எடுத்து கொள்வதற்கான முன்னோட்டமாக இருக்குமோ என்ற கேள்வி அனைவர் மத்தியிலும் எழுந்துள்ளது நியாயமே.

சங்கராச்சாரியார் ஜெயேந்திரர்மீது தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்குத் தனிப்பட்ட கோபம் இருந்ததால்தான் அவரைக் கைது செய்ய பல வழிகள் எடுக்கப்பட்டதாகக் கூடக் குற்றச்சாட்டுகள் எழுந்தன. இந்தக் கைது விவகாரத்தில் காங்கிரஸ் தலைவி சோனியா காந்திக்கும் சம்பந்தம் இருப்பதாகக்கூடப் பாரதீய ஜனதாக் கட்சியும் விஷ்வ இந்துப் பரிஷத்தும் குற்றச்சாட்டுகளை எழுப்பின. ஒரு சட்ட விரோத நடவடிக்கையோடு - அதிலும் ஒரு கொலைச் சம்பவத்தோடு - சமூகத்தில் அந்தஸ்துமிக்கவர்களான சமயத் தலைவர்கள் சம்பந்தப்பட்டதால் அல்லது சம்பந்தப்படுத்தப்பட்டதால் தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியா பூராவுமே ஏட்டிக்குப் போட்டியான அரசியல் அலைகள் எழுந்திருந்தன. சங்கரமடத்துச் சம்பவத்தையோ, சபலத்தையோ அரசியல் கட்சிகள் தத்தமது தேவைக்கேற்ப பயன்படுத்திக் கொண்டன என்பதே உண்மையாகும்.

தமிழகத்தின் சர்ச்சைக்குரிய அரசியல் விமர்சகரும், 'துக்ளக்' பத்திரிகையின் ஆசிரியரும், முன்னாள் நடிகருமான 'சோ'விடம் "சங்கராச்சாரியார்கள் கைது செய்யப்பட்டதால் இந்து மதம் அழிந்து விடுமா?" என்றும், "இவர்கள் கைது செய்யப்பட்டதில் சோனியா காந்திக்கும் சம்பந்தமிருக்கிறதா?" என்றும் கேட்டபோது அவர் அளித்த பதில்கள் சிந்தனைக்குரியவை.



தாலி கட்டிக்கொண்ட கணவர் அர்ஜுனை விட்டு பிரிந்து வாழும் நடிகை சொர்ணமால்யா அண்மையில் வெளிவந்த தெலுங்குத் திரைப்படமொன்றில் படு ஆபாசக் காட்சிகளில் தோன்றியுள்ளார். கவர்ச்சியாகத் தோன்றுவதற்காக நவீன மோஸ்தர் ஆடைகளில் தோன்றுவதில் எவ்வித தப்புமில்லையென்று கூறும் இவர், தான் ஆபாசமாக நடிக்கவில்லையென்று அடித்துச் சொல்கிறார்.

சங்கராச்சாரியார்கள் கைது செய்யப்பட்டமைக்கு சோனியா காந்தியின் தூண்டுதல் காரணமென்று பாரதீய ஜனதாக் கட்சி குற்றஞ்சாட்டுவதை ஏற்றுக்கொள்ள முடியாதென அவர் பதிலளித்தார்.


"ஜெயேந்திரர், விஜயேந்திரர் கைது மூலம் இந்து மதத்துக்கே ஆபத்து என்று சிலர் கூறுவதை ஏற்கமுடியாது. எப்போது தோன்றியதென்றே தெரியாத அளவுக்கு பழமையான மதம் இந்து மதம். இதை அழிக்க 5 ஆண்டு மட்டுமே ஆட்சியில் இருக்கக்கூடிய ஜெயலலிதாவால் முடியாது. சங்கரமடத்தையும் அரசு எடுத்துக்கொள்ள முடியாது. பீடாதிபதியை நியமிக்கும் அதிகாரம் அரசுக்கு இல்லை. அரசின் எண்ணப்படி பொலிசார் செயல்படுகிறார்கள். எனவே இங்கு வழக்கு நடந்தால் நியாயம் இருக்காது. எனவே வழக்கு விசாரணையை வேறு மாநிலத்துக்கு மாற்ற வேண்டும்." இவ்வாறு நடிகர் 'சோ' கூறினார்.

சங்கராமன் கொலையோடு மட்டுமல்ல, திருக்கோட்டியூர் மாதவன், ஆடிட்டர் இராதாகிருஷ்ணன் ஆகியோர் தாக்கப்பட்ட வழக்கிலும் ஜெயேந்திரர் சம்பந்தப்படுத்தப் பட்டிருக்கிறார். இந்த மூன்று விடயங்கள் தொடர்பாகவும் நடிகை சொர்ணமால்யா பல முக்கியமான தகவல்களைத் தெரிவித்துள்ளார் என்று கூறும் தனிப்படைப் பொலிஸார், பல விடயங்கள் நீதிமன்றத்தில் அம்பலமாகுமென்று கூறுகின்றனர். சங்கரராமன் கொலை வழக்கில் இரண்டாவது எதிரியாகக் குற்றஞ்சாட்டப்பட்ட கண்ட்ராக்டர் ரவி சுப்பிரமணியத்தின் ஆசைநாயகியாகத் திகழ்ந்தவர் சொர்ணமால்யா என்று பரவலாகப் பேசப்படுகிறது. ஜெயேந்திரருக்கு அடுத்தபடியாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் ரவி சுப்பிரமணியம், தற்போது அப்புருவராக மாறியிருக்கிறார். கடந்த டிசெம்பர் மாதம் 26ஆம் திகதி கேரள மாநிலம் குருவாயூரில் ரவி சுப்பிரமணியம் கைதானார். டிசெம்பர் 30ஆம் திகதி காஞ்சிபுரம் இரண்டாவது குற்றவியல் நீதிமன்றத்தில் இவர் ஆஜர் செய்யப்பட்டபோது இரகசிய வாக்குமூலம் அளித்தார். நீதிமன்றக் கதவுகள் மூடப்பட்டே இரகசிய வாக்குமூலம் வழங்கப்பட்டது. வழக்கு விசாரணையின் போது இரகசிய வாக்குமூலத்தை மாற்றக் கூடாதென்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

சொர்ணமால்யாவுக்குச் சென்னையில் ஆடம்பர பங்களாவொன்றினை வாங்கிக் கொடுத்தவர் ரவி. இவர் ஊடாகத்தான் சொர்ணமால்யா சங்கராச்சாரியாருக்கும், சங்கரமடத்துக்கும் அறிமுகமாகியிருக்கிறார். தாலி கட்டிக்கொண்ட கணவரோடு ஏற்பட்ட பிரச்சினையை அடுத்து, அந்த விவகாரத்தை சங்கரமடத்தின் பஞ்சாயத்துக்குக் கொண்டு வந்தவர் சொர்ணமால்யா. ரவி சுப்பிரமணியத்தின் தூண்டுதலின் பேரில்தான் சொர்ணமால்யாவையும் கணவரையும் பிரிந்து வாழும்படி சங்கரமட நிர்வாகிகள் ஆலோசனை தெரிவித்ததாகவும் கூறப்படுகின்றது. சங்கரமடத்திற்கு வருகை தருவோர் பட்டியலில் சொர்ணமால்யாவின் பெயர் அடிக்கடி இடம்பெற்றிருக்கிறது. தெலுங்குப் படங்களில் படு ஆபாசமாக நடித்துள்ள சொர்ணமால்யா பற்றிய பல சர்ச்சைகள் அண்மைக் காலங்களில் ஏற்பட்டுள்ளன. திருக்கோட்டியூர் மாதவனுடன் முரண்பட்டுக் கொண்டபோது, இதே சொர்ணமால்யாவைத்தான் ஜெயேந்திரர் தூது அனுப்பினார் என்றும் கூறப்படுகின்றது.

ஆடிட்டர் இராதாகிருஷ்ணன் தாக்குதல் தொடர்பாகவும் சில முக்கிய தகவல்களை சொர்ணமால்யா வழங்கியிருக்கிறார் என்று கூறுகின்றனர் தனிப்படை பொலிஸார்.

ஆடிட்டர் இராதாகிருஷ்ணன் சங்கரமடத்தில் பணியாற்றியவர். மகா பெரியவர் சேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் சங்கராச்சாரியாராகப் பதவி ஏற்ற காலத்திலிருந்தே சங்கரமடத்தில் பணியாற்றியவர். மகா பெரியவரின் நம்பிக்கையைப் பெற்றவர்.



சொர்ணமால்யாவோடு மிகவும் நெருக்கமானவரான கண்ட்ராக்டர் ரவி சுப்பிரமணியம் இவர்தான். சென்னையில் சொர்ணமால்யாவுக்கென ஆடம்பர பங்களா ஒன்றினைத் தனது செலவில் ரவி சுப்பிரமணியம் வாங்கிக் கொடுத்துள்ளார்.

சென்னை, மந்தைவெளியிலுள்ள அவரது வீட்டுக்கு 2002ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 20ஆம் திகதி சென்ற கூலிப்படையினர் அரிவாளால் வெட்டிவிட்டு மின்னல் வேகத்தில் தப்பிச்சென்று விட்டனர். சங்கரராமனைப் போலவே சங்கரமடத்தினைப் பற்றியும் ஜெயேந்திரர் பற்றியும் சோமசேகர கனபாடிகன் என்ற பெயரில் அநாமதேயக் கடிதங்களை அவர் எழுதினார் என்ற சந்தேகமே அவர் மீதான தாக்குதலுக்குக் காரணமென்கிறார்கள் தனிப்படைப் பொலிஸார். சங்கரராமன் எழுதிய கடிதங்களில் இவருக்கும் சம்பந்தமுண்டென்று சந்தேகங்கள்கூட எழுந்திருக்கின்றன. சங்கரமடத்துடன் ஒரு காலத்தில் மிகநெருக்கமாக இருந்த இவர், ஜெயேந்திரர் பற்றியும் விஜயேந்திரர் பற்றியும் ரகு பற்றியும் கடுமையான விமர்சனங்களை மேற்கொண்டாரென்றும் கூறப்படுகின்றது.

ஜெயேந்திரர் யாருக்கும் சொல்லிக்கொள்ளாமல் மடத்தின் விதிமுறைகளையும் மீறித் தலைக்காவிரிக்குப் போய்விட்டுத் திரும்பியபோது, ஜெயேந்திரரை நேரடியாகவே கடுமையாக விமர்சனம் செய்தவர் இராதாகிருஷ்ணன். இந்த விடயம் தெரிந்து மகா பெரியவரிடம் எடுத்துக்கூறி இருவருக்குமிடையே பிரச்சினைகளை ஏற்படச் செய்தவரும் இவர்தானாம்.

இதன் பின்னர்தான் ஆடிட்டர் இராதாகிருஷ்ணனின் வியாபாரத் தில்லுமுல்லுகள் குறித்து மகாபெரியவரின் கவனத்துக்கு ஜெயேந்திரர் கொண்டுவந்தாரென்றும் சொல்லப்படுகின்றது. ஜெயேந்திரருடன் ஏற்பட்ட முரண்பாடுகளையடுத்து மடத்திலிருந்து வெளியேற்றப்பட்ட இராதாகிருஷ்ணன், பின்னர் மீண்டும் மடத்து நிர்வாகிகளைத் தாஜா பண்ணி அங்கு வந்து இணைந்து கொண்டாராம்.

மடத்துக்கு வரும் தொழிலதிபர்களோடு நெருக்கமான தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு தனது 'கார்ட்போட்' பெட்டி வியாபாரத்துக்கு ஆடர்களைப் பெற்று வந்தாரென்று மகாபெரியவரிடம் ஜெயேந்திரர் சொல்லியிருக்கிறார். இதன் விளைவாக இராதாகிருஷ்ணனும் அவர் தம்பி ரகுவும் மடத்திலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். பின்னர் மிக முக்கிய அரசியல் புள்ளிகளின் சிபாரிசின் பேரில் இவர் மடத்தில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இராதாகிருஷ்ணன் 'குரு பாக்கேஜ் இன்டஸ்ரீஸ்' என்ற பெயரிலேயே ஆரம்பத்தில் தொழிலை மேற்கொண்டார். பின்னர் 'கப்ஸ்' என்ற பெயரில் 'கார்ட்போட்' தொழிற்சாலையை ஆரம்பித்தார். 2002ஆம் ஆண்டு தாக்குதலுக்கு இலக்கான இராதாகிருஷ்ணன், தன்னைத் தாக்கியவர்கள் யாரென்று தெரியாமல் பொலிஸாருக்கு அளித்த வாக்குமூலத்தில் குறிப்பிட்டிருந்தால், இரண்டு வருடங்களாகச் சந்தேகநபர்களைக் கைதுசெய்ய முடியவில்லை. இரண்டு ஆண்டுகள் கழித்துச் சங்கரராமன் கொலை தொடர்பாக மீனாட்சிசுந்தரம் என்பவர் கைதுசெய்யப்பட்டபோதே, இராதாகிருஷ்ணனைத் தாக்கியவர்கள் யாரென்ற தகவல் பொலிஸாருக்குக் கிடைத்தது. பிரபல 'தாதா' அப்புவின் கையாளான கதிரவன் சொல்லித்தான் இராதாகிருஷ்ணனைத் தாக்கியதாக மீனாட்சிசுந்தரம் பொலிஸாரிடம் தெரிவித்தான். இத் தாக்குதலை நடத்திய கூலிப்படைக்கும் கதிரவனே பணம் வழங்கியதாகவும் மீனாட்சிசுந்தரம் தெரிவித்தான். இதன் எதிரொலியாகக் கதிரவனைப் பொலிஸார் கைது செய்தனர். அவன் திடுக்கிடும் வாக்குமூலம் ஒன்றினை அளித்துள்ளான். ஜெயேந்திரருக்கு இராதாகிருஷ்ணன் தொல்லைகொடுத்து வந்ததாகவும், அவர் சொல்லித்தான் கூலிப்படையைத் தான் ஒழுங்கு செய்ததாகவும், இராதாகிருஷ்ணனைக் கொலை செய்ய வேண்டுமென்றும், எச்சரிக்கை செய்யும் வகையில் தாக்கினால் போதுமென்றும் ஜெயேந்திரர் கூறியிருந்தார் என்றும் கதிரவன் தனது வாக்குமூலத்தில் தெரிவித்திருந்தான்.

கதிரவன் கொடுத்த தகவலின்பேரில் முதலில் ஆனந்தகுமார் என்பவனின் வீட்டைப் பொலிஸார் முற்றுகையிட்டுச் சோதனை நடத்தினார்கள். வாள்வெட்டுக் காயத்துக்கு இலக்காகி சென்னையிலுள்ள பிரபல தனியார் மருத்துவமனையொன்றில் ஆனந்தகுமார் சிகிச்சை பெற்றது தொடர்பான விபரங்கள், ஸ்கான் ரிப்போர்ட் ஆகியவை சிக்கின. ஆனந்தகுமாரைக் கைது செய்து 'உரிய முறையில்' பொலிஸார் விசாரணை நடத்தியபோது திடுக்கிடும் தகவலொன்று வெளியானது.

**(தொடரும்.....)**



சந்திர னொளியில் அவளைக் கண்டேன்,
சரண மென்று புகுந்து கொண்டேன்;
இந்திரி யங்களை வென்று விட்டேன்,
எனதென் ஆசையைக் கொன்று விட்டேன்.

– சுப்பிரமணிய பாரதியார்



# பாப்பா முரசு

# நட்சத்திரங்கள் எத்தனை?

பாப்பா முரசு சிறுகதை

மாளவ நாட்டை மகேந்திரன் என்ற மன்னர் சிறப்பாக ஆட்சி செய்து வந்தார்.

மன்னர் மகேந்திரனின் சபையில் அமைச்சர் பொன்பாண்டியன் இருந்தார்.

அமைச்சர் பொன் பாண்டியன் மன்னருக்கு மிகவும் நெருக்கமானவர். மன்னரால் தீர்வு காண முடியாத பிரச்சினைகள் ஏதாவது இருக்குமானால் மன்னர் அந்தப் பிரச்சினையை பொன்பாண்டியனிடம் ஒப்படைத்து விடுவார்.

அமைச்சர் பொன் பாண்டியனும் அந்தப் பிரச்சினையைத் தெள்ளத் தெளிவாக ஆராய்ந்து அதற்குச் சரியான முடிவைத் தெரிவித்துவிடுவார்.

அமைச்சர் பொன் பாண்டியனின் மீது மற்ற அமைச்சர்கள் எல்லோரும் பொறாமையடைந்தனர். மன்னர் முன்னால் எப்படியாவது பொன் பாண்டியனை அவமானப்படுத்த வேண்டும் என்று முடிவு செய்தனர்.

ஒருநாள் மாளவ நாட்டு அரச சபைக்கு வெளிநாட்டிலிருந்து ஒரு பண்டிதர் வந்தார். அவர் பெயர் காளியூரன்.

மற்ற அமைச்சர்கள் எல்லாம் காளியூரனின் உதவியோடு பொன் பாண்டியனை அவமானமடையச் செய்யவேண்டும் என்று முடிவு செய்தனர்.

காளியூரனைத் தனியாக அழைத்து, பொன் பாண்டியனை மன்னர் முன்னிலையில் அவமானப்படுத்தி விட்டால் ஏராளமான பொன், பொருட்கள் எல்லாம் பரிசாகக் கொடுப்பதாகத் தெரிவித்தனர்.

அமைச்சர்கள் தரப்போகும் பொன், பொருளுக்கு ஆசைப்பட்ட காளியூரனும் அதனைச் செய்வதாக வாக்குக் கொடுத்தார்.

அன்றைய தினம் அரச சபை கூடியதும் காளியூரன் மன்னரைக் காண வந்தார்.



"அரசே வணக்கம்! நான் வெளி நாட்டைச் சேர்ந்த பண்டிதன். இந்த உலகில் நான் எங்கெல்லாமோ சென்று பல்வேறு அறிவாளிகளைச் சந்தித்து வருகிறேன். அறிவாளிகள், இருந்தால் அவர்கள் என்னோடு போட்டியிடட்டும்! என்னை வெல்லும் அளவுக்கு இந்த சபையில் யார் இருக்கிறார் கள் என்று பார்த்து விடுகிறேன்" என்று ஆணவத்துடன் கூறினார்.

அந்த நேரத்தில் அரச சபையில் இருந்த அமைச்சர் பொன் பாண்டியன் எழுந்து கொண்டார்.

'இந்தக் காளியூரன் வேண்டுமென்றே நம்மைப் போட்டிக்கு அழைத்து மன்னர் முன்னே அவமானப்படுத்த வேண்டும் என்று நினைக்கிறார். இது ஏனைய அமைச்சர்களின் சூழ்ச்சி போலத் தெரிகிறது. நாம் இவருக்குத் தக்கவிதமாகப் பதிலடி கொடுக்க வேண்டும்' என்று முடிவு செய்தார்.

உடனே அவர் காளியூரனைப் பார்த்து "அறிவுப் போதகரே! உம்மோடு போட்டியிட நான் வந்துள்ளேன். நான் எந்த வகையில் உம்மோடு போட்டியிட வேண்டும்! என்று சொல்லும்!" என்றார்.

உடனே காளியூரன் "பொன் பாண்டியரே! நான் கேட்கின்ற கேள்விகளுக்கு நீர் சரியான பதிலைச் சொல்ல வேண்டும்" என்றார்.

"ஓ தாராளமாக என்னிடம் கேள்வியைக் கேளுங்கள்! நான் பதிலைச் சொல்லுகிறேன்" என்றார் பொன் பாண்டியன்.

காளியூரன் சிறிது நேரம் யோசனை செய்தார். பின்னர் பொன் பாண்டியனைப் பார்த்தார்.

"வானத்தில் எத்தனை நட்சத்திரங்கள் இருக்கின்றன? அவைகளின் எண்ணிக்கையைச் சரியாகச் சொல்ல வேண்டும்" என்றார் காளியூரன்.

"அடடே! தங்களின் கேள்வி மிகவும் சுலபமாக இருக்கின்றதே! நான் வேறு ஏதோ கேட்கின்றீர்களோ என்று எதிர்பார்த்தேன். ஆனால் நீங்களோ இந்த சாதாரண கேள்வியைக் கேட்கின்றீர்கள்! இதற்கான விடையைச் சுலபத்தில் சொல்லி விடலாமே!" என்றார் பொன் பாண்டின்.

"எங்கே சொல்லும்" என்று வியப்போடு கேட்டார் காளியூரன்.

"நேற்று இரவு வரை எண்ணிப் பார்த்ததில் இலட்சத்துப் பதினாறு நட்சத்திரங்கள் இருந்தன. வேண்டுமானால் இன்றைய இரவு நட்சத்திரங்கள் எல்லாம் சரியாக இருக்கிறதா என்பதை நீர் எண்ணிப் பார்த்துக்கொள்ளும்! உமக்குத் துணையாக இங்கே உம்மைப் போட்டிக்கு அனுப்பிவைத்த மற்றவர்களையும் அழைத்து எண்ணச் சொல்லும்!" என்றார் பொன் பாண்டியன்.

பொன் பாண்டியன் திடீரென்று தன் கேள்விக்கு இப்படி ஒரு பதிலைச் சொல்வார் என்று காளியூரன் நினைக்கவில்லை கேள்விக்கான பதில் தெரியாமல் தோல்வியடையப் போகிறார் என்று எதிர்பார்த்தார். இப்போது நிலை தடுமாறி விட்டார்.

உடனே அரசனைப் பார்த்த அவர் "மன்னா! என்னை மன்னித்து விடுங்கள். அமைச்சர் பொன் பாண்டியனின் அருமை தெரியாமல் அவரோடு போட்டியிட வந்து விட்டேன். இப்போது என்னுடைய தோல்வியை ஒப்புக்கொள்கிறேன்.

தங்கள் அரச சபையில் உள்ள அமைச்சர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து அமைச்சர் பொன் பாண்டியனை உங்கள் முன்னிலையில் அவமானப்பட வைத்தால் பணம், பொருள், பொன் எல்லாம் தருவதாக ஆசைகாட்டினார்கள். அதன் பொருட்டே நான் அமைச்சர் பொன் பாண்டியனைப் போட்டிக்கு அழைத்தேன். போட்டியில் அவர் அறிவானது வானத்தில் இருக்கும் எட்டாத நட்சத்திரத்திற்குச் சமம் என்பதை உணர்ந்து கொண்டேன். அவர் அறிவை யாருமே எட்டி விட முடியாது என்பதை உணர்ந்து கொண்டேன். தயவுசெய்து என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்" என்றார்.

காளியூரன் இவ்வாறு கூறியதும் மற்ற அமைச்சர்கள் எல்லாம் தலை கவிழ்ந்தபடி இருந்தனர்.

# ஆத்திசூடி

## அலகு அலாதன செயேல்

நீ பிறர் இகழத்தக்க கேவலமான காரியங்களைச் செய்யாதே!

-ஔவையார்

நிரஞ்சலா, கண்டி.

# அதிசய உலகம்



நாட்டியம் கற்றுக்கொள்ள நடன ஆசிரியர்களைத் தேடிக்கொண்டு போக வேண்டும் என்ற நிலை கொஞ்சம் கொஞ்சமாக மாறிவிடும்! மேலை நாடுகளில் !பாலே' டான்ஸ்களை இப்போது கம்ப்யூட்டரே கற்றுக் கொடுக்கத் துவங்கிவிட்டது. மெர்ஸ் கன்னிங்ஹாம் என்பவர் இந்த வகை கம்ப்யூட்டரை உருவாக்கியிருக்கிறார். இந்தக் கம்ப்யூட்டர் இசைக்கு ஏற்றபடி எப்படி ஆட வேண்டும் என்பதை கிராப்பிக்ஸ் கோடுகளாகக் காண்பிக்கும். ஆடுபவர்கள் அதைப் பார்த்துத் தெரிந்துகொண்டு ஆடலாம். பரதநாட்டியமும் விரைவில் இந்தப் பாணிக்கு வரலாம்.

# உங்கள் பொது அறிவு எப்படி?

1. மின் காந்த அலைகளைப் பற்றி முதலில் அறிந்தவர்?
**கிளார்டு மக்ஸ்வெல்**

2. ஒலி அலைகளை வானொலி அலையாக மாற்றும் முறையை அறிந்தவர்?
**ஹென்றிக்**

3. மின்சக்தியை அளக்கும் முறையைக் கண்டவர்?
**ஜூல்**

4. ஒளியின் வேகத்தை முதலில் கணித்தவர்?
**பிசேயஸ்**

5. இரத்த மாற்று முறையை முதலில் அறிமுகஞ் செய்தவர்?
**லான்ட் ஸ்ரெயினர்.**

6. சூரிய ஒளியின் சக்தியால் வானொலியை இயங்கச் செய்யும் முறையை முதலில் கண்டவர்?
**டேவிட் சார்னாய்.**

7. மின்சக்தியால் நோயைக் குணமாக்கும் முறையைக் கண்டவர்?
**கல்வாணி**

8. ஒப்பு உறுப்பமைப்பியல் பற்றி முதலில் ஆராய்ந்தவர்?
**சூவியர்.**

9. அணு எண்களை வரிசைப்படுத்தும் முறையை முதலில் வகுத்தவர்?
**மோஸ்லி.**

10. பூமி உருண்டையென முதலில் நிரூபித்தவர்?
**லக்கறல்ஸ்**

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **27.04.2005.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **592**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 590


பரிசுக்குரியவர்:
எப். மாசிபா மௌஜூட்,
B14 1/7, சொய்சா தொடர்மாடி, மொரட்டுவ.

### பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| எம் .எச். அமானி, தரம் - 3, கஹடட்டபிடியா முஸ்லிம் வித்தியாலயம், கம்பளை. | இ. இந்துஜா, கண்டி வீதி, நகராட்சி மன்ற விடுதி, காந்தி நகர், திருகோணமலை. |
| ரஞ்சன் வினோ, T.V.K மில் ரோட், செங்கலடி. | என். மாலதி, 275, மாரியம்மன் கோயிலடி, மன்னார் வீதி, புத்தளம். |
| ப. கனீஸ்வரன், சென். ஜேம்ஸ் எஸ்டேட், ஹாலி - எல | எல். பி. கீர்த்தனா, தரம் - 3 கொ/நல்லாயன் அரசினர் தமிழ் வித்தியாலயம், கொழும்பு. |
| சா. ஸ்ரீஹஜன், ஸ்ரீதேவி கோயில், கொம்மாதுறை, செங்கலடி. | பு. தமாரா கெத்சியா, பசல்ஸ் வீதி, வெள்ளவத்தை. |
| த. சிமாயா, மாங்குளம், நேரியகுளம். | ஏ. ஜெ.எப். பஸ்னா, 173/5B கந்தவத்த, மல்வானை. |

# தகவல் பெட்டி





## உயரத்துக்குப் போட்டியா?


உலகில் மிக உயரமான மனிதராக ரொபேட் பேர்ஷிங் என்பவர் கருதப்படுகிறார். இவரின் உண்மையான உயரம் 2.72 மீற்றர் (8' 11''). அமெரிக்காவைச் சேர்ந்த இவர் ஆரம்பத்தில் சாதாரண மனித வளர்ச்சியைக் கொண்டிருந்த போதிலும் இவரின் மூளையில் ஏற்பட்ட சிறு கட்டியொன்றை சத்திரசிகிச்சை மூலம் அகற்றியதும் இவரின் வளர்ச்சிப் போக்கு அபரிமிதமாக இருந்தது. தனது ஒன்பதாவது வயதில் இவர் 1.8 மீற்றர் (5' 11'') உயரம். இவரின் உயரத்திற்கேற்றாப் போல் இவரின் நிறையும் அதிகரித்தே உள்ளது. நிறை 199 கிலோ கிறாம். இதுதான் ஆளும் வளரணும்......!

## காவல் நாய்




பெலரஸ் நாட்டின் எல்லைகளைப் பாதுகாப்பதில் நாய்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஒவ்வொரு வருடமும் நாய்களுடன் 100 அறிவுரையாளர்களுக்கும் பயிற்சி வழங்கப்படுகிறது. இது ஸ்மோர்கன் எல்லைப் பிரதேசத்தில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருக்கும் நாயாரும் அதன் ஆலோசகரும்.

## இன ஒற்றுமைக்கு இதுவொரு சான்று



பொஸ்னிய நாட்டு ஆசிரியர் ஒருவர் தனது மாணவனின் வாயில் டேப் ஒட்டியதற்கு, நெதர்லாந்தில் வாழும் பொஸ்னியர் எதிர்ப்புத் தெரிவித்து நின்றபோது பிடிக்கப்பட்டதே இப் படம். என்ன இன ஒற்றுமை. இதுதான் 'தான் ஆடாவிட்டாலும் தசை ஆடும்' என்பதோ?

## பாண் ஓவியம்




பல்வேறு அளவுகளில் பாணை 'ரோஸ்ட்' செய்து, அவைகளைக் கொண்டு அழகான ஆக்கங்களை நிர்மாணிப்பதில் வல்லமை பொருந்தியவர் மொரிஸ் பேனட் என்ற கலைஞர். நியூஸிலாந்து வாசியான மொரிஸ் அண்மையில் 3525 'ரோஸ்ட்' செய்த பாண் துண்டுகளைக் கொண்டு, உலகின் பிரபல ரொக் பின்னணிப் பாடகரான 'சீடி எல்டிஸ் பிரெஸ்லி'யின் உருவப் படத்தை நிர்மாணித்துள்ளார்.

## முட்டாள் தின நையாண்டி

ஏப்ரல் முதலாம் திகதியை முட்டாள் தினமாக உலகிலுள்ள அனேகமானோர் ஏற்றுக்கொண்டுள்ளனர். இந் நாளில் பலர் தமது சொந்தபந்தங்களையும், நண்பர்களையும் கூட முட்டாள்களாக்குவதில் பெரும் ஆனந்தம் அடைகிறார்கள்.

இங்கே ஜப்பானியர் ஒருவர் பெங்குவின்களை முட்டாளாக்க முயற்சிசெய்து கொண்டிருந்தபோது பிடித்த படம். இவர் வேறு யாருமல்ல, ஜப்பான் டோக்கியோ மிருகக்காட்சிச் சாலையின் இயக்குநரான டேரியுகி கோம்யாய் என்பவராவார். ஏப்ரல் முதலாம் திகதி இவர் விசாலமான பெங்குவின் போல் வேடமிட்டு பெங்குவின்களின் கூட்டுக்கு வந்தபோது பார்வையாளர்கள் மாத்திரமின்றி பெங்குவின்களும் ஏமாற நேர்ந்துவிட்டது என்பதை அவைகளின் அண்ணார்ந்த பார்வையே காட்டிக் கொடுக்கிறது.



## பிராணிக்குப் புத்தாடை

கிறிஸ்தவர்களின் திருவிழிப்பு நாள் (பாஸ்கா) அன்று சர்வதேச நாடுகள் வித்தியாசமான நிகழ்ச்சிகளை நடத்துகின்றன. அமெரிக்காவின் நியூயோர்க் திருவிழிப்பு நாள் ஊர்வலத்தில் அலங்கார ஆடை அணிந்து அணி வகுத்துச் சென்ற நவீன நாயாரே இவர்.





சுகா - சந்தோஷி - புளோரா

## ஹரிணி என்ற ஜெனிலியா!

'பாய்ஸ்' படத்தில் அறிமுகமான ஹரிணிதான் இப்போது 'சச்சின்' படத்தில் ஜெனிலியா என்ற பெயரில் விஜய்க்கு ஜோடியாக நடித்து வருகிறார். அவரிடம் "ஏன் இந்தப் பெயர் மாற்றம்? பசங்க படம் தந்த அதிர்ச்சித் தோல்விதான் காரணமா? அல்லது எந்த ஜோசியக்காரரும் சொன்னாரா?" என்று கேட்டால்.....


"ஐயையோ அப்படியெல்லாம் இல்லை" என்கிறார். அம்மா பெயர் ஜென்னட். அப்பா பெயர் நீல். ஜென்னட்+நீல்=ஜெனிலியா எனப் பெயர் மாற்றத்திற்குக் காரணம் சொல்கிறார்.

## ஷெரீன்!

**ஷா**கிரா அலி எனப் பெயர் மாற்றிக்கொண்டு பாலிவுட் கனவுகளோடு மும்பையில் செட்டிலாகிவிட்ட ஷெரீனை மறுபடி கோலிவுட்டுக்குக் கூட்டிவர ஏற்பாடு நடக்கிறது. 'கண்களால் கைதுசெய்' ஹீரோ வசீகரன் நடிக்கும் '.'.ப்ளவர்ஸ்' படத்துக்காகத்தான் இந்த ஏற்பாடாம்.

## சத்யராஜ்!

**ச**த்யராஜ் நடிக்கும் '6.2' படத்தில் தொழிற்சங்கத் தலைவர் ஒருவரைக் கொலை செய்துவிடுகிறார்கள். அதை நேரில் பார்த்த சாட்சியாகிறார் சத்யராஜ். இந்தச் சாட்சி சத்யராஜை, கண்ட நேரத்துக்குப் பொலிஸார் ஸ்டேஷனுக்குக் கூப்பிட்டு விசாரிக்க....கடுப்பான சத்யராஜ், பொலிஸ் ஷ்டேஷனிலேயே பால் காய்ச்சி குடியேறிவிடுகிறாராம். அரசுத் தரப்பு சாட்சிகள் படும் பாட்டை, படு நக்கலாக இப்படிச் சொல்லியிருக்கிறார்கள் படத்தில்.



கரண்

'செல்லமே' படத்தில் இன்கம்டெக்ஸ் ஆபிஸராக வந்த விவேக், 'அந்நியன்' படத்தில் சி.பி.ஐ.அதிகாரி வேடத்தில் வந்து குலுங்க வைக்கிறாராம். "நிஜத்தில்தான் நம்மால் ஒரு அதிகாரியாக வரமுடியவில்லை. சினிமாவிலாவது முடிகிறதே" என்கிறார் விவேக்!

# சினிவிசிட்



சின்னா
சினேகா - அர்ஜூன்

**பெ**ங்களூரில் முக்கிய பிரதானச் சாலையில் இருந்த த்ரீ ஸ்டார் ஹோட்டல் ஒன்றை விலைக்கு வாங்கியுள்ளார் ரஜினி. மூன்று மாத காலமாகப் பேச்சுவார்த்தையில் இருந்த இந்த பிஸினஸ் டீலிங் தற்போது முடிவுக்கு வந்துள்ளது. ஹோட்டல் முழுவதையும் மாற்றியமைத்து லேட்டஸ்ட் டெக்னாலஜியையும் புகுத்தி, த்ரீ ஸ்டார் ஹோட்டல் ஒன்றை .'.பைவ் ஸ்டார் ஹோட்டலாக மாற்றப் போகிறாராம். ஹோட்டல் இருக்கும் அந்தப் பகுதியில் ஒரு சதுர அடி 5000லிருந்து 7000 ரூபா வரை விலைபோகின்றதாம். அப்போ ரஜினி வாங்கியுள்ள ஹோட்டலின் மதிப்பை நீங்களே கணக்குப் போட்டுப் பார்த்துக்கொள்ளுங்கள்.

**சோ**ழியன் குடுமி சும்மா ஆடாது என்பார்கள்....அப்படித்தான் ஆகிவிட்டது நக்மாவின் கதையும்! என்ன என்கிறீர்களா? ஏற்கனவே தாவூத் இப்ராஹிம் தம்பியுடன் தொடர்பு, அதன்மூலம் தீவிரவாதிகளுடன் தொடர்பு, அதனால் சி.பி.ஐ. கெடுபிடி என்று இருக்க....இந்நிலையில் அதை மேலும் தனது நடவடிக்கையால் சர்ச்சைக்குள்ளாக்கியிருக்கிறார் நக்மா!

நக்மாவின் இப்படிப்பட்ட நடவடிக்கையால் அவதிக்குள்ளாகியிருப்பவர்கள் நான்கு அரசியல் புள்ளிகள்தான்!

புளோரா, என்ற மூன்று குதிரைகளில் தருண் நடித்திருக்கும் தெலுங்குப் படம் ரீமாசென், கஜாலா சவாரி செய்பவராக ஒன்று தமிழில் 'இவன் யாரோ' என்ற பெயரில் வரவிருக்கிறது. இதில் விசேஷம் என்னன்னா....'ராம்' படத்தில் இழுத்துப் போர்த்திக்கொண்டு நடித்த கஜாலா, அஜால் குஜால் வேலைகளில் சூட்டைக் கிளப்பியிருக்கிறார் என்பதுதான். புளோரா, ரீமாசென் பற்றிச் சொல்லவே வேண்டாம். தமிழிலேயே தாண்டிக் குதிப்பார்கள். தெலுங்கிலே என்றால் கேட்கவா வேண்டும்...ஆகவே ஜாக்கிரதையாக இருங்கள்...ஒரு சுனாமி என்றாலே தாங்க முடியாது. இதில் மூன்று சுனாமி கவர்ச்சி அலை வருகிறது.



ஒரு நாள் ஒரு கனவு
படத் தொடக்கநாள்


**செ**ல்வராகவன் இயக்கத்தில் தனுஷ் நடிக்க லட்சுமி மூவிமேக்கர்ஸ் தயாரிப்பதாக இருந்த படம் 'ஒரு நாள் ஒரு கனவு'! தனுஷ்-சோனியா அகர்வால் - நமிதா இந்த மூன்று கேரக்டர்கள் மட்டுமே கதையில் வருவதாக பண்ணியிருந்தார் செல்வராகவன். இந்தக் கதை ஓடுமோ ஓடாதோ எனத் தயாரிப்பாளர்களுக்குச் சந்தேகம் வந்ததால், இந்தப் படம் கைவிடப்பட்டு அதற்குப் பதிலாக செல்வராகவன் - தனுஷ் கூட்டணியில் 'புதுப்பேட்டை' படம் தயாராகிறது. ஆனால் 'ஒரு நாள் ஒரு கனவு' டைட்டில் அழகாக இருந்ததால், ஸ்ரீகாந்த்-பாசில்-சோனியா அகர்வால் கூட்டணியில் லட்சுமி மூவிமேக்கர்ஸ் தயாரிக்கும் படத்திற்கு இந்த டைட்டிலைத் தாரை வார்த்திருக்கிறார் செல்வராகவன். 'காதலுக்கு மரியாதை'க்குப் பிறகு மீண்டும் இந்தப் படத்தை இயக்கவிருக்கிறார் பாசில். இசை - இளையராஜா!



**த**ற்கொலை செய்துகொண்ட தயாரிப்பாளர் ஜீ.வி.க்கு சொந்தமான குட்லக் ப்ரிவியூ தியேட்டர் வரும் 16ஆந் திகதி வங்கிக் கடனுக்காக ஏலத்திற்கு வருகிறது. மிக இராசியான தியேட்டர் என்று கோலிவுட்டினரால் சொல்லப்படும் இதை, வாங்குவதற்காக நடிகர் விஜய், டி.ராஜேந்தர் உட்பட பல பிரபலங்கள் களமிறங்குகிறார்கள்.



**தெ**லுங்கிலிருந்து தமிழில் கால் பதித்த லயாவுக்கு 'கஜேந்திரா'வுக்குப் பிறகு சரியான வாய்ப்பில்லாததால், மலையாளப் பக்கம் தாவினார். மோகன்லால், ஜெயராம் என்று மூத்த நடிகர்களோடு நடித்துவிட்டு, அங்கிருந்து கன்னடப் பக்கம் ஒதுங்கினார். அப்படிச் சென்றவரை மீண்டும் தமிழுக்கு இழுத்து வந்திருக்கிறார் சரத்குமார். 'சாணக்யா' படத்தில் ஏற்கனவே கவர்ச்சி சுனாமியான நமீதா நடித்துக்கொண்டிருந்தாலும், இன்னொரு நாயகி கேரக்டருக்குத்தான் லயாவை கூட்டி வந்திருக்கின்றனர். ஆந்திராவில் பிரபல மருத்துவமனையில் புகழ்பெற்ற கிட்னி ஸ்பெஷலிஸ்ட் மருத்துவராக இருக்கும் லயாவின் தந்தை அவரது நடிப்பாசைக்குச் சம்மதம் தெரிவித்ததோடு ஒரு கண்டிஷனையும் போட்டார். அது என்னவென்று கேட்கிறீர்களா? எக்காரணம் கொண்டும் லயா காதல் வசப்படக்கூடாது என்பதுதான் அந்தக் கண்டிஷன்.



தாஸ்
ரவி - ரகசியா

'உன்னை எனக்கு பிடிச்சிருக்கு' படத்தில் நடிகர் செந்திலின் மகன் இரண்டாவது ஹீரோவாக நடித்து வருவதைப் பற்றிச் செந்திலிடமே கேட்டபோது... "நான் ஒரு சீன் அரைசீன் நடிச்சுதான் பெரிய கேரக்டரில் நடிச்சேன். ஆனால் என் பையனுக்கு எடுத்தவுடனேயே செகண்ட் ஹீரோ கேரக்டர் கிடைச்சிருக்கே. சந்தோஷம்தான்" என்கிறார்.

நெகட்டிவ்வான விஷயங்களையும் பாசிட்டிவ்வாக எடுத்துக்கொள்கிற செந்திலின் அந்த மனப்பான்மைதான் வெற்றியின் இரகசியமோ!

முதல் கதாநாயகனாக அஸ்வினும், நாயகியாக அஸ்வினியும் நடிக்கிறார்கள். இன்னொரு நாயகி சுகா! 'அது' வில் பேயாக வந்தவர் 'மண்ணின் மைந்தனி'ல் நாயகியாக வந்தார். அந்தப் படம் ஓரளவு கைகொடுத்ததால், இந்தப் படத்தில் இன்னொரு நாயகியாகத் தரிசனம் தருகிறார் சுகா!

---

'ஆசை ஆசையாய்', 'தித்திக்குதே'....என இரண்டு படமும் ஜீவாவுக்கு கைகொடுக்கவில்லை. ஆனால் இதற்கெல்லாம் வட்டியும் முதலுமாகச் சேர்ந்து ஜீவாவை உச்சத்திற்குக் கொண்டுபோய் விட்டது அமீரின் 'ராம்' படம். அடுத்து 'கண்ணெதிரே தோன்றினாள்' பட இயக்குநர் ரவிச்சந்திரனின் புதிய படத்தில் நடிக்க ஒப்பந்தமாகியிருக்கும் ராமை அடடா....ஜீவாவைச் சந்தித்து நம் வாழ்த்தைச் சொன்னோம்.

"ஆடியன்ஸோட சேர்ந்து 'ராம்' படம் பார்த்தோம். பிரேம் பை பிரேம் இரசிகர்கள் சிலாகிச்சுப் பார்க்கிறாங்க. தியேட்டரில் என்னைப் பார்த்துவிட்டு தூக்கிவைத்து கொண்டாடினார்கள். உன்னுடைய பிறந்தநாள் பெப்ரவரி 3தான். ஆனால் ராம் படம் வெளியான மார்ச் 3தான் உன் உண்மையான பிறந்த நாள் என என் அம்மாவே சந்தோஷப்பட்டார். இத்தனை சந்தோஷத்துக்கும் காரணம் டீம் ஒர்க் கம்பெனியின் கலைஞர்களும் குறிப்பாக....டைரக்டர் அமீர் ஸாரும்தான்" என நெகிழ்ந்துபோய் பேசுகிறார் ஜீவா.

"கமல் ஸாரின் குணாவும் விக்ரம் ஸாரின் சேதுவும் எனக்கு ரொம்பப் பிடித்த படங்கள். சினிமா ஆசை வந்தபோதே அப்படி ஒரு படம் பண்ணவேண்டும் என்கிற கனவும் வந்துவிட்டது. அந்தக் கனவு இத்தனை சீக்கிரம் நிறைவேறும் என்று நான் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. ஓரிரு வருடங்களுக்கு முன்பே இந்தக் கதையின் அவுட் லைனை என்னிடம் அமீர் சொன்னார். அவர் சொன்ன விதமே என்னை அந்தக் கதைக்குள் இழுத்துக்கொண்டு போய்விட்டது. அப்போதிலிருந்தே 'ராம்' கேரக்டருக்காக நிறைய ஹோம் ஒர்க் செய்யத் தொடங்கினேன். பல்வேறு தரப்பட்ட மனிதர்களைப் பார்த்து அவர்களின் வித்தியாசமான குணாதிசயங்களை அப்சர்வ் பண்ணினேன். இப்படி நான் செய்த பயிற்சிதான் இந்த ஜீவா 'ராம்' ஆகவே மாறிப்போகக் காரணம். அந்த உழைப்புக்கு இப்போது சரியான சம்பளமும் கூடவே ஊக்க போனஸீம் கிடைத்திருக்கிறது. தொடர்ந்து ஆக்ஷன் வித் லவ் சப்ஜெக்டுகளில் தனித்துவம் வாய்ந்த கதாபாத்திரங்களில் நடித்து இப்போது கிடைத்திருக்கும் பெயரைத் தக்கவைத்துக் கொள்வேன்" என்று அழுத்தம் திருத்தமாகப் பேசினார் ஜீவா.



சுபா

'கனா கண்டேன்' படத்தில் ஸ்ரீகாந்தோடு கன்னாபின்னா கவர்ச்சி காட்டி நடித்து வருகிறார் கோபிகா. சென்னை அண்ணா சாலையில் ஒரு பள்ளிக்கூட முகப்பில் பிரமாண்டமாக ஒரு விளம்பர போர்டு வைக்கப்பட்டிருந்தது. அதில் ஸ்ரீகாந்தின் நாடியில் கோபிகா கடிப்பதுபோல் ஒரு காட்சி இடம்பெற்றிருந்தது. இதற்கு பள்ளி மாணவிகள் எதிர்ப்புத் தெரிவிக்கவே...சென்னை கமிஷனரிடம் பள்ளி நிர்வாகம் புகார் செய்தது. புகாரின் பேரில் அந்தப் போர்டை இரவோடு இரவாக எடுத்துவிட்டனர். அந்த அளவுக்குச் சர்ச்சைக்குரிய கவர்ச்சிக் காட்சிகளில் நடித்து வருகிறார் கோபிகா. இதுபற்றி கோபிகாவிடம் கேட்க......

"கதைக்குத் தேவைப்பட்டதால் இப்படி நடிக்கிறேன். இதில் என்ன தப்பு?" என நெஞ்சை நிமிர்த்துகிறார் கோபிகா.

---

சீனிமாவில் எத்தனையோ நட்சத்திரங்கள் இரட்டை வேடம் போட்டிருக்கிறார்கள். முதல்முதலாக ரம்யாஸ்ரீ, ரமாஸ்ரீ என்கிற இரட்டை இளம் பெண்கள் கதாநாயகிகளாக நடிக்கிறார்கள். குறைந்தது ஆறு வித்தியாசம்கூட அவர்களிடம் கண்டுபிடிக்க முடியாது. படத்தின் பெயர் 'நினைக்காத நேரமில்லை'.



இவன் யாரோ
தருண் - ரீமாசென்


சூர்யா நடிக்கும் 'கஜினி' படத்துக்காக சென்னை, கிண்டி கேம்பகோலாவில் சென்னையின் நெருக்கமான பகுதிகள் எப்படியிருக்குமோ அதேபோன்று அச்சு அசலாகப் பல இலட்சம் செலவில் செட் போட்டிருக்கிறார்களாம்.

ஃபைனான்ஸியர்கள் தொடுத்த நீதிமன்ற வழக்கால், ரிலீசாகமலேயே பெட்டிக்குள் முடங்கிப்போன 'உள்ளம் கேட்குமே' படத்தை எப்படியாவது வெளிக்கொண்டுவர வேண்டும் என்று மும்முரமாகக் காரியத்தில் இறங்கினார். ஒளிப்பதிவாளரும் இயக்குநருமான ஜீவா. அதற்குப் பலனும் கிடைத்துவிட்டது. வழக்கை விசாரித்த நீதிபதி, படத்தை முதலில் வெளியிடட்டும். அதன்பிறகு அதன்மூலம் வரும் வருமானத்தை, தேசிய வங்கியில் கட்டவேண்டும். எவ்வளவு தொகை சேர்கிறதோ, அதைப் பகிர்ந்து கடன்காரர்களுக்கு நீதிமன்றமே வழங்கும் என தீர்ப்பு வழங்கி....படத்திற்குத் தடையை நீக்கிவிட்டார். எது எப்படியே இப்போது அஸின் பயங்கர உற்சாகத்திற்கு மாறிவிட்டார். "தமிழில் நான் நடித்த முதல் படமே ரிலீசாகாமல் போய்விட்டதே என்கிற வருத்தம் இப்போது இல்லை" என்கிறார் அஸின்.

---

அரசியலில் தீவிரமாக ஈடுபட முடிவுசெய்திருக்கும் விஜயகாந்த், அதற்கு ஸ்ட்ராங்கான அடித்தளமாகப் 'பேரரசு' படம் இருக்க வேண்டும் என்று விரும்புகிறார். இதற்காக தற்சமயம் படப்பிடிப்பை இரத்துச் செய்துவிட்டு, ஒதுங்கியிருக்கிறார் டைரக்டர் உதயன். படத்தில் தீப்பொறி பறக்கும் அளவுக்கு அரசியல் சம்பந்தப்பட்ட வசனங்களாக இருக்கவேண்டும் என்று விஜயகாந்த் கேட்டுக்கொண்டதால், வசனங்களைப் பட்டை தீட்டிக்கொண்டிருக்கிறார் உதயன்.

விரைவில் மீண்டும் படப்பிடிப்பு ஆரம்பம். அரசியல் படமாக இருந்தாலும் ஆங்காங்கே குற்றாலச் சாரலாக நாயகி தாமினியின் கவர்ச்சி தரிசனமும் நிச்சயம் உண்டு என்கிறார் இயக்குநர் உதயன்.



பேரரசு
விஜயகாந் - தாமினி




## காதலித்துப்பார்....!

காதலித்துப்பார்......!
கானலாகும் வாழ்வே!
கண்ணீரில் முகம் கழுவி
காவி நீ தரிப்பதற்கே.....
ஒரு முறை காதலித்துப்பார்...!

இரவினில் பகலைக் காண்பாய்!
இதயத்தில் எரிமலை வெடிக்கும்
இன்பங்கள் எதிரிகளாகி...
இளமையே தடம் புரளும்!!
காதலித்துப்பார்....!

கடமை மறந்து போவாய்!
கனவுகளில் மிதப்பாய்.....
உனக்குள் கதைப்பாய்!
உன்னையே இழப்பாய்!
காதலித்துப் பார்....!

அகரத்தை சிகரமென்பாய்...
சிறுமையை பெருமையென்பாய்!
சிற்றின்ப நுகர்ச்சிக்காக
முற்றுமே துறந்து நிற்பாய்!!

பஞ்சுமெத்தை முட்புதருனக்கு!
பூபாளம் முகாரி இசைக்கும்!
தேடல்கள் தெவிட்டிவிடும்!!
தெளிந்த மனம் குழம்பி நிற்பாய்!!

இத்தனையும் காண
உனக்குச் சம்மதமென்றால்....
ஒரு முறை காதலித்துப்பார்

–யாழுமீர் மர்சூன்.

## ஒழுக்கு

மழை ஒழுக்கை
மண் சட்டியில்
ஏந்தினோம்.
கடல் ஒழுக்கை
எதில் ஏந்துவோம்?

–திருமதி க.உ.துயநாயகி,
மருதங்கேணி.

## சமாதானத் தந்தைக்கு...

ஆன்மீகத் தலைவர் என்ற
அடிப்படை கடந்து
உலக மக்களால்
நேசிக்கப்பட்டவரே!
உங்களுக்கு
என் இதய அஞ்சலிகள்.

தந்தையே!
ஒவ்வொரு மூச்சிலும்
உலக சமாதானத்தையும்
மானிட அமைதியையும்
கலந்து சுவாசித்தவரே!
புனிதமான உங்களுக்கு
என் புஷ்பாஞ்சலிகள்.

இயற் பெயர் துறந்து
அருளப்பர் சின்னப்பராய்
அவதாரம் பெற்றவரே!
கொலையாளிக்கு
மன்னிப்பு வழங்கி
மனிதம் புகட்டிய
உங்களுக்கு
என் நினைவாஞ்சலிகள்.

பாப்பரசராய் மட்டுமா
நீங்கள் பார்க்கப்பட்டீர்கள்?
தேவனாய் நல்ல தந்தையாய்
வாழ்ந்தவரே!
கடைசி வினாடிகளிலும்
சமாதானக் கனவு கண்டவரே
உங்களுக்கு
என் கண்ணீர் அஞ்சலிகள்

"என் மரிப்புக்காக
எவரும் அழ வேண்டாம்" என்று
மானுட யதார்த்தம்
பேசியவரே!
உங்களுக்காக அழவில்லை;
நீங்கள் வாழ்ந்த காலத்தில்
நானும் வாழ்ந்தேன் என்பதால்
மகிழ்கிறேன் தந்தையே!

எங்களுக்காக என்றும்
தேவலோகத்திலும்
பிரார்த்திப்பீர்கள்
என்ற நம்பிக்கையால்
பூலோகத்தில் உங்கள்
நினைவுகள் பூத்துக்
கிடக்கின்றன.
பாவப்பட்ட
எங்களால்
வெறும்
வேண்டுதல்களை
விட
வேறு எதை
உங்கள்
பாதங்களில்
சமர்ப்பிக்க
முடியும்?
இறைவனுடன்
இரண்டறக்
கலக்கும்
உங்களின் பரிசுத்த
ஆன்மா
நித்திய
இளைப்பாறுதல்
பெற்றிட
கர்த்தரை
யாசித்துக்
கொண்டிருப்போம்
தந்தையே!

- திருமலைத்
தாமரைமகன்

## இராட்சதனே இத்தோடு நிறுத்திக் கொள்!

ஏய் கடலலையே!
உன்னை
பார்த்துப் பார்த்து
இரசித்திருந்த
பாலகரை பரிதாபமாய்
பலிகொண்டாயே!
உன்னோடு
பேசிப் பேசி விளையாடிய
பிள்ளைகளை
பிசாசாக வந்து
பிணமாக்கி விட்டாயே!
உன்னோடு நண்பனாகச்
சிரித்து மகிழ்ந்தாடிய
சின்னஞ் சிறார்களை -
உன்
சீற்றத்தால் சிதைத்து
சின்னாபின்னமாக்கி
சித்திரவதை செய்து
சீரழித்து விட்டாயே!
உன் அலையோடு
புரண்டாடிய
புத்திரரை - உன்
பேரலையால்
புரட்டிப் புரட்டியெடுத்துப்
புதைகுழியில்
தள்ளிவிட்டாயே!

துரோகம் செய்தார்கள்
இன்று - நீயவரை
துரோகியாகி
துரத்தித் துரத்தித்
துவைத்தெடுத்து
துடிக்கத் துடிக்க
தூக்கிச் சென்றாயே!
உன்னை
கடவுளாக நினைந்து
கனிவு கொண்டவரை
காலனாக வந்து
கதறக் கதறக்
கட்டியிழுத்துக் காவிச்
சென்றாயே!
உன்னையே
தஞ்சமென வாழ்ந்திருந்த
மீனவரை - ருத்ர
தாண்டவத்தால்
வஞ்சகமாய்
தவிக்கத் தவிக்க -
உயிரை
தட்டிப் பறித்துக்
கொண்டாயே!
இரக்கமில்லாக்
கடலலையே!
பாதிப்பேரை நீயணைத்து
மீதி பேரைப் பரிதவிக்க
விட்டாயே!
பிள்ளைகளை இழந்து
பெற்றோர்
துடிதுடிப்பதையும்
பெற்றோரை இழந்து
பிள்ளைகள்
பரிதவிப்பதையும் - நீ
பார்க்கவில்லையா?
உறவுகளை இழந்து
உடைமைகளை இழந்து
உயிர்கள் உருகித்
தவிப்பது
உனக்குத்
தெரியவில்லையா?
கடல் தாயே - உன்
நெஞ்சில் ஈரமில்லையா? -
உன்
பிள்ளைகளை இப்படியும்
தண்டிப்பதா?
இரக்கமற்ற இராட்சதனே!
இத்தோடு நிறுத்திக்கொள்
- உன்
இம்சைகளை
இனிமேலும் வேண்டாம்.

-கிருஸ்ணவேணி
வேணுகோபால், ஹட்டன்.

## கண்ணீரில் நான்.....

சுனாமியே
உன் விளையாட்டுக்கு
என் செல்வங்களா
கிடைத்தார்கள்?
மரகதத் தீவென்றும்
அழகா புரியென்றும்
அழைக்கப்பெற்று
உல்லாசப் பிரயாணிகளை
கவர வைத்த என் அழகை
அலங்கோலப்படுத்தி
அபலையாக்கி விட்டாயே!

இரக்கமற்ற கடலே
ஏன் இப்படிச் செய்தாய்?
யார் உன்னை ஏவியவர்?
உன் வளங்களை
அள்ளிச் செல்பவர்கள்
என்றா அலறினாய்?
மக்களின் அவலம்
உனக்கு இன்னிசையா?
மக்களைக் காவுகொள்ள
உனக்கு எப்படி மனம் வந்தது?
உன் அலைக் கரங்களால்
ஆனந்தப் படுத்திய நீ
ஒரு கணப் பொழுதில்
கதற வைத்து விட்டாயே
என் செல்வங்களை இழந்து நான்
கண்ணீரில் கரைகின்றேன்.

–மரகதா சிவலிங்கம், பம்பலப்பிட்டி.

## 26.12.2004 8.9

அன்று,
தொலைதூரம்
நானிருந்தேன்
தொலைபேசியிலே
அவனுரைத்தான்....

என் நண்பனொருவனை
சுனாமி
விழுங்கியதாயும்,
அவனின்
உம்மா,
தங்கையுட்பட
கர்ப்பிணி ராத்தாவும்
கடலுக்குள்
சங்கமித்ததாயும்
சஞ்சலத்துடன்
எடுத்துரைத்தான்!

இன்னும்
இலங்கைத் தீவின்
கரையோரங்களை
சுனாமியலைகள்
காவுகொண்டதாகவும்
பல்லாயிரக்கணக்கானோரை
பலியெடுத்ததாகவும்
பதற்றத்துடன்
கூறலானான்!

அப்போதுதான்...
வானொலியைத்
திறந்தேன்
சோக கீதங்களுடன்
இடைக்கிடையே....
மரணித்தோர்
தொகை,
காணாமல் போனோர்
அகதிகளானோர் -
என
ஒலிபரப்பப்பட்ட
வண்ணமிருந்தன!

பதறியடித்தவனாய்
நண்பர்களோடும்,
பெற்றோருடனும்,
மற்றோரிடமும்
தொடர்பினை
ஏற்படுத்தலானேன்
தொலைபேசிகள்
துண்டிக்கப்பட்டிருந்தன!

–காவத்தமுனை ஜாபிர்
எச்.எம்., கொழும்பு.

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]


## சிறப்புக் கவிதையும் — கவிஞரும்

“வாழ்விலிருந்து தப்பித்தலல்ல, வாழ்வல்லாததனிடமிருந்து ஆகர்ஷித்து நம்மை வாழ்வுக்கு இழுக்கும் ஈர்ப்பு கவிதை. கவிதையொன்று எழுதப்படுவதற்கான எளிய காரணம், அந்தக் கவிதையை எழுதாமல் இருந்துவிட இயலாது என்பதுதான். எழுதியே தீர வேண்டிய கட்டாயம், அவஸ்தை. பல வருடங்களுக்கு முன்னால் தோன்றி எழுதாமல் விட்டுவிட்ட ஒரு வரி, இப்போது எழுதிக்கொண்டிருக்கும் வரிகளின் நடுவில் வந்து விழுந்து, எழுத ஆரம்பித்தபோது இருந்ததற்கு முற்றிலும் வேறாகக் கவிதையைக் கொண்டுபோய் முடித்துவிட்டு, எழுதுபவனைப் பார்த்துச் சிரிக்கிறது.

நிறங்களுக்குத் தம்மளவில் பொருளேதும் இல்லை. ஓர் ஓவியம் தீட்டப்படும்போது, தீட்டுபவரின் மனப்பாங்கிற்கு ஏற்ப நிறங்கள் தேர்வாகின்றன. சொற்களுக்குத் தம்மளவில் பொருளேதும் இல்லை. எழுதுபவரின் மனப்பாங்கிங்கு ஏற்பச் சொற்கள் தேர்வாகின்றன. வாசகர், தன் மனத்தளவில் கவிதையைப் பொருள் கொள்கிறார். ஓவியத்தைக் கவனிக்கும் ஒவ்வொருவரும் தனதான ஓவியத்தைத்தான் பார்க்கிறார். ஒவ்வொரு வாசகரும் எழுதப்பட்டதிலிருந்து தனது கவிதையையே வாசிக்கிறார்” என்று குறிப்பிடுகிறார் கவிஞர் குவளைக் கண்ணன். இதோ மூன்று கவிதைகள்.

எழுதிய பிறகு வாசிக்கையில்,
என்னால் முற்றிலும் புரிந்துகொள்ளப்படாத
ஒரே ஒரு வரியாவது இருந்துவிடுகிறது
என்னுடைய கவிதைகளில்.
எழுத உத்தேசித்த வரிகளை விழுங்கிவிட்டு
அமைதியாக நெளிந்து செல்கிற
வரிகளின் புற்று இதுவரை
எங்கிருந்திருக்கும் என்றும் தெரியவில்லை.
துருப்பிடித்த சைக்கிளில்
ஒன்றின் மேல் ஒன்றாக
அழுக்கு மூட்டைகளை ஏற்றிச் செல்லும்
பெண்
எப்படி வந்தாள்
குல்மோரார் மரங்களைப் பற்றி
எழுதத் துவங்கிய கவிதையில்?
அஸ்தமனச் சூரியன் பின்னணியில்
பள்ளிவாசல் புறாக்களைப் போல
பறந்து, அமர்ந்த
சொற்களின் முன்னால்
மக்காச் சோளப் பொரிகளை வீசியபடி
ஆட்டோ ஓட்டுநர் போல்
காக்கி உடுப்புடன் அமர்ந்திருக்கிறேன்
நான்.
இதோ வருகிறேன் என்று சொல்லிவிட்டு
இறங்கிப் போயிருக்கிற
வாடிக்கையாளனுக்காகக்
காத்திருக்கிறது உறுமலுடன்
கவிதையின் யந்திரம்.

–கல்யாண்ஜி.



## உதிரும் சொற்கள்

உண்மைதான்
நம்முடைய பிரயாணம் சொற்களால்
நிரம்பியிருந்தது
ஒரு காலம்.
அர்த்தங்களின் கனம் உறைந்த
சொற்கள்
ஈரமுனை நெகிழும் சொற்கள்
சாதுர்யத்தின் கொடியேற்றும் சொற்கள்
முடிவற்ற சொற்கள்!

ஒவ்வொன்றாய் உதிர்ந்து கொண்டே
வந்ததைக் கவனிக்காதிருந்துவிட்டேன்
இப்போது உன் கேள்விக்குப் பதில்
வேண்டி
பொறுமையற்றுப் பதறுகிறாய்
அலட்சியம் என்று அலறுகிறாய்

மீதமிருப்பவையும் உலர்ந்து
செத்துப்போன செல்களாய் விழுகின்றன
தவறவிட்ட வார்த்தைகளைத்
தேடிப்போகிறேன்
வந்த வழியெங்கும்

பாதைத் தடங்களில்
சொற்கள் சிதறிக் கிடக்கின்றன
புல்லைக் கருக்கி
பூவை மலர்த்தி
குருதியின் சாயம் தோய்ந்து
என் முகத்தின் நிழலைத் தேக்கி
சமயங்களின் கல்வெட்டாய்
சேர்த்துவைக்காது போனேனே
கைநழுவி விட்டனவே
பதற்றத்துடன் அள்ளியெடுக்க
பொடிப்பொடியாய் உடைந்து விழுகிறது.

தயவுசெய்து புரிந்துகொள்
என்னையும் மீறி நடந்துவிட்டது
இனி நான் வார்த்தைகளற்றவன்
மீதமிருப்பது மௌனம் மட்டுமே
கவனமற்று அதையும்
தொலைத்துவிட்டால்
அதன் பிறகு....? அதன் பிறகு...! என்று
கத்துகிறாய்.

–கோதலகண்ணன்.

## என்றே முடியும் இந்தக் கவிதை

மற்றொரு முறை
அவளைக் கொன்று நானும் சாகிறேன்.

எனக்கு முன் குளித்துச் சென்றவள்
விட்டுப் போன சோப்பு மணம்.
சுவரில் ஒட்டிய பொட்டு.

எனக்கு முன் சிறுநீர் கழித்தவன்
சிந்திப்போன ஈரம்
சுவரில் புரியா ஓவியமாய்.

எனக்கு முன் வாழ்ந்தவர்கள்
தந்து போனது
அலுமாரியில் புத்தகங்களாய்.

அடுத்தவனுக்கு முன்
வாழ நேர்ந்த நான்
கொடுக்கப் போவது
மற்றொரு முறை
அவளைக் கொன்று நானும் சாகிறேன்
என்று முடியும் இந்தக் கவிதை.

–முத்துமகரந்தன்.


## பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி



பெயர் : எம். ரிஸ்வான்.
வயது : 25
முகவரி : P.O.Box 7919, Bifco, Abudhabi, U.A.E.
பொழுதுபோக்கு: கிரிக்கெட், இண்டர்நெட், வினோத பயணம்.



பெயர் : ரெஸா முஹமட்
வயது : 17
முகவரி : வை.எம். வீதி, பொத்துவில் 01.
பொழுதுபோக்கு : கிரிக்கெட், பத்திரிகை.




பெயர் : ஏ.ஜே. ஜகான்கீர்.
வயது : 17
முகவரி : குறிஞ்சாக்கேணி- 01, கிண்ணியா.
பொழுதுபோக்கு : சித்திரம்



பெயர் : சு. கோபிகா.
வயது : 17
முகவரி : பண்டத்தரிப்பு பெண்கள் இல்லம்.
பொழுதுபோக்கு : வழமையானவை.

# பழச்சாறு அருந்துவோம்.....
## கோடையை வெல்வோம்...!

வெயில் காலத்தில் மனிதன் மட்டுமில்லாமல் விலங்குகள், செடி - கொடிகள் கூட வாடி வதங்கிப் போவது வழக்கம். மனிதர்களுக்கு இக்கால கட்டத்தில் உடம்பில் இருந்து அதிகப்படியான தண்ணீர் வியர்வை மூலம்



வெளியேற்றப்படுவதால் சோர்வு ஏற்படுகிறது. இதனால் தோல் வறண்டு பல்வேறு சிக்கல்கள் உண்டாகும். வறுத்தெடுக்கும் கோடையை விரட்டப் பழச்சாறுகள் அருந்துவதும், நிறைய தண்ணீர் குடிப்பதும் சிறந்த வழி ஆகும். திராட்சை, அன்னாசிப் பழம், எலுமிச்சை, வாழைப்பழம், தர்ப்பூசணி என நிறைய பழங்கள் உள்ளன. இத்தகைய பழச்சாறுகள் எளிதாக ஜீரணமாகி விடுவதால் உடம்புக்கு மிகவும் நல்லது. பார்லி வடி கஞ்சி, வெண்ணெய் பால் ஆகியவற்றை சர்க்கரை சேர்த்து அருந்துவது நலம், உலர் திராட்சை, வெள்ளரிக்காய் ஆகியவற்றைச் சாப்பிடும்போது கூடவே சுத்தமான குளிர்ந்த தண்ணீரும் அருந்த வேண்டும். உலர்ந்த உப்புச் சத்து நிறைந்த உணவுகளைச் சாப்பிட வேண்டாம். பால் சாதம், கரும்புச் சாறு, வெண்ணெய் பால், லசி ஆகியவவை உடல் ஆரோக்கியத்துக்கு மிகவும் ஏற்றது. காபி, டீ ஆகியவை மத்திய நரம்பு மண்டலத்தைத் தூண்டும் என்பதால் அவை நல்லதல்ல. அதுபோல வெறும் வயிற்றில் இவற்றை சாப்பிடுவதால், அமிலத்துடன் கலந்து உடம்பு முழுக்க எடுத்துச் செல்லப்படும் என்பதால் பலவிதமான நோய்கள் உண்டாகும். மது அருந்துவது உடம்பைச் சூடாக்கும் என்பதால் அதைத் தவிர்ப்பது நல்லது. அப்படியே அருந்துவது என்றாலும், நிறைய தண்ணீர் சேர்த்தபிறகுதான் அருந்த வேண்டும்.

செடி - கொடிகள், மலைகள் அல்லது தண்ணீர் சூழ்ந்த இடங்களில் நேரத்தைச் செலவழிக்க வேண்டும். பகல் நேரத்தில் ஓய்வு எடுக்கலாம். நீர்நிலைகளில் நீந்தலாம். மெலிதான பருத்தி உடைகளை அணிவது ஏற்றது. குளிர்ந்த நீரில் குளிப்பது நல்லது. அளவுக்கு மீறி உடற்பயிற்சி செய்ய வேண்டாம். தேவையில்லாமல் வெயிலில்



செல்ல வேண்டாம். குறிப்பாக உச்சி வெயில் நேரத்தில் வெளியில் நடமாடுவதைத் கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டும். இரவு நேரத்தில் நிலவொளியில் பொழுதைக் கழிப்பது நல்லது.

பருவ காலங்கள் மாறுவதை நம்மால் தடுக்க முடியாது. அதே சமயம் அதற்கேற்ற வகையில் நமது வாழ்க்கை முறை, உணவு முறையை மாற்றிக்கொண்டால் பாதிப்பில் இருந்து தப்ப முடியும் என்பது உண்மை.

# சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது —ஷோபா—*

## நண்டுக் கறி

*தேவையான பொருட்கள்:-*

*(4 பேருக்குப் போதுமானது)*

| | |
|---|---|
| நண்டு | - 4 பெரியது. |
| தேங்காய் | - 1 சிறியது. |
| வெங்காயம் | - 100 கிறாம். |
| பச்சை மிளகாய் | - 5. |
| உள்ளி | - 4 பல்லு. |
| இஞ்சி | - 15 கிறாம் அல்லது 3" நீளத் துண்டு ஒன்று. |
| வெந்தயம் | - 1 தே.க. (மட்டமாக) |
| கடுகு | - 2 சிட்டிகை. |
| கறிவேப்பிலை | - 2 நெட்டு. |
| றம்பை | - 2 துண்டு மூன்று |
| கறிமிளகாய்த்தூள் | - 3 மே.க. (நிரப்பி) |
| தேங்காயெண்ணெய் | - 3 மே.க. |
| உப்பு | - அளவிற்கு. |
| தேசிப்புளி | - அளவிற்கு. |
| மசாலாத் தூள் | - 1 தே.க. (நிரப்பி) |

*செய்முறை:*

நண்டைப் பாத்திரத்திலிட்டு நன்கு பொங்கிக் கொதித்த நீரையூற்றி சிறிது நேரம் வைத்துக்கொண்ட பின்பு, நண்டின் குரைக்கால்கள் இருக்கக் கூடியதாக அதன் மேற்புற பெரிய ஓட்டுப் பகுதியையும் அடிப்பு முள்ள சிறிய முக்கோண வடிவ ஓட்டுப் பகுதியையும் கழற்றி நீக்கிவிட்டு, இரண்டு சம பகுதிகளாக வரும் வண்ணம் வெட்டி (இரண்டு பகுதித் துண்டுகளிலும் கால்கள் இருக்கக் கூடியதாக) நன்றாகக் கழுவி எடுத்துக் கொள்க.

பின்பு உள்ளி, இஞ்சி என்பவற்றைத் துப்புரவாக்கித் வெங்காயம், பச்சைமிளகாய் என்பவற்றைக் துப்புரவாக்கிக் கழுவிச் சிறு சிறு துண்டுகளாக வெட்டிவைத்துக் கொள்க.

தேங்காயைத் துருவி ஒரு பிடி பூவைத் தனியாக எடுத்து வைத்துவிட்டு மிகுதித் தேங்காய்ப் பூவிற்கு தண்ணீரைச் சிறிது சிறிதாக விட்டு இரண்டு தம்ளர் முதல்ப் பாலை பிழிந்தெடுத்துக் கொள்க.

எடுத்து வைத்துள்ள ஒரு பிடி தேங்காய்ப்பூவைப் பொன்னிறமாக வறுத்தெடுத்து, மெதுவாக அரைத்தெடுத்துக் கொள்க.

தாச்சியில் எண்ணெயைவிட்டுக் காய்ந்தபின்பு, கடுகைப் போட்டு வெடிக்கவைத்து வெட்டிய வெங்காயம், பச்சைமிளகாய், கறிவேப்பிலை, றம்பை, வெந்தயம் என்பவற்றையிட்டு வதங்க விட்டு, அரைப்பதமாக வதங்கியவுடன் அரைத்த கூட்டு, மிளாகய்த் தூள், நண்டு என்பவற்றையிட்டு நன்கு கிளறிச் சேர்த்துக்கொண்ட பின்பு மூடி வதங்க விடவும்.

நன்கு வதங்கிய பின்பு மீண்டும் நன்கு கிளறி உப்பு, முதல்ப்பால் என்பன விட்டுச் சேர்த்து மெல்லிய நெருப்பில் மூடி அவிய விட்டுப் பால் வற்றித் திரளத் தொடங்கும்போது அரைத்து வைத்துள்ள தேங்காய்ப்பூ, மசாலாத் தூள் என்பவற்றையிட்டு நன்கு கிளறிச் சேர்த்து, இறக்கித் தேசிப்புளி அளவிற்கு விட்டுத் கலந்து பரிமாறலாம்.




எந்திரத்தனமாய் மாறிவிட்டதா வாழ்க்கை? அதிலிருந்து விடுபட என்னதான் வழி? மனிதர்களுடன் கொள்கிற நட்பு ஆபத்தானது. செடி, கொடிகள் நிறைந்த தோட்டத்தில் நேரம் செலவழித்துப் பாருங்களேன். வாழ்க்கையில் புது வசந்தம் பூப்பதை உணர்வீர்கள்.


அது சரி, இங்கே மனுஷனுக்கே இருக்க இடத்தைக் காணோம். இதுல தோட்டம் வேற எங்கே போடறதாம்? என்பதுதானே உங்கள் புலம்பல்? கவலைப்படாதீர்கள் உங்கள் வீட்டு வரவேற்பறை, டைனிங் ஹால், பால்கனி, மொட்டை மாடி என இருக்கு மிடத்திலேயே தோட்டம் போட நீங்கள் தயாரா? இதோ இந்த டிப்ஸ் உங்களுக்குத் தான்...

# வீடு தோட்டம் ஆகட்டும்!




முதலில் நீங்கள் எந்த இடத்தில் செடி வைக்கப் போகிறீர்கள் என்று முடிவு செய்யுங்கள். டிராயிங் ரூம், டைனிங் ரூம், பாத் ரூம் போன்ற இடங்களில் வைக்க பூக்காத அழகிய இலைகள் கொண்ட செடிகள்தான் சரியானவை. இவற்றுக்கு அதிக வெயில் தேவையில்லை. மணி பிளான்ட், பரணிச் செடி போன்றவற்றை வீட்டுக்குள் வைப்பது அழகு மட்டுமில்லை. சுற்றுப்புற அசுத்தத்தையும் நீக்கும்.

ஜன்னல் மேடை மாதிரி கொஞ்சம் வெயில் விழும் இடங்களில் சிறிய பால் பாக்கெட், குட்டித் தொட்டி போன்றவற்றில் மண் நிரப்பி, கொத்தமல்லி, வெந்தயம் போன்றவற்றை விதைக்கலாம். தனியா விதைகளை நன்றாகத் தேய்த்து அது உடைந்த பிறகே விதைக்க வேண்டும். முழுதாக இருந்தால் முளைக்காது. புதினா, பசளை போன்றவற்றை உபயோகித்த பிறகு, தண்டுகளை நட்டு வைத்தால் துளிர் விடும்.



வீட்டைச் சுற்றிப் பத்துக்குப் பத்து அடி இடம் இருக்கிறதா? இதில் மினி தோட்டம் ஒன்று போடலாம். இடத்தை முதலில் மூன்றாக பிரித்துக்கொள்ளுங்கள். ஒரு பகுதியில் கீரை விதைக்கலாம். இன்னொன்றில் பீன்ஸ், கத்தரிக்காய், முள்ளங்கி, தக்காளி, மிளகாய் போன்றவற்றையும், இன்னொரு பகுதியில்



அவரை, புடலங்காய், பாகல் எனக் கொடி வகைகளையும் விதைக்கலாம். விதைகள் தரமானதாக வேண்டும். பழைய விதைகள் முளைக்காது. வட்டமாகப் பாத்தி கட்டி, கையகல இடம் விட்டு மூன்று விதைகளைத் தள்ளித் தள்ளி நட வேண்டும். எந்த விதை நன்றாக முளைக்கிறதோ, அதை விட்டு மற்ற இரண்டையும் பிடுங்விட வேண்டும். மூன்றுமே நன்றாக வந்தாலும் பிடுங்கினால்தான் ஒன்று நன்றாக வளரும். முதலில் மேல் மண்ணை எடுத்துவிட்டு, செம்மண் கலந்து, எறும்புப் பொடி கலந்து விதைகளை நட்டு, அளவாகத் தண்ணீர் விட வேண்டும். சுற்றிலும் புல் வளர விடக் கூடாது. பூக்கிற சமயம் உரமிட வேண்டும். அதிகாலை அல்லது மாலைக்குப் பிறகுதான் உரமிட வேண்டும். ஒரு செடிக்கு 3 முதல் 4 கிறாம் வரை போடலாம். அத்துடன் தொழு உரமும், வேப்பம் புண்ணாக்கும் கலந்து ஒரு கைப்பிடி போடலாம். ஆடி மற்றும் தை மாதங்களே விதைக்க ஏற்றவை.

நம்மூர் சீதோஷ்ணத்துக்கு ரோஜா நன்றாக வளராது. ரோஜா வளர்ப்பது கைக்குழந்தையைப் பராமரிப்பது மாதிரி. அடிக்கடி ரோஸ் மிக்ஸ் போட்டு, உரம் போட்டு, பூச்சி மருந்தடித்து கஷ்டப்பட்டு வளர்த்தால் ஓரளவு பூக்கும். நாட்டு ரோஜாதான் நம்மூருக்கு ஏற்றது. பூச்செடிகளிலேயே ரோஜாவுக்குத் தான் அதிக வியாதிகளும் வரும் என்பதால் மிக அக்றையுடன் வளர்க்க வேண்டும்.

மொட்டை மாடிகளில் தோட்டம் போடுவது இப்போது பிரபலம். நான்கு மணி நேரம் சூரிய வெளிச்சம் படுபடியான இடத்தில் பெரிய சிமெண்ட் தொட்டி வைத்து எல்லாவித பழம் மற்றும் காய், பூக்களை விதைக் கலாம். மல்லி முல்லை என மொட்டை மாடியையே பூந்தோட்டமாக மாற்றலாம்.

இன்னும் சில டிப்ஸ்.....

நர்சரியிலிருந்து வீட்டுச் செடி வாங்கி வருகிறீர்களா?

அதை வேறு தொட்டியில் மாற்றக் கூடாது. செடிகளும் குழந்தை மாதிரித் தான். புது மனிதர்களை, புது சூழலைக் கண்டு குழந்தை எப்படி பயப்படுமோ, அதே மாதிரி தான் செடிகளும், அந்த அதிர்ச்சியில் செத்துப் போகலாம்.

வீட்டுக்குள் வளர்க்கிற செடிகளுக்கும் சூரிய வெளிச்சம் தேவை. பதினைந்து நாட்களுக்கொரு முறையாவது அவற்றை வெளியில் எடுத்து சூரிய வெளிச்சம் படும்படி சில மணி நேரம் வைத்திருந்து எடுத்து வைக்கலாம்.

சூரிய வெளிச்சத்தில் வைக்க வேண்டிய செடிகளை அப்படியே நேரடி வெயிலில் வைத்தால் அவை செத்து விடும். முதலில் இலேசான வெயில் படும்படியான இடத்தில் வைத்துப் பிறகு நல்ல வெயிலில் வைக்கலாம்.

தொட்டி மண்ணில் ஈரம் இருந்தால் செடிக்குத் தண்ணீர் விட வேண்டாம். தண் ணீர் அதிகமானால் இலைகள் அழுகி விடும்.

செடிகளும் மனிதர்கள் மாதிரித்தான். உப்புத் தண்ணீர் அவற்றுக்கும் ஆகாது. சோப்புத் தண்ணீர் போன்றவற்றை அவற்றுக்கு விடுவது தவறு.

வருடத்துக்கொரு முறை தொட்டியையும், மண்ணையும் மாற்ற வேண்டும்.

# பித்த நோய்களைப் போக்க நெல்லிக்காய்



நெல்லிப் பழங்களை விதை நீக்கி, இடித்துச் சாறு பிழிந்து சம அளவு சர்க்கரை சேர்த்து மணப்பாகு தயார் செய்து சாப்பிடலாம் அல்லது நெல்லி வற்றலை இடித்துத் தூளாக்கி சம அளவுக்கு, சர்க்கரை சேர்த்து காலை நேரத்தில் ஒரு டீ ஸ்பூன் வெந்நீர் அருந்தலாம். இதனால் கப சம்பந்தமான நோய்களும், பித்த சம்பந்தமான நோய்களும் தீருவதுடன் அதிகமான உளைச்சலினால் ஏற்படும் கை உதறல் குணமாகும். பெரும்பாலும் கைகள் நடுங்குவதை நரம்புத் தளர்ச்சி என்றோ நடுக்க வாதம் என்றோ எண்ணி பல உயர்ந்த மருந்துகளை அளித்தும் பலன் கிட்டாத நிலையில் இந்நெல்லிக்காய் வற்றல் சம்பந்தப்பட்ட மருந்துகளைக் காலை நேரத்தில் அளித்துவரக் குணம் ஏற்படுகிறது.

# ஒரு தாய் மகன் 27

எப்படி? க்ளீவ்லந்திலிருந்து பேசியவர் இவ்வளவு சீக்கிரம் சான்பிரான்ஸிஸ் கோவுக்கு வர முடிந்தது என்று குழம்பித் தவித்தாள் பேஜ். ஆறு மணி நேரப் பிரயாணம் எப்படி ஒரு மணியில் முடிந்தது...?

அவன் கண்களில் அதுவரை கண்டிராத ஒரு பிடிவாதத்தைப் பேஜ் கண்டாள். பழுக்கக் காய்ச்சிய இரும்பை இருதயத்தில் செருகிய மாதிரி சுரீரென்று வலித்தது. தெய்வமே! இது என்ன சோதனை? ஒரே நாளில் என் மகளையும் பறிகொடுத்து, கணவனையும் இழந்து நிற்கப் போகிறேனா?

"நீங்கள் க்ளீவ்லந்துக்கே போக வில்லை! அப்படித்தானே?" என்றாள் பயத்தினால் உறைந்து போன குரலில்.

பிராட் பார்வையைத் திருப்பிக் கொண் டான்.

மறுபடியும் அன்போடு சொன்னான்.

வீட்டை அடைந்தபோது, பிராடு ஆண்டி யின் அருகே உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பதைக் கண்டாள். சினேகிதி ஜேன் தன் வீட்டுக்குப் போய்விட்டாள் என்று புரிந்தது.

"ஆலிக்குத் தலையில் பெரிய காயம். ஆனால் டாக்டர்கள் சரிபண்ணிவிடுவார்கள். சீக்கிரம் வீட்டுக்கு வந்து விடுவாள்" என்று பிராடு சொல்லிக்கொண்டிருப்பது காதில் விழுந்தது. பேஜுக்கு அது பிடிக்கவில்லை. குழந்தையை வீணாக ஏமாற்றக் கூடாது என்று எண்ணிக்கொண்டாள்.

ஆண்டி வெளியே போனான். ஜன்னலிலிருந்து பார்த்தபோது, தோட்டத்துப் புல்வெளியில் நாய்க்குட்டி லிஸ்ஸியுடன் அவன் விளையாடிக்கொண்டிருப்பது தெரிந்தது.

**சென்ற வாரம்**

**போன் பண்ணிய பிராட் ஆலிஸனின் நலனைப் பற்றி விசாரிக்காமல் பேஜுக்கு ஏசுகிறான். பின் ஆலிஸனின் நிலைமையை விசாரித்து தான் உடனடியாக வருவதாகக் கூறுகிறான்.**

கணவன் பிராட் எதையோ ஒளித்து மறைத்துத் தன்னை ஏமாற்றியிருக்கிறான் என்பது மட்டும் பேஜுக்குப் புரிந்தது. ஆனால் என்ன அது என்று தெரியாதவளாகத் தவித்தாள். பிராடுக்கும் சங்கடமாக இருந் ததோ என்னவோ, வீட்டுக்குப் புறப்பட்டான். இனி மேலும் ஆஸ்பத்திரியில் தங்கியிருந்து என்ன ஆகப் போகிறது? ஆலிஸனைப் பார்க்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள். மற்ற விஷயங்களை டாக்டரிடம் பேசியா யிற்று.

"நான் முதலில் போகிறேன். ஆண்டி தனியாக இருப்பான். நீ வேண்டுமானால் கொஞ்ச நேரம் இருந்துவிட்டு வா" என்று பேஜிடம் சொல்லிவிட்டுக் கிளம்பினான்.

கணவன் பக்கம் திரும்பாமலே, "குழந்தையிடம் போய் ஏன் என்னென்னவோ சொல்கிறீர்கள்?" என்று கேட்டாள் பேஜ். வேறு ஆயிரம் கேள்விகள் அவள் நாக்கு நுனியில் நின்றிருந்தன. அவைகளை ஆண்டி தூங்கிய பிறகு கேட்கலாமெனத் தீர் மானித்தாள்.

"ஏன்? ஆண்டியிடம் நான் என்ன சொல்லிவிட்டேன்?" என்றான் பிராடு காட்டமாக. அவன் மனத்திலும் பல்வேறு எண்ணங்கள் முட்டி மோதிக்கொண்டு நின்றன. ஆலிஸன் உயிருக்குப் போராடிக்கொண்டிருக்கும் நிலைமை மட்டுமல்ல, இந்த விபத்தின் விளைவாகத் தங்கள் இல்லறமே ஆட்டம் கண்டு கொண்டிருப்பதை அவனும் உணர்ந் திருந்தான். அவளும் அறிந்திருந்தாள்.

"ஆலிக்கு ஒன்றுமில்லை, நல்லபடி வீட்டுக்கு வந்துவிடுவாள் என்று ஏன் சொல்கிறீர்கள்? நமக்கே எதுவும் தெரியாதே?"

"தலைமை சர்ஜன்தான் சொன்னார் - அவள் உயிர் பிழைக்க நல்ல சான்ஸ் இருக்கிறது என்று."

"பிழைப்பாள் என்று சொன்னார். ஆனால் எப்படி? கோமா நிலைமையிலா? குருடியாகவா? நடமாட முடியாத ஜடமா கவா? அவர் அப்படி எதுவும் சொல்லாத போது ஆண்டியின் மனசில் அனாவசிய நம்பிக்கைகளை ஏற்படுத்துவானேன்?"

பிராடுக்கு எரிச்சல் வந்தது. "என்னை என்ன செய்ய வேண்டுமென்று சொல்கிறாய்? ஆலியின் மூளை எக்ஸ்ரேயையெல்லாம் அவனுக்குக் காட்டச் சொல்கிறாயா? இதோ பார், ஆண்டி குழந்தை. அவன் மனம் வேதனைப்படக் கூடாது. ஆலியிடம் அவனுக்குக் கொள்ளைப் பிரியம்..."

"எனக்கும்தான் பிரியம். ஆலிஸன் மீதும் பிரியம். ஆண்டி மீதும் பிரியம். ஆனால் அதற்காகத் தப்பான நம்பிக்கை தர வேண்டுமா? இன்று ராத்திரி அவளுக்கு ஏதாவது நேர்ந்து விட்டால்? ஆபரேஷனில் அவள் பிழைக்காவிட்டால்?" என்னும்போதே அவளுக்குக் கண்ணீர் பெருகி வழிந்தது.

"அப்படி ஒன்றும் நேராது. நேர்ந்தால் நாம் பார்த்துக்கொள்ளலாம்."



சற்றைக்கெல்லாம் பேஜும் புறப்பட்ட சமயம், தாரென்ஸன் தன் இரண்டு மகன்களுடன் வந்துசேர்ந்தான். கணவன் க்ளீவ்லந்திலிருந்து வந்துவிட்டான் என்று மட்டுமே அவனிடம் சொன்னாள் பேஜ். அவனுக்கும் தனக்கும் நடந்த சம்பாஷணை யைப் பற்றிச் சொல்லவில்லை. அவள் மனம் அலைபாய்ந்த வண்ணம் இருந்தது. தாரென்ஸனின் பையன்களிடம் 'ஹலோ' சொன்னது கூட ஏதோ சம்பிரதாயத்துக்காகச் சொன்ன மாதிரி இருந்தது.

"ஆலிஸனை வார்டுக்குக் கொண்டுவர ரொம்ப நேரம் ஆகுமென்று சொல்கிறார்கள். நான் வீட்டுக்குப் போய்விட்டுக் காலையில் வரலாமென்று பார்க்கிறேன்" என்றாள்.

தாரென்ஸன் அவளைக் கவலையுடன் பார்த்து, "பாவம், ரொம்பக் களைத்துப் போயிருக்கிறாய். நன்றாய்த் தூங்கி ரெஸ்ட் எடுத்துக்கொள்" என்றான்.

"பார்க்கிறேன்" என்று புன்னகை செய்தாள் அவள். ஆனால் வேதனை அவள் முகத்தில் வரிவரியாகக் கோடிட்டிருந்தது. அப்படியொரு சோகத்தை தாரென்ஸன் தன் வாழ்க்கையில் கண்டதேயில்லை.

"உடம்பைப் பார்த்துக்கொள்" என்று

*எழுதியது:* **டேனியல் ஸ்டீல்**
**தமிழில்: ரா.கி. ரங்கராஜன்**

"நாம்? நாம் என்றா சொன்னீர்கள்?" இகழ்ச்சியாகச் சிரித்தாள் பேஜ். ஆண்டி வெளியே விளையாடிக் கொண்டிருந்ததால், எதைப் பின்னர் கேட்கலாம் என்று நினைத்திருந்தாளோ அது அவள் வாயில் வந்துவிட்டது. "எனக்குத் தெரியாமல், மர்மமாக என்னென்னவோ நடந்து கொண்டிருக்கிறது. நாம் பார்த்துக் கொள்ளலாம் என்கிறீர்கள்! எதை?"

"சரி, விடு. ஏதோ போதாத வேளை. எல்லாம் கோளாறாகிவிட்டது." என்றான் அவன் நிதானமாக. "ஆலிஸனுக்கு இப்படி ஒரு விபத்து நேர்ந்திராவிட்டால் உனக்கு எதுவும் தெரிந்திருக்காது. க்ளீவ்லந்துக்குப் போன் போட்டு என்னைக் கூப்பிடும்படி பாலன்ட்டினிடம் நீ சொல்லியிருக்கவே தேவையில்லை."

"ஏன்? ஏன் தேவையில்லை?" என்று வெடித்தாள் அவள். "பெற்ற மகள் வாழ்வா, சாவா? என்று இருக்கும் போது, கணவன் எங்கே இருக்கிறான் என்று கூப்பிட்டதா தப்பு?"

"நீ கூப்பிட்டதால் என்னைப் பற்றி

(தாய் தொடர்வாள்.....)

## செலினா ஜெட்லி



செலினா ஜெட்லி 2001 இல் 'மிஸ் இந்தியா'வாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். ஐந்தடி 6 அங்குலம் உயரம் கொண்ட இவர் கல்கத்தா வாசியாவார். 'மிஸ் மாஸ்கோ 'பியூட்டி.'.புல் ஸ்கின்', எம்.டி.வியின் மோஸ்ட் வான்டட் அவார்டு' போன்ற அவார்டுகளைத் தட்டிச் சென்றிருக்கிறார். பிஸ்னெஸ் கம்யூனிகேஷன் பட்டதாரியான செலினா, மிலிட்டரி பேக்ரவுண்ட் குடும்பத்திலிருந்து சினிமாவுக்கு வந்தவர். அங்கோரா வாட்ச், மதர் டெய்ரி, நைட் ஏஞ்சல் பெர்.'.ப்யூம் போன்றவற்றிற்கு மாடலிங்கும் செய்திருக்கிறார். ஆனால் இந்த ஏஞ்சல் விரும்பியது பைலட் ஆவதற்குத் தானாம்.

## ப்ரியங்கா



*2000த்தில்* 'மிஸ்வேர்ல்ட்' பட்டத்தை பளீச் புன்னகையுடன் சுமந்த ப்ரியங்கா சோப்ரா 1982 ஜூலை 18ஆந் திகதி பிறந்தவர். அப்பா டாக்டர் அசோக் சோப்ரா, அம்மா டாக்டர் மது சோப்ரா. குடும்பமே டாக்ராகி இருக்கலாம் ப்ரியங்கா மட்டும் டாக்டருக்கு படித்திருந்தால்....? ஆனால் லக்னோவில் உள்ள 'லா மார்டினைர் கேர்ள்ஸ்' காலேஜில் தங்கிக் கல்லூரி படிப்பை முடித்தார். பின்பு அமெரிக்காவில் உள்ள மரியா கோரெட்டி காலேஜில் மேற்படிப்பைத் தொடர்ந்தார். ஒரு சா.'.ப்ட்வேர் எஞ்சினியராக வேண்டும் என்பது தான் ப்ரியங்கா சோப்ராவின் கனவாக இருந்ததாம். ப்ரியங்காவின் உயரம் 5'8". இந்திய இசை, நடனம், கவிதை, கதை எழுதுதல் புத்தகங்களில் மூழ்கிப்போதல் ஆகியவைகளில் அதீத ஈடுபாடு கொண்டவர். சமூக சேவையிலும் அதிக அக்கறை ப்ரியங்கா சோப்ராவுக்கு உண்டு.

## ஆர்த்தி ஸாப்ரியா



**பா**லிவுட்டை கலக்கிக் கொண்டிருக்கும் ஆர்த்தி ஸாப்ரியா பிறந்தது. 1982 நவம்பர் 21 என்ற அதிர்ஷ்ட திகதியில். 2002 இல் 'மிஸ் இந்தியா' பட்டத்தை கைப்பற்றிய கையோடு 'லிரில்' விளம்பரத்தில் முகம் காட்டினார். 'நாஷா ஹே நாஷா' என்ற வீடியோவும் அவரை பிரபலப்படுத்தியது. ஆர்த்தி முதன் முதலாக திரையில் நுழைந்து பலபேர் இதயத்தைக் கொள்ளையடித்தது நகுல் கபூர் இயக்கிய 'தும்ஸே அச்சா கான் ஹே' என்ற படத்தில்தான்!

# 51



# ஒரு பெண்ணின் வாழும் வரலாறு

## ஹிலாரி கிளிண்டன் எழுதுகிறார்

அதேபோன்று, நியூயோர்க் பல்கலைக்கழக சட்டக் கல்லூரியில் நீதி வழங்குவது பற்றியும் கற்பித்தார். அவரும், அவரது மனைவியான ஹெலனும் என்னுடன் நட்பாயினர். முதலாவது கோடையின் போது நான் அவர்களிடம் சென்றிருந்தேன். பரிசினை வென்ற கட்டிடக்கலை நிபுணரான பேஜோன்ஸினால் வடிவமைக்கப்பட்ட அவர்களது சொந்த வீட்டில் தங்க வைக்கப் பட்டேன். சிறந்த சட்ட நுணுக்கங்களைப் பற்றி அல்வைட்டுடன் உரையாடும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. அவர் கடுமையான சட்ட விரிவுரையாளர் எனப் பெயர் பெற்றிருந்தார். ஆனால், மிகவும் மென்மையான குணமுடையவராக காணப்பட்டார். மில்ட் கோப்லேன்ட்டின் அன்பினை நான் மிகவும் மதிக்கிறேன். நான் அவருடனேயே எனது அனுபவத்தினைப் பகிர்ந்து கொண்டுள்ளேன். மோர்ட்கைட்ல் மேனுடைய சுறுசுறுப்பினையும், கல்வியறிவையும் கண்டு ஆச்சரியப்படுகிறேன்.



பில்லின் தாயாரான வெர்ஜீனியாவின் கணவர் ஜெப்டிவயர் திடீரென



மாரடைப்பினால் காலமானார். வெர்ஜீனியாவுக்கு அது பேரிழப்பாகும். அவர் 03 ஆவது முறையாக விதவையானார். பில்லைக் காட்டிலும் 10 வருடங்கள் இளமையான அவரது சகோதரரான ரொஜர் மிக நெருங்கிய உறவினை ஜெப்புடன் கொண்டிருந்தார். ஜெப்பினது இழப்பானது எம்மனைவருக்குமே வருத்தத்தினைத் தந்தது. வெர்ஜீனியா பலவற்றினைப் பல வருடங்களாகத் தாங்கிக்கொண்டிருந்தார். அவரது மௌனம் ஆச்சரியத்தினையே வரவழைத்தது. பில்லும் அதே போலவே இருந்தார். பில்லினது சிறு பராயம் கஷ்டமானது, ஆழ்ந்த துயரமானது. அத்துயரம் அவரது மனக் கண்முன் அப்போது தோன்றியிருக்கக் கூடும். எப்படியிருப்பினும், அவரது அனுபவமானது அவரை மேலும் மேலும் உறுதிப்படுத்தியதுடன், எதிலும் நன்மையைக் காண்பவராக ஆக்கியது. அவரது ஆற்றலும் இயற்கை விருப்பும் அவரை நோக்கி மக்களை வரவழைத்தது. தேர்தல் பிரசார பணிகளின்போது அவர் பட்ட கஷ்டங்களை ஒரு சிலரே அறிந்திருந்தனர்.

ஜெப்பினது மரணச் சடங்கு நிகழ்வுகள் முடிவடைந்த பின்னர் மீண்டும் பில் பிரசாரப் பணிகளில் ஈடுபட்டார். நான் எனது வாழ்க்கையை சிறியதோர் நகரில் கண்டெடுத்தேன். நியுஹெவன் மற்றும் வொஷிங்டன் ஆகிய இடங்களின் தீவிரத்திற்குப் பின்னர் நட்புறவு, பொதுவான காலடிகள், பெயட்வில்லினது நட்பு ஆகியன எனக்கு அந்த நகரத்தில் டொனிக் போன்று அமைந்தன.

ஒரு நாள் வரிசையில் நின்று கொண்டிருந்தபோது, நான் தான் புதிதாக வந்துள்ள சட்டவிரிவுரையாளரா என்று என்னிடம் கேட்டார். நானும் 'ஆம்' என்றேன். அவரது மருமகனும் என்னிடம் கற்பதாக அவர் கூறினார். நான் பரவாயில்லை என்று மருமகன் கூறினாராம். ஒரு நாள் ஒரு மாணவரைக் காண முடியவில்லை. அது பற்றி நான் நிருவாகியிடம் தெரிவித்தேன்.

'அவர் வீட்டிலில்லை' என்றார்.

'என்ன கூறினீர்கள்'? 'அந்த மாணவர் முகாமுக்குச் சென்றிருக்கிறார்' என்று தெரிவித்தார். இவ்வளவு நட்புறவு கொண்ட சிறியதோர் இடத்தில் நான் இந்நகரத்தினை மிகவும் விரும்புகிறேன். 'ரேசர்பெஸ்' கால்பந்தாட்டத்தை கண்டு களிப்பதற்கு ஆகன்ஸாஸ்"க்குப் போனேன் 'கோல் த ஹொக்' முறையினைக் கற்றேன். இந்த நகரத்தில் பில் இருக்கும் போது நாம் நண்பர்களுடன் காலத்தைக் கடத்துவோம். அவர்களுடன் சேர்ந்து 'பாபேக்யூ' உண்ணுவோம். வார இறுதி நாட்களில் கைபந்து விளையாடுவோம். அல்லது, எங்காவது சுற்றுவதற்குப் போவோம்.

அப்போது பல்கலைக்கழகமொன்றில் நிர்வாகியாக இருந்த கார்ல் வில்லெக்கும் அவரது அழகான மனைவி மார்கிரெட்டும் சட்டக் கல்லூரிக்கு அப்பாலுள்ள பெரிய மஞ்சள் வீட்டில் வசித்து வந்தனர். என்னை முதல் முதலாக வரவேற்றவர்கள் அதாவது, அழைப்பு விடுத்தவர்கள் அவர்களே. அதன் பின்னர் நாம் நல்ல நண்பர்களானோம். 10 வயதுக்குக் கீழ்ப்பட்ட அவரது 06 பிள்ளைகளையும் மார்கிரெட்டையும் கைவிட்டு அவரது கணவர் சென்றுவிட்டார். 06 பிள்ளைகளையுடைய ஒரு பெண்ணை யாருமே ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

ஆனால், யாரையும் எதையும் பொருட்படுத்தாமல் கார்ல் அவர்கள் அனைவரையும் ஏற்றுக்கொண்டார். நான் ஒரு முறை மார்கிரெட்டை வெள்ளை மாளிகையில் வைத்து எப்பீ லெடரருக்கு அல்லது ஆன் லேன்டர்ஸ்"க்கு அறிமுகப்படுத்தினேன். மார்கிரெட்டின் கதையைக் கேட்ட அவர் கூறினார்: 'பெண்ணே, உண்மையிலேயே உனது கணவர் மிகவும் புனிதமானவர்! அது உண்மையே, சரியானதும் கூட"

(தொடரும்...)

# உரிமை மடல்... 6

*மலை தடை கடந்து*
*புயலிடை எழுந்து*
*உங்களுக்காக*
*ஓர் உரிமை மடல்!*

*உண்மை எதுவென உரத்த குரலெடுத்து*
*உன்னத வழிகாட்டி எழுதும்*
*உரிமை மடல்!*

*இது*
*செயலாளர் நாயகம் தோழர் டக்ளஸ் தேவானந்தா*
*அவர்கள்*
*இடர் படும் எம் தேசத்து மக்களுக்காக எழுதும்*
*தொடர் மடல்!...*



***அன்பான எம் தேசத்து மக்களே!***

உங்களுக்கு வணக்கம்!
ஈடற்ற துயர்களை எடுத்து வீசுங்கள்!
புதிய விடியல்களை நாம் படைத்திடுவோம்!
வீசிய அம்புகள் விழிகளைத் தோண்டின....
ஆயினும் நான் உங்கள் விடிவிளக்கு!
விசுவாச நெய்யூற்றி முடியாத ஒளியதனை
தங்கள் கைகளில் நிரப்புவேன்!
கொள்ளையர்கள் கவர்ந்தவற்றை
உங்கள் கைகளில் நான் மீட்டுத் தருவேன்!
இது சத்தியம்!

ஆம்! ஒடுக்கப்படுகின்ற தேசங்களில் ஒன்றான.... பாலஸ்தீன தேசத்தின் கவிஞன் ஒருவன் எழுதிய..... அந்த நம்பிக்கை தரும் வரிகளோடு மீண்டும் ஒரு உரிமை மடலில் உங்களைச் சந்திக்கின்றேன்!...

நாமும் ஒரு காலத்தில் ஆயுதம் ஏந்தி களத்தில் நின்றவர்கள்தான்! ஆனாலும் அழிவுகளிலிருந்து மக்களைக் காப்பதற்காகவே நாங்கள் ஆயுதம் ஏந்தினோம்!

அழிவுகளை வைத்து அரசியல் ஆதாயம் தேடுவதற்காக நாங்கள் ஒரு போதும் ஆயுதம் ஏந்தியிருக்கவில்லை!

ஓடுகின்ற குருதியிலிருந்து உங்கள் உயிர்களை மீட்பதற்காகவே நாங்கள் ஆயுதம் ஏந்தியிருந்தோம்!

உங்கள் உயிர்களைக் குருதியில் சரியவிட்டு அதிலிருந்து சுயலாப அரசியல் நடத்துவதற்காக நாங்கள் ஆயுதம் ஏந்தியிருக்கவில்லை!

ஆனால் புலிகள் இயக்கத்தைப் பொறுத்தவரை அவர்கள் எங்களிலிருந்து மாறுபட்டு..... மக்களாகிய உங்களது நலன்களுக்கு எதிராகவே அன்றும் செயற்பட்டார்கள். இன்றும் செயற்பட்டு வருகிறார்கள்!

இதை எதற்காக நான் குறிப்பிடுகிறேன் என்றால்..... யுத்தத்தை விரும்பும் சக்திகள்.... யுத்தத்தை தவிர வேறெந்த வழிமுறையினையும் தெரிந்திருக்காதவர்கள்..... மக்களாகிய உங்களை தவறான பாதைக்கு இழுத்து.... தங்களது அரசியலை நடத்தத் திட்டமிட்டு வருவதாக நாங்கள் அறிகின்றோம்!

இது குறித்து மக்களாகிய நீங்கள் விழிப்புடன் இருக்கவேண்டும் என ஈ.பி.டி.பி யின் சார்பாக நான் கேட்டுக்கொள்கின்றேன்!

திரை மறைவில் புலிகள் தீட்டும் திட்டங்களின் உண்மைத் தன்மையினை நீங்கள் சரிவரப் புரிந்துகொள்ள வேண்டுமென்றால்..... அவர்களது கடந்த கால அரசியல் வழிமுறைகள் குறித்தும் நீங்கள் அறிந்திருப்பது அவசியமாகிறது.

இதில் எங்களது கடந்த கால அரசியல் குறித்தும் நீங்கள் தெரிந்துகொள்ள முடியும் என நம்புகிறேன்! இது குறித்து நான் மக்களாகிய உங்களோடு மனம் திறந்து பேச விரும்புகிறேன்!

புலிகள் தங்களது கடந்த கால அரசியல் வழிமுறை களுக்கு ஊடாகவே இன்றும் தங்களது இருப்பைத் தக்க வைத்து வருகிறார்கள்!

இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கு முன்னர், அப்போது நான் ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பில் முக்கிய பொறுப்பில் இருந்த காலம்! நாங்கள் மக்களை அணி திரட்டுவதற்காக மக்களிடம் செல்வதுண்டு! மக்களின் கருத்துக்களை அறிவதற்காகவும்.... அதிலிருந்து நாம் கற்றுக்கொள்வதற்காகவும்.... மக்களை உணர்வு பூர்வமாக அணிதிரட்டுவதற்காகவும் மக்களிடம் செல்வதுண்டு!

ஆனால் நாங்கள் நடத்திய வெகுஜனப் போராட்டங்கள் வன்முறைகளைத் தூண்டிவிடும் நோக்கத்தில் ஒரு போதும் இருந்ததில்லை! அப்போது நாங்கள் மக்களை அணிதிரட்டி வன்முறையற்ற வெகுஜனப் போராட்டங்களை நடத்த திட்டமிட்டிருந்தபோது ஏன் இவ்வாறு செய்கிறீர்கள் என்று புலிகள் எம்மிடம் கேட்டிருந்தார்கள்!

அப்போது புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளராக இருந்தவர் திலீபன்! அவர்தான் எமது தோழர்களோடு இது குறித்த விவாதத்தில் ஈடுபட்டிருந்தார்.

மக்களைப் போராட்டத்தின் மீது நம்பிக்கை கொள்ள வைப்பதற்காக.... தெளிவான ஒரு சிந்தனை ஓட்டத்தில் மக்களை அழைத்துச் செல்வதற்காக... மக்களிடம் போகிறோம் என்றோம்!

வெகுஜன எழுச்சிகளுக்கு ஊடாக மக்களை ஒரு உன்னத இலக்கு நோக்கி அழைத்துச்செல்ல முடியும் என்பது எங்களது அசையாத நம்பிக்கையாக இருந்தது!

அதைத்தான் எமது தோழர்கள் புலிகளிடம் வலியுறுத்தியிருந்தார்கள்!

அதற்குப் புலிகள் கூறிய கருத்து இப்போது உங்களுக்கு சில விடயங்களைத் தெளிவுபடுத்தும் என நம்புகிறேன்!

இது சரிப்பட்டு வராது!... இந்த வெகுஜனப் போராட்டங்களை விட ஒரு இராணுவ நடவடிக்கையின் மூலம் நாம் மக்களை சுலபமாக அணிதிரட்ட முடியும் என்று கூறினார்கள் புலிகள்!

அவர்கள் கூறியது இதைத்தான்! படையினர் மீது தாக்குதலை நடத்துவது! தாக்கிவிட்டு பின்வாங்கி ஓடுவது!... ஆத்திரமுற்ற படையினர் மக்கள் மீது தாக்குதல் நடத்துவார்கள்! தாக்கப்பட்ட மக்கள் தங்களது இழப்பிலிருந்து எழுச்சி கொள்வார்கள்! இப்படியான வழி முறைக்கு ஊடாகவே தாம் மக்களை அணிதிரட்டி வருவதாக திட்டவட்டமாக கூறியிருந்தனர்.

எம் இனிய தமிழ் பேசும் மக்களே! இது குறித்து நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்! புலிகள் எதை விரும்புகிறார்கள்?.... மக்களாகிய நீங்கள் படையினரால் கொல்லப்படுவதையே அவர்கள் விரும்புகிறார்கள்! மக்களாகிய நீங்கள் படையினரால் தாக்கப்படுவதையே புலிகள் விரும்புகிறார்கள்!

மக்களாகிய உங்களது சொத்துக்களை படையினர் எரித்து நாசமாக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள்!

மக்கள் சிந்தும் குருதியில் நின்று கொண்டு.... படையினர் கொளுத்திய தீயில் எழுந்த சாம்பல் மேட்டில் நின்று கொண்டு..... தங்களது அரசியலை முன்னெடுத்துச் செல்லவே புலிகள் விரும்புகிறார்கள்!

அழிவுகளுக்காகப் போராட்டமா?... அல்லது அழிவுகளி லிருந்து மக்களைக் காப்பதற்காகப் போராட்டமா?.. இதை நீங்கள் சிந்திக்கவேண்டும்!

இன்று புலிகள் யுத்தத்தை நிறுத்துவதாகக் கூறிக்கொண்டு என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?......

தாங்கள் நிழல் யுத்தம் நடத்துவதாக அவர்களே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்!

மக்களாகிய உங்களை வெகுஜனப் போராட்டம் என்று கூறிப் போராட அழைக்கின்றார்கள்! உங்களை படையினர் மீது கல்லெறியச் சொல்கிறார்கள்! படையினரின் சோதனைச் சாவடிகளை தீ மூட்டி எரிக்கச் சொல்லி நிர்ப்பந்திக்கிறார்கள்!

அதன் மூலம் படையினரை ஆத்திரமடையச் செய்கிறார்கள்! படையினரை மக்களாகிய உங்கள் மீது தாக்குதல் நடத்த நிர்ப்பந்திக்கிறார்கள்! மக்களாகிய உங்களது துன்பங்களையும் துயரங்களையும்..... நீங்கள் சந்திக்கும் அழிவுகளையும் வைத்து தங்களது அரசியலை நடத்த திட்டமிட்டுக் கொண்டிருக்கிறார்கள்!...

ஆகவே புலிகள், மக்களாகிய உங்களது அழிவுகளை எதிர்பார்க்கின்றார்கள்! உங்கள் சொத்துக்களை படையினரால் நாசமாக்க வேண்டும் என எண்ணுகிறார்கள்!

தேன் கூட்டுக்குக் கல்லெறிந்தால் என்ன நடக்கும் என்பதை நீங்கள் சிந்திக்கவேண்டும்! தேனீக்கள் வந்து உங்களைக் கொட்டித் தாக்கும்! அதிலிருந்து அரசியல் ஆதாயம் தேடுவதே புலிகளது நோக்கம்!

இதனால் சமாதான நோக்கம் வெற்றியடையப் போவதில்லை! மாறாக மக்களாகிய உங்களது சமாதான கனவுகள் சிதறடிக்கப்படுகின்றன!

ஈ.பி.டி.பி எதை விரும்புகிறது என்பதையும் நீங்கள் அறிந்திருக்க வேண்டும்!

புலிகள் எதை விரும்புகிறார்கள் என்பதையும் நீங்கள் அறிந்திருக்க வேண்டும்!

புலிகள் மக்களின் அழிவிலிருந்து அரசியல் நடத்த விரும்புகிறார்கள்!

ஈ.பி.டி.பி மக்களாகிய உங்களை அழிவுகளில் இருந்து காப்பாற்ற விரும்புகிறது;!

இவை இரண்டுக்கும் இடையிலான வேறுபாடுகளை உணர்ந்து மக்களாகிய நீங்கள் எழுச்சிகொள்ளத் தயாரானால் உங்கள் விடுதலைக்கான பாதையை எம்மால் செப்பனிட முடியும் என நான் நம்புகிறேன்!

உங்களது எழுச்சி என்பது புலிகளது சுயலாப அரசியலைப் புரிந்து கொள்வதும்.... அவர்களது வன்முறையைத் தூண்டும் போராட்டங்களுக்கு ஆதரவளிக்க மறுப்பதுமே ஆகும்!

நீங்கள் விழிப்படைந்தால்!..... உங்கள் விடுதலைக்காக நாங்கள் முனைப்படைய முடியும்!

மீண்டும் மற்றொரு உரிமை மடலில் சந்திப்போம்! நன்றி! வணக்கம்!

*திட்டங்கள் எங்களது!....., தீர்மானம் உங்களது!.....*
*தேசத்திற்காகத் தியாகங்களை ஏற்போம்!...*
*என்றும் நாம் மக்களுக்காக!....*
*பிரியமுடன்*
*செயலாளர் நாயகம்*

**தோழர் டக்ளஸ் தேவானந்தா...**

**நன்றி :- இதய வீணை**

## முட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

# மட்டக்களப்புச் சிறையிலிருந்து தப்பியோடிய தமிழ்க்கைதிகள்!




**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம் + அம்பி மகன்**

பரமதேவாவும் அப்போது சிறைக்குள்தான் இருந்தார். ஒரேயொரு ரிவோல்வர் மட்டும் டக்ளஸ் தேவானந்தாவின் கைகளுக்கு வந்து சேர்ந்திருந்தது. இந்த ரிவோல்வரும் சில ரவைகளும் உள்ளே எடுத்துவரப்பட்ட கதை சுவாரஸ்யமானது. சம்பந்தப்பட்டவர்கள் இன்னும் உயிரோடு இருப்பதாலும், இச் சிறையுடைப்பு சம்பந்தப்பட்ட சில முக்கிய தகவல்கள் இரகசியப் பொலிஸாரிடம் போகக் கூடாதென்பதற்காகவும் எல்லாவற்றையும் விலாவாரியாக விளக்குவதைத் தவிர்ப்பது நல்லது. பிளாஸ்டர்களும் உள்ளே கொண்டுவரப்பட்டிருந்தன. வேறு சில கூரான தகடுகளும், இரும்புக் கம்பிகளும் சேகரிக்கப்பட்டிருந்தன.

சிறைக் காவலர்களை ஏமாற்றிவிட்டு ஆயுதங்களை உள்ளே எடுத்து வருவது இலேசான விடயமல்ல. கறுப்பு நிறப் பாதணிகளைப் பயன்படுத்தி ரிவோல்வர்களைப் போல் தோற்றமளிக்கும் இரு போலி ஆயுதங்களும் தயாரிக்கப்பட்டன. ஏ.கே.47 ரகத்தைப் போன்ற ஒரு போலி ரைபிளும் தயாரிக்கப்பட்டது. சிறைக் காவலர்களை மடக்குவதற்கும் அவர்கள் சத்தமிடாதபடி வாயில் பிளாஸ்டர் போட்டு ஒட்டி, இழுத்து வந்து மேல்மாடி மண்டபச் சிறைக்குள் தள்ளுவதற்கான திட்டங்களும் தீட்டப்பட்டன. மேல்மாடி மண்டபச் சிறைக்கும் கீழே சிறைக் கூடச் செல்களுக்கும் காவலாக நிற்கும் இரு சிறைக் காவலர்களையும் மடக்கிப் பிடித்துக்கொண்டு வரும் பொறுப்பு நால்வரிடம் கையளிக்கப்பட்டது. சம காலத்தில் வெளியே பாய்ந்து சிறைச்சாலையின் பல இடங்களிலும் காவல் காக்கும் சிறைக் காவலர்களை மிரட்டி, மடக்கிப் பிடித்துக் கொண்டுவரும் பொறுப்பு வேறு சில இளைஞர்களிடம் பகிர்ந்து வழங்கப்பட்டது. அனைவரும் திறமையாகவும் விரைவாகவும் செயற்பட வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டது.

டக்ளஸ் தேவானந்தாவைப் பார்ப்பதற்குப் பார்வையாளர் நேரங்களில் 'குன்ஸி' அடிக்கடி வந்து போவதுண்டு. தப்பிச் செல்வதற்கான வேலைகள் வெளியே செய்யப்பட்டிருப்பதை, 'குன்ஸி' சூசகமாகத் தேவானந்தாவிடம் விளக்கினார். செப்டெம்பர் 22ஆம் திகதி டக்ளஸ் தேவானந்தாவும் குன்ஸியும் நீண்ட நேரமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். சிறைக் காவலரின் தலையீட்டையடுத்து குன்ஸி வெளியேறிச் சென்றார்.

**டக்ளஸ் தேவானந்தாவைப் பார்ப்பதற்குப் பார்வையாளர் நேரங்களில் 'குன்ஸி' அடிக்கடி வந்து போவதுண்டு. தப்பிச் செல்வதற்கான வேலைகள் வெளியே செய்யப்பட்டிருப்பதை, 'குன்ஸி' சூசகமாகத் தேவானந்தாவிடம் விளக்கினார். செப்டெம்பர் 22ஆம் திகதி டக்ளஸ் தேவானந்தாவும் குன்ஸியும் நீண்ட நேரமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். சிறைக் காவலரின் தலையீட்டையடுத்து குன்ஸி வெளியேறிச் சென்றார். மறுநாள் இரவு தப்பிச் செல்வதெனத் தமிழ்க் கைதிகள் திட்டமிட்டனர்.**

மறுநாள் இரவு தப்பிச் செல்வதெனத் தமிழ்க் கைதிகள் திட்டமிட்டனர்.

### 1983 செப்டம்பர் 23

அதிகாலை விடியல் பூத்தது. மேல்மாடி மண்டபச் சிறைக்குள் இருந்த இளைஞர்களிடம் ஒருவித துடிதுடிப்பு. டக்ளஸ் தேவானந்தா பொறுப்புகள் கொடுக்கப்பட்ட இளைஞர்களை மீண்டும் அழைத்துக்

(அரசியல் தொடர்)

கலந்துரையாடினார். சிறைச்சாலை வாசலூடாகத் தப்பிச் செல்வதே திட்டம். அது தவறும் பட்சத்தில் முடிந்தால் குளியலறைப் பக்கமுள்ள கள்ள வழியாகத் தப்பிச் செல்வது என்றும் திட்டம் தீட்டினர். எதற்கும் சிறைக் கூடத்தின் பின் பக்க வெளிச் சுவரை இடித்து, பெரிய துவாரமொன்றை ஏற்படுத்தி அதனூடாகத் தப்புவதற்கும் திட்டம் தீட்டப்பட்டது. இந்தப் பொறுப்பு வரதராஜப் பெருமாளிடமும் அழகிரியிடமும் வழங்கப்பட்டது.

இரவு எட்டு மணியை நெருங்கிக்கொண்டிருந்தது. சிறைச்சாலைக்கு வெளியே வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனமொன்றுக்குள்ளிருந்து 'டோர்ச்' மூலம் குன்ஸி கொடுத்த சமிக்ஞை இளைஞர்களுக்கு கொடுக்கப்பட்டது. வழமையாகக் காவலர் ஒருவர் தேநீர் கொண்டு வருவார். அவரோடு சிறைக் காவலர் ஒருவரும் பாதுகாப்புக்காக வருவது வழக்கம். அன்று சிறைக் காவலர் அந்தோனிப்பிள்ளை வந்தார். மேல்மாடி மண்டபச் சிறையின் கதவு திறக்கப்பட்டது. உள்ளே நுழைந்த அந்தோனிப்பிள்ளை மீது இருவர் பாய்ந்து மடக்கினர். மறுகணமே வாயில் பிளாஸ்டர் ஒட்டப்பட்டு அவர் மூலையில் தள்ளப்பட்டார். மூவர் அவருக்குக் காவலாக நின்றனர். ஏனைய கைதிகள் வெளியே பாய்ந்தோடி பல்வேறு இடங்களில் நின்ற சிறைக் காவலர்களை மிரட்டி மடக்கினர். கீழ் மாடிச் சிறையறைகளுக்குக் காவலாக இருந்தவர் எதிர்ப்புத் தெரிவிக்காமலேயே சரணடைந்தார். அவரிடமிருந்து திறப்புக் கோர்வை பறிக்கப்பட்டது. தண்டனை பெற்ற கைதிகள் அடைத்து வைக்கப்பட்டிருந்த சகல சிறையறைகளையும் திறந்து கைதிகள் வெளியேற்றப்பட்டனர். மேல்மாடி மண்டபச் சிறைக்கு இழுத்துவரப்பட்ட சகல காவலர்களும் பிளாஸ்டர் ஒட்டப்பட்டு உள்ளே தள்ளப்பட்டனர். மண்டபச் சிறைக் கதவு மூடப்பட்டது.


சிறைக்கு வெளியே டேவிற் ஐயாவின் காந்தீய இயக்கத்திற்குச் சொந்தமான இரு வேன்கள் நிறுத்தப்பட்டிருந்தன. இளைஞர்கள் அனைவரும் இரு வான்களிலும் ஏறிக்கொண்டனர். மகளிர் சிறையில் அடைக்கப்பட்டிருந்த நிர்மலாவை விடுவிக்கும் பொறுப்பு வாமதேவனிடம் வழங்கப்பட்டிருந்தது. அவர் தப்பியோடும் அவசரத்தில் தனது பொறுப்பைக் கைவிட்டுவிட்டு ஓடிவந்து வாகனத்தில் ஏறிக்கொண்டார். வயிற்றில் சூடுபட்டு சிறை ஆஸ்பத்திரியில் இருந்த இராமநாதனையும் சில இளைஞர்கள் தோளில் சுமந்து கொண்டுவந்து வாகனத்தில் ஏற்றினார்கள். வண. பிதா சிங்கராயர், கோவை மகேசன், டாக்டர் தர்மலிங்கம் ஆகியோர் தம்மால் தப்பியோடி வர முடியாது எனத் தெரிவித்துவிட்டனர். பின்பக்கச் சுவரை உடைத்துக்கொண்டிருந்த வரதராஜப் பெருமாளையும் அழகிரியையும் மறந்துவிட்டு ஏனைய இளைஞர்கள் வாகனங்களில் ஏறிவிட்டனர். ஏற்கெனவே திட்டமிட்டபடி வாவிக்கூடாகப் படகொன்றில் தப்பிச் சென்றுகொண்டிருந்த பனாகொடை மகேஸ்வரனும், காளியும், சுப்பிரமணியமும் சுவரை இடித்துக்கொண்டிருந்த வரதராஜப்பெருமாளையும் அழகிரியையும் தமது படகில் ஏற்றிக்கொண்டனர்.

ஐம்பதுக்கு மேற்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் சுதந்திரப் பறவைகளாக வெளியேறினர். தமிழ் இளைஞர்கள் நடத்திய முதலாவது சிறையுடைப்புச் சம்பவமென வரலாறு இதனைப் பதிவுசெய்துகொண்டது. சிறையுடைப்புச் சம்பவம் பற்றிய தகவல் அறிந்ததுமே மட்டக்களப்பில் நிலைகொண்டிருந்த படையினர் அதிர்ந்தனர். கைதிகளைத் தேடும் நடவடிக்கைகள் மூலைமுடுக்கெல்லாம் முடுக்கிவிடப்பட்டன. தகவல் கிடைத்ததும் ஜனாதிபதி ஜெயவர்த்தன ஆடிப்போய் விட்டார். மடக்கிப் பிடிக்கும்படி அதிரடி உத்தரவும் போட்டார். கனகச்சிதமாகத் திட்டங்களைத் தீட்டித்தப்பிய தமிழ் இளைஞர்களைப் பிடிக்க முடியவில்லை. மறுநாள் ஊடகங்களில் பரபரப்புச் செய்திகள் இறக்கை கட்டிப் பறந்தன. சர்வதேசச் செய்தி நிறுவனங்களினூடாக உலகின் மூலை முடுக்கெல்லாம் செய்திகள் பரவின. இலங்கையிலுள்ள சகல ஊடகங்களும் இச் சிறையுடைப்புச் சம்பவத்தைத் தலைப்புச் செய்தியாக வெளியிட்டன. தமிழ் இளைஞர்கள் சிறையுடைத்து நீர்மூழ்கிக் கப்பல் மூலம் தப்பிச் சென்றுள்ளனர் எனவும் சில பத்திரிகைகள் பரபரப்பாகச் செய்திகளை வெளியிட்டன.

(தொடர்ந்து வடியும்....)

# கருணாவின் புதிய நிலைப்பாடு

ஆற்றல்மிக்க புலித் தளபதியெனப் பிரபாகரனாலேயே சர்வதேச, உள்ளூர் ஊடகவியலாளர்கள் மத்தியில் பாராட்டப்பட்டவர் கருணா அம்மான். அவர் தலைமையோடு முரண்பட்டுக் கொண்ட பின்னர் கடந்த வருடம் மார்ச் மாதம் பிரபா அணிப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்கானார். அன்று ஆரம்பித்த புலிகளின் அதிர்வேட்டுத் தாக்குதலின் நீண்ட பயணம் இன்றும் முடிந்தபாடில்லை. இதனை எழுதிக் கொண்டிருக்கும் போது கடைசியாகப் பொலன்னறுவை சொருவிலில் கருணா அணி உறுப்பினர்கள் ஐவர் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி மரணித்துள்ளனர்.


கருணா அம்மான்

தேவையான பணத்தை எடுத்துக்கொண்டு வெளிநாட்டுக்குத் தப்பிப் போவென்று பிரபாகரன் வழங்கிய 'பாவமன்னிப்பை' ஏற்றுக்கொள்ள மறுதலித்து, சகோதரப் படுகொலைகளைத் தவிர்க்க விரும்பிக் கிழக்கிலுள்ள தனது ஐயாயிரத்துக்கு மேற்பட்டோரைக் கொண்ட படையணிகளைக் கலைத்து விட்டு சமாதானப் பாதையைத் தேடிக்கொண்டவர் கருணா. ஒரு கௌசல்யனுக்காகக் கண்ணீர்விட்ட கொபி அனானும் சமாதான ஏற்பாட்டாளர்களான நோர்வேயும்கூட கருணா அணி மீது தாக்குதல் நடத்தப்பட்டபோது மௌன விரதம் அனுஷ்டித்தமை பழைய கதை. விசுவாமித்திரரின் தவக்கோலத்தைக் கலைக்க நடனமாடிய மேனகையைப் போல, ஆயுதங்களைக் களைந்து சமாதானத் துறவியாக முனைந்த கருணாவை, வன்னியிலிருந்து வந்த ஆயுத அட்டகாசக்காரர்கள் முனிபுங்குவரின் கோலத்தைக் கலைக்க வைத்து விட்டனர். யார் ஏற்றுக் கொண்டாலும் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் இதுவே நேற்றைய 'சமாதானத் துறவி'யான கருணாவின் இன்றைய நிலைப்பாடு.

இந்த அட்டகாசங்களையெல்லாம் பார்த்துக்கொண்டு அரசாங்கமும் சமாதான ஏற்பாட்டாளர்களும் சப்த நாடிகள் எல்லாம் அடங்கியொடுங்கி மௌனம் காத்ததால் தம்மைப் பாதுகாத்துக்கொள்ள வேறு வழியில்லையென்கின்றனர் கருணா தரப்பினர். அதாவது, தற்காப்புக்கான தாக்குதல் என்பதே கருணா அணியின் புதிய நிலைப்பாடு. சாத்தான்களுக்கு வேதம் ஓதுவதில் பயனில்லை. எருமைகளுக்குத் தேவாரம் பாடிப் பிரயோசனம் இல்லையென்பதை கருணா அணி இரத்தம் சிந்தி அனுபவப் பாடமாகக் கற்றுக் கொண்டது. கானகத்துப் புலிகள் துரத்தித் துரத்திக் குதறும் போது எவ்வளவு காலத்துக்குத்தான் கிழக்கில் கருணா தரப்பினரால் தடை தாண்டும் ஓட்டத்தை நடத்திக் கொண்டிருக்க முடியும்?

அதுமட்டுமல்ல, சுனாமிப் பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்களுக்கான நிவாரணப் பணிகளை மேற்கொள்ள அவசர அவசரமாக உத்தேசிக்கப்பட்டிருக்கும் பொதுக் கட்டமைப்பில் 'ஆயுதப் புலி' களையும் சம பங்குதாரர்களாக ஏற்றுக்கொள்ள அரசும் சர்வதேச சமூகமும் கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு முனைந்து நிற்பதும் தமக்கு விடுக்கப்பட்டிருக்கும் புதிய அச்சுறுத்தல்கள் என்கின்றனர் கருணா தரப்பினர். இது நியாயமான ஆதங்கமே. போக்கிடமின்றித் தவிக்கும் கருணா தரப்பினரைத் தேடித் தேடியழிக்கும் பிரபா அணியினரிடம் அனர்த்த நிவாரண ஆதிக்கமும் கிடைத்துவிட்டால் பட்டினி போட்டே கருணா விசுவாசிகளையும் ஆதரவாளர்கள் மற்றும் அனுதாபிகளையும் கொன்றுவிடுவார்கள் என்ற அவர்களின் பீதி நியாயமானதுதான். பொதுக் கட்டமைப்பில் புலிகள் சம பங்குதாரர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டால் கிழக்கைத் தமது பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப் பகீரத முயற்சியெடுக்கும் புலிகளுக்கு 'வெறு வாய்க்கு அவல் கிடைத்த' கதையாகிவிடும். எனவே பொதுக் கட்டமைப்பில் ஜனநாயக ரீதியான பிரதிநிதித்துவம் வேண்டும் என்ற கருணாவின் கோரிக்கையும் நியாயமானதுதான். பொதுக்கட்டமைப்பொன்று அமைக்கப்படுமானால் கருணா அணி உட்பட தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களின் பிரதிநிதித்துவம் அதில் உள்ளடக்கப்பட வேண்டும்.

நோர்வே, சமாதான முயற்சிகளில் இருந்து விலகி இந்தியாவுக்கு வழிவிட வேண்டுமென்ற கோரிக்கையும் அண்மைக்காலமாக கருணா தரப்பினரால் முன்வைக்கப்பட்டு வருகிறது. இதனைத் தவறான கோரிக்கையென்று நியாயப்படுத்த முடியாமல் இருக்கிறது. ஏனெனில் வன்னிக்காடுகளில் இருந்து புறப்பட்ட புலிகள், அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கூடாக ஆயுதங்களுடன் கிழக்குப் பகுதிகளுக்குள் ஊடுருவி கருணா தரப்பினர் மீது தாக்குதல் நடத்திய போது கண்டனம் தெரிவிக்க நோர்வே தவறிவிட்டது. அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் ஆயுதங்களுடன் புலிகள் நடமாடக்கூடாதென்ற யுத்த நிறுத்த விதி துச்சமாக மீறப்பட்டிருக்கிறது. சமாதான திசையை நோக்கித் திரும்பத் தயாரான கருணா தரப்பினர் மீது தொடுக்கப்பட்ட அராஜகத் தாக்குதலில் நோர்வேக்கும் சம்பந்தமுண்டென்ற சந்தேகங்களைக் கருணா தரப்புக் கிளப்புவதும் இங்கு குறிப்பிடத் தக்கது.

கிழக்கு கொலைக்கூடமாக மாற்றப்படக்கூடாதென்பதும், கருணா அணி பதில் தாக்குதலில் ஈடுபடக்கூடாதென்பதும் இலங்கை வாழ் தமிழ் மக்களின் ஏகோபித்த விருப்பமாகும். ஆனால், அடிப்பவனுக்கா, அடிவாங்குபவனுக்கா அகிம்சையைப் போதிக்க வேண்டுமென்பதில் கூட ஒரு நியாயம், நெறி இருக்கிறதுதானே. படுத்துக் கிடக்கும் சிங்கத்தின் மீது சுண்டெலிகள் ஏறி விளையாட முனைகின்றனவென்று பொலன்னறுவை சொருவிலில் உயிர்தப்பிய கருணா அணிப் போராளி ஒருவர் அடித்துக் கூறுகிறார். இதனைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். எது எவ்வாறு இருப்பினும் இனியாவது புலிகள் கருணா அணி மீது நடத்தும் தாக்குதலை நிறுத்துவதன் மூலம் கருணா தரப்பையும் வழிக்குக் கொண்டுவர முடியும். புலிகள் வழி சமைப்பார்களா?




**அடுத்த வாரம் வரும்**

# இளைஞர்கள் மத்தியில் ஒரே ஒரு வாக்கியம்!


அமெரிக்கக் கால்பந்தாட்ட வீரர் ஓ.ஜெ.சிம்சனை உங்களுக்குத் தெரிந்திருக்கும். சமீப வருடங்களில் அவரின் வாழ்க்கையில் நடந்த பரபரப்பான நிகழ்ச்சிகளுக்குள் நாம் போக வேண்டாம். அவர் ஒரு மாபெரும் விளையாட்டு வீரர் என்ற கோணத்தில் மட்டுமே பார்ப்போம்....கால்பந்தாட்டத்தில் சிம்சன் ஒரு புயல்! சுழன்றடிக்கும் சூறாவளி போல களத்தில் அவர் இறங்கினால், எதிரணி பஞ்சாகப் பறந்துவிடும். கால்பந்தாட்டத்தில் அவர் சாதிக்காத சாதனைகளே இல்லை! கோடி கோடியாகப் பணம், புகழ் என்று சம்பாதித்த அவர், ராக்கெட்டின் மூக்கின் மேல் உட்கார்ந்து பயணம் செய்தது மாதிரி படுவேகமாக வெற்றியின் உச்சிக்குப் போனவர்!

இத்தனைக்கும், ஓ.ஜெ.சிம்சன் பிறந்தது ஓர் ஏழைக் குடும்பத்தில்! அவர் சிறுவனாக இருந்தபோது, காசு கொடுத்து டிக்கெட் வாங்கி கால்பந்தாட்ட போட்டி பார்க்கும் அளவுக்குக்கூட அவருக்கு வசதியில்லை!

அவர் சிறுவனாக இருந்த அந்தக் காலகட்டத்தில் கால்பந்தாட்டத்தில் கொடிகட்டிப் பறந்துகொண்டிருந்தவர் பிரௌன்!

ஒருநாள் பிரௌன் அசுரத்தனமாக விளையாடிவிட்டு கைநிறையக் கோப்பைகளோடு அரங்கத்தை விட்டு வெளியே வந்தார். அப்போது அவரின் கால் முட்டி உயரம்கூட இல்லாத ஒரு சிறுவன், பிரௌனின் கால்களைக் கைகளால் சுரண்டி "சார்" என்று கூப்பிட்டான். பிரௌன் சிறுவனைப் பார்த்து, "என்ன?" என்றார்! அந்தச் சிறுவன், "சார், நான் உங்கள் இரசிகன்!" என்றான்.

"ஓஹோ...அப்படியா!" என்று கேட்டுவிட்டு, பிரௌன் அந்த இடத்திலிருந்து நகர்ந்து காரில் ஏறப் போனார். திரும்பவும் யாரோ கால்களைச் சுரண்டுவது போலிருந்தது. குனிந்து பார்த்தார். மீண்டும் அதே சிறுவன்! "சார், நீங்கள் ஆரம்பக் கட்டத்திலிருந்து இன்று வரை எத்தனை போட்டிகளில் விளையாடியிருக்கிறீர்கள்...ஒவ்வொரு போட்டியிலும் எத்தனை கோல் போட்டிருக்கிறீர்கள்....என்னென்ன சாதனைகள் செய்திருக்கிறீர்கள் என்ற முழுப் புள்ளிவிவரங்களும் எனக்குத் தெரியும்" என்றான். சின்னப் புன்னகையுடன், "குட்" என்று சொல்லிவிட்டு பிரௌன் நகர, சிறுவன் அவரை மீண்டும் நிறுத்திச் சொன்னான்: உங்களின் அத்தனை சாதனைகளையும் ஒருநாள் நான் முறியடிப்பேன்!" பிரௌன் ஆச்சரியத்தோடு அந்தச் சிறுவனைத் தட்டிக்கொடுத்துவிட்டு போய்விட்டார்.



அந்தச் சிறுவன் வளர்ந்து பெரியவன் ஆனதும், சொன்ன மாதிரியே பிரௌனின் அத்தனை சாதனைகளையும் முறியடித்தான். அவன்தான்...யெஸ்...ஓ.ஜெ.சிம்சன்!

யாருக்குமே ஏதாவது ஒரு குறிக்கோள் இருந்தால்தான் வாழ்க்கைக்கே ஒரு அர்த்தம் வரும். இப்போது சொல்லுங்கள், உங்கள் வாழ்க்கையின் குறிக்கோள் என்ன?

எனக்கு வந்த ஒரு கடிதம் இது -

"சுவாமி.....இந்த டிசம்பர் வந்தால் எனக்கு 35 வயது முடிந்துவிடும். எல்.ஐ.ஸி. ஏஜெண்ட், ஹேர் ஆயில் டிஸ்ட்ரிபியூட்டர் என்று என்ன என்னவோ வேலைகள் எல்லாம் செய்து பார்த்துவிட்டேன். இப்போது கணக்குப் பார்க்கும்போது, சம்பாதித்ததைவிட, நான் செலவழித்ததுதான் அதிகம் என்று புரிந்தது! நான் மிகவும் சோர்ந்துவிட்டேன். சுவாமி....நான் இனி என்ன செய்யட்டும்?"

பணம், பதவி, கார், பங்களா என்று எதுவானாலும் ஒருவர் இன்னொருவருக்குப் பரிசாகக் கொடுக்க முடியும். ஆனால், வெள்ளித் தட்டில் வைத்துப் பட்டுத் துணியால் மூடி ஒருவர் மற்றவருக்குக் கொடுக்க முடியாத ஒன்று உண்டென்றால், அது வெற்றி! புத்திசாலித்தனத்தோடு பாடுபட்டால் மட்டுமே அதை அடைய முடியும்.

கர்னல் சான்டர்ஸின் வாழ்க்கை வரலாற்றை இந்த இடத்தில் உங்களிடம் பகிர்ந்துகொள்வது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன். இன்று கே.எப்.சி. என்ற சிக்கன் ·பாஸ்ட் ·புட் டெல்லி, பெங்களூர் போன்ற இந்திய நகரங்களில் கூட வந்துவிட்டது. உலகம் முழுவதும் பல நூறு கிளைகளைக் கொண்ட இந்த சிக்கன் ·பாஸ்ட் ·புட் நிறுவனத்தின் வருட வருமானம் பல ஆயிரம் கோடி ரூபாய்! இந்த வெற்றி அத்தனைக்கும் வித்திட்டுச் சாதித்தவர்தான் கர்னல் சான்டர்ஸ்!

ஓய்வுபெற்று சாய்வு நாற்காலியில் ஹாயாகப் படுத்துக் கிடக்க வேண்டிய வயதில், அதாவது 63 வயதில்கூட கர்னல் சான்டர்ஸால் குறிக்கோள் இல்லாமல் வாழ்க்கையைக் கழிக்க முடியவில்லை! மேலே மொறுமொறுவென்றும் உள்ளே ஜூஸியாகவும் இவருக்குக் கோழி வறுவல் செய்யத் தெரியும். இந்தக் கோழி வறுவல் சமையல் குறிப்பை வைத்துக்கொண்டு ஹோட்டல் ஹோட்டலாக ஏறி இறங்கினார் சான்டர்ஸ். அவர் சந்தித்த ஹோட்டல் முதலாளிகளில் பலர் இவரின் சமையல் குறிப்பைப் படித்துக்கூடப் பார்க்காமல் பிச்சைக்காரனை விரட்டுவதைப் போல இவரை விரட்டியடித்தார்கள். கர்னல் சான்டர்ஸ் நம்பிக்கை இழக்கவில்லை! சோர்ந்து உட்கார்ந்துவிடவில்லை. புதிய புதிய நகரங்களுக்குப் போய், அங்குள்ள ஹோட்டல் முதலாளிகளிடம் தனது சமையல் குறிப்பைக் கொடுத்துப் பார்த்தார். அந்தத் தள்ளாத வயதிலும் நம்பிக்கையோடு இன்னும் பல ேோட்டல் படிக்கட்டுகளில் ஏறி இறங்கினார். அவர் இப்படி ஏறி இறங்கிய ஹோட்டல்களின் எண்ணிக்கை 1,006. தொடர்ந்து இரண்டு வருடம் 'விடாமுயற்சி' என்ற வார்த்தையை வாழ்க்கையாகவே வாழ்ந்து காட்டினார் சான்டர்ஸ். கடைசியில் ஒரு ஹோட்டல் முதலாளி இவரின் சமையல் குறிப்பு மீது அக்கறை காட்ட, இன்று உலகம் முழுவதும் K.F.C. இருக்கிறது.

வின்ஸ்டன் சர்ச்சில் எத்தனையோ உணர்ச்சிபூர்வமான உரைகளை நிகழ்த்தியிருக்கிறார். ஒருமுறை இளைஞர்கள் மத்தியில் அவரைப் பேசுவதற்கு அழைத்தார்கள்.

சர்ச்சில் ஒரே ஒரு வாக்கியம்தான் பேசினார். ஆனால், அந்த வாக்கியம் இன்று எல்லோரும் மேற்கோள் காட்டும் மறக்க முடியாத வாக்கியமாக அமைந்துவிட்டது.

அவர் பேசியது -

Never Never Never give up!

**நன்றி : சுவாமி சுகபோதானந்தா.**

(தொடர்ந்து வரும்.........)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

## குறுக்கெழத்துப் போட்டி 117

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 4 |
| 5 | 6 | 7 | 8 | |
| 9 | 10 | | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | |
| 17 | 18 | | | 20 |
| | 21 | 22 | 23 | 24 |

**குறுக்கெழுத்துப் போட்டி இல 115க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

செல்வன் ஆர். திலகன், இல. 48/15, பி. டவுன், ஹட்டன்.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1. அபினயா, 170/5, புனித அன்ரூஸ் ட்ரைவ், நுவரெலியா.
2. கே. அரசேஸ்வரன், கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.
3. இ. உஷானி, கரம்பொன் கிழக்கு, ஊர்காவற்றுறை.
4. ச. ஜெயகரன், 69, மாமாங்க கோவில் வீதி, மாமாங்கம், மட்டக்களப்பு.
5. சு.ஜோ, 19/3, மெக்கெய்ஸர் வீதி, உவர்மலை, திருகோணமலை.
6. த. நாகையா, 107, பாடசாலை வீதி, சேனைக்குடியிருப்பு -01, கல்முனை.
7. எம். ஷபீக், 20, ஹட்டன் ஹவுஸ் வீதி, ஹட்டன்.
8. என். ஜெயராஜ், 24 1/1, கல்பொத்தை வீதி, கொட்டாஞ்சேனை.
9. சி. அன்பு, சந்திரபவனம், வீரபத்திரர் கோவில் வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
10. க. கமால்தீன், புன்னைக்குடா வீதி, ஏறாவூர் - 03.

### இடமிருந்து வலம்

1. தமிழில் கலந்துள்ள பிரெஞ்சு மொழிச் சொல்/சமையலறை.
5. கிரியை என்றும் பொருள்படும் (குழம்பியுள்ளது).
9. இது தெரியாதவரை கபோதி என்பர் (திரும்பியுள்ளது).
11. இறைச்சி, காய்கறி போன்றவற்றை வேகவைத்து தயாரிக்கப்படும் திரவ உணவு (திரும்பியுள்ளது).
13. ஏர் (குழம்பியுள்ளது).
17. கடக ராசியில் உள்ளடங்கும் நட்சத்திரம் ஒன்று (குழம்பியுள்ளது).
21. பருப்பு, காய்கறிகளைப் போட்டு தயாரிக்கும் ஒருவகைக் குழம்பு (குழம்பியுள்ளது).

### குறுக்கெழுத்துப் போட்டி 115 விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 ச | 2 க | 3 ம் | 4 உ | 5 ம் |
| 6 ற | 7 தி | | | 8 றா |
| 9 ஜூ | 10 த் | 11 தி | 12 ரை | |
| 13 ம் | | 14 மீ | | 15 ஃ |
| 16 க | 17 ல் | 18 யா | 19 ணி | |
| 20 ல | 21 ஸா | 22 க | 23 த | 24 ர் |

### மேலிருந்து கீழ்

1. காதணி (குழம்பியுள்ளது).
2. தமிழ்மொழி பேசப்படும் மிகச் சிறிய ஆசிய நாடு.
3. கோள்களுள் ஒன்று (தலைகீழ்).
4. ஆங்கில மாதமொன்று.
8. மேற்குறிப்பிட்ட நாட்டில் வீதியில் இதைப் போடுவது தண்டனைக்குரிய குற்றம்.
15. நுரையீரலுடன் தொடர்புபட்ட நோய் ஒன்று.
20. முல்லைக்குத் தேர் கொடுத்த மன்னன் (தலைகீழ்).

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 26.04.2005 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-117
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.


ராதா ரெக்ஸ்ரைல்ஸின்

வண்ணச் சேலை பரிசுப் போட்டி

எல்லா விதமான, ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என எல்லோருக்கும் பிடித்தமான ஆடை அணிகளின் அட்சய பாத்திரம். எல்லாத் தெரிவுகளும் ஒரே கூரையின் கீழ்.

RATHAA TEXTILE
377, 379A, Galle Road, Wellawatta, Colombo-06.
(Opposite of Delmon Hospital) Tel: 2364792

Branch:
No. 33,37th Lane,
Colombo-06.
☎: 2364727

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்

91

பெயர்:........................
முகவரி:........................
........................
தொழில்: ........................
கையொப்பம்: ..............

உண்மை நேர்மை வெளிப்படைத் தன்மை



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிர்ஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே வண்ணச் சேலை பரிசு வழங்கப்படும்.
★ மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி:
27-04-2005

அனுப்ப வேண்டிய முகவரி:-
'ராதாவின் வாரம் ஒரு வண்ணச்சேலை'
தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772,
கொழும்பு.


**இந்த வாரம் யாருக்கு சேலை?**
**கோப்பாய் தெற்கு வாசகிக்கு அதிர்ஷ்டம்!** 89

இவ்வாரம் சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

**ச. நிர்மலாதேவி,**
சந்திர பவனம், வீரபத்திரர் கோயிலடி, கோப்பாய் தெற்கு.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம். அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?! இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்புகொண்டு பரிசினைப் பெறலாம்.

# அமைதிக் கிராமம்

எனக்கு அமைதிக் கிராமம் பற்றிய தகவலைத் தந்தவர் ஓர் வயோதிபர். அவர் எனது பாட்டனுமல்லர். எனது கிராமத்தில் நான் அவரைக் கண்டதுமில்லை. ஓர் கடலின் கரையில் அவர் எண்ணிக் கொண்டிருந்தார். அவர் எதை எண்ணுகின்றார் என்பது பற்றி என்னால் அனுமானிக்க முடியாதபோது எண்ணுதலில் அவர் காட்டிய தீவிர கரிசனை என்னை அவர் பக்கம் இழுத்துச் சென்றது. அவரது எண்ணும் தியானம் எனது நிழலால் குழம்பக் கூடாது என்பதற்காக நான் அவரிலிருந்து என்னைச் சற்றே ஒதுக்கி வைத்தேன். ஆனால் அவர் எதை எண்ணுகின்றார் என்பதை அவரது சைகைகளை வைத்துக்கூட என்னால் ஊகிக்க முடியவில்லை. திடீரென என்னையும் மீறி நான் இந்தக் கேள்வியைக் கேட்டுவிட்டேன்.

"வயோதிபரே! உங்கள் தியானத்தைக் குழப்ப வேண்டும் என்கின்ற எந்த எண்ணமும் எனக்குள் இல்லை. உங்களிடம் ஓர் கேள்வியை நான் கேட்கலாமா?"

"கேள்! என்னிடம் பதில் இருந்தால் அதனை நான் உனக்குச் சொல்வேன்."

"நீங்கள் எதையோ எண்ணிக்கொண்டிருக்கின்றீர்கள் என நினைக்கின்றேன். ஆனால் எதை எண்ணுகின்றீர்கள் என்பதை நான் அறியலாமா?"

"நான் அலைகளை எண்ணிக்கொண்டுள்ளேன்."

"எவ்வளவு அலைகள் எண்ணப்பட்டன?"

"எண்ணி முடிவதற்கு முன்னர் என்னால் தொகையைச் சொல்ல முடியாது."

"நீங்கள் எண்ணி முடியும் வரை நான் உங்கள் அருகில் இருக்கலாமா?"

"இரு! நான் எண்ணி முடியும் வரை என்னிடம் எந்தக் கேள்விகளையும் கேட்காதே!"

அவர் அலைகளை எண்ணும் விதத்தைப் பார்த்தபோது எனக்கும் அலைகளை எண்ணும் ஆசை வந்தது. நானும் எண்ண வெளிக்கிட்டேன். எண்ணுவது பிழைக்கும் வேளைகளில் அலைகளை மீளவும் எண்ணுவதில் பல மணிகளைச் செலவழித்ததால் எனக்குக் களைப்பு வந்தது. இதே வேளையில் வயோதிபர் மிகவும் அமைதியாக இருந்து எண்ணுவதைப் பார்த்து ஆச்சரியப்பட்டேன்.

வானம் மங்கி அலைகளை இருள் மூடியபோதும் அவர் எண்ணிக்கொண்டிருந்தார்.

"மன்னிக்கவும்! அலைகளை இருள் மூடியபோதும் உங்களால் எப்படி அவைகளை எண்ண முடிகின்றது?"

"ஒலிகளின் துணையால்."

"நாளை உங்களை இதே இடத்தில் சந்திக்க முடியுமா?"

"நான் அலைகளை எண்ணத் தொடங்கிப் பல வருடங்கள். அவைகளை எண்ணி முடிய இன்னும் பல வருடங்கள் எடுக்கலாம். நாளையும் நான் இங்கே இருப்பேன்."

அலைகளது ஒலிகளைச் சுமந்தபடி நான் வீடு திரும்பினேன்.

மறுநாள் நான் கரைக்குச் சென்றேன். கடல் அமைதியாகவும் அலைகளற்றும் இருந்தது. வயோதிபரும் அதே இடத்தில் இருந்தார். அவரது விழிகளோ கடல் மீது.

"இவ்வளவு அமைதியாகவும் பொறுமையாகவும் இருந்து அலைகளை எண்ண எங்கே கற்றுக்கொண்டீர்கள்?" எனக் கேட்டேன்.

"அமைதிக் கிராமத்தில்" என மிகவும் அமைதியாகச் சொன்னார்.

"அமைதிக் கிராமமா? அது எங்கே உள்ளது?"

"அங்குதான் நான் பிறந்தேன். வாழ்ந்தேன்."

"அதனை விட்டு ஏன் இங்கு வந்தீர்கள்?"

"எனது மூன்று மனைவிகளும் ஒரே தினத்தில் ஒரே நேரத்தில் காலமாகிப்போன காரணத்தால்."

"உங்களது கதை சோகமானது. அமைதிக் கிராமத்தில் ஏன் இந்த மூன்று மரணங்களும் ஒரே தடவையில் நிகழ்ந்தன?"

"அலைகள் வரப்போகின்றன. என்னால் இப்போது உனக்குப் பதில் சொல்ல முடியாது."

"என்னால் உங்களை விளங்க முடிகின்றது. தயவுசெய்து அமைதிக் கிராமத்துக்கான பாதையை எனக்குக் காட்ட முடியுமா?"

"ஏறு! இந்தப் படகில் உடனடியாக ஏறு! அது உன்னை அமைதிக் கிராமத்துக்கு அழைத்துச் செல்லும்" என்றபடி ஒரு படகைக் காட்டினார்.

அது ஓர் சிறு படகு. அதற்குள் எவருமே இல்லை.

"எனக்குப் படகோட்டத் தெரியாது."

"உன்னோடு பேசுவதற்கு எனக்கு நேரம் இல்லை. ஏறு! அது உன்னை அமைதிக் கிராமத்துக்குக் கூட்டிச்செல்லும்!"

நான் படகில் ஏறினேன்.

இன்னொரு கரையில் நான் விழித்த போது எனக்கு முன் ஓர் கிராமம் தெரிந்தது. படகிலிருந்து வெளியேறினேன். நான் வந்து இறங்கிய இடம் வறண்டு கிடந்தது. மரங்கள் இலைகளைத் தொலைத்து மொட்டையாக இருந்தன. வீடுகள் உடைந்தும் கூரைகள் இல்லாமலும் இருந்தன. இந்தக் கிராமத்தை விழுங்கிய பிசாசு எது என எனக்குள் நான் கேட்ட வேளையில் ஓர் கிழவியின் முகம் தெரிந்தது. உடலிலோ பல உடைவுகள்.

"அம்மா!" என நான் அவளை அழைத்தேன். என்னை அவள் விரக்தியோடு பார்த்தாள்.

"இந்தக் கிராமத்தின் பெயரை நான் அறியலாமா?"

"அமைதிக் கிராமம்" என்றபடி தனது முகத்தைத் திருப்பி சிரமப்பட்டு நடந்தபடி எனது விழிகள் முன் மறைந்தாள்.

அமைதிக் கிராமம் மனிதர்கள் இல்லாத கிராமமோ எனும் சந்தேகம் எனக்குள் ஏற்பட்டது. கிழவியைக் கண்டபின் எனது பாதம் சென்ற வழிகளில் எவருமே தென்படவில்லை. இதற்காக எனது பாதங்கள் சளைத்துக் கொள்ளவில்லை. நான் நடந்தேன், நடந்துகொண்டேயிருந்தேன்.

கூரையில்லா வீடொன்றின் உடைந்த கதவின்முன் தனது கூந்தலை நிலத்தில் அலையவிட்டபடி படுத்துக் கிடந்த ஓர் இளம் பெண் என்னைக் கண்டதும் எழுந்து என் முன் வந்தாள்.

"எனது கணவனை நீங்கள் எங்காவது கண்டீர்களா?" எனக் கண்ணீர் தளும்பக் கேட்டாள்.

"நான் இப்போதுதான் முதலாவது தடவையாக அமைதிக் கிராமத்துக்கு வந்துள்ளேன். இங்கு ஓர் வயோதிபர் வாழ்ந்தார் என்பது மட்டும் தெரியும். அவருக்கு மூன்று மனைவிகள் இருந்தனர் என்பதையும் அவர்கள் ஒரே தடவையில் இறந்தனர் என்பதையும் அவர் வாயால் அறிந்தேன். இதனைத் தவிர இங்கு வாழ்வோர் பற்றி எனக்கு எதுவும் தெரியாது."




"நீங்கள் சொல்லும் வயோதிபர் எனது தந்தையே. அவர் இப்போது எங்கு உள்ளார்? என்ன செய்கின்றார்?"

"அவர் கடலின் கரையின் முன் உள்ளார். அலைகளை எண்ணிக் கொண்டுள்ளார்."

"அந்தக் கரைக்கு என்னையும் அழைத்துச் செல்ல முடியுமா?"

"நான் இன்னமும் அமைதிக் கிராமத்தை முழுமையாகப் பார்க்கவில்லை. பார்த்தபின் திரும்பி வரும்போது உன்னை இங்கே கண்டால் அழைத்துச் செல்வேன்."

அதனை ஓர் சிறிய கிராமம் எனச் சொல்ல முடியாது. உடைந்த வீடுகளைப் பொருத்திப் பார்த்தபோது அது ஓர் வறிய கிராமமாக இருந்திருக்காது என எனக்குள் நினைத்துக்கொண்டேன். ஏன் அமைதிக் கிராமத்துக்கு இந்தக் கதி ஏற்பட்டது என எனக்குள் கேட்டுக்கொண்டபடி நடந்தபோது, தூரத்தில் ஒருவர் நொண்டி நொண்டி நடப்பது போல எனக்குப் பட்டது. நான் விரைவாக அவரை அண்மித்தேன்.

"உங்களைச் சிரமப்படுத்துவதற்காக மன்னிக்கவும். நான் முதலாவது தடவையாக அமைதிக் கிராமத்துக்கு வந்துள்ளேன். இங்கே ஓர் வழிகாட்டியை எனக்கு அறிமுகப் படுத்துவீர்களா?"

"நான் கூட ஓர் வழிகாட்டியாகவே இருந்தேன். அமைதிக் கிராமத்தில் இருந்த அனைத்து வழிகாட்டிகளும் நொண்டிகளாகவும் காணாமலும் போய்விட்டனர்."

"ஏன் அவர்களுக்கு இந்தக் கதி நடந்தது?"

"ஏன் என வானிடம் கேள்! கடலிடம் கேள்! நிலத்திடம் கேள்! ஆனால் மனிதர்களிடம் மட்டும் கேளாதே!" என்றபடி அவர் நொண்டி நொண்டி நடந்தபோது அவர் போகும் வழி எது என அவரிடம் கேட்க வேண்டும் என எனக்குள் எரிந்த அவாவை எரித்துக் கொண்டேன்.

வெளிச்சம் கடலுக்குள் விழுந்துகொண்டிருந்தது. நான் அப்போது ஓர் வாடிய தென்னை மரத்தின் கீழ் இருந்தேன். அந்தக் கடலில் அலைகள் இருக்கவில்லை. மீன்களும் நண்டுகளும் இறால்களும் கடல் பாம்புகளும் கொக்குகளும் அட்டைகளும் பல மனித உடல்களும் அழுகிக்கொண்டு கிடந்தன.

"உனக்குக் கவிதைகள் விருப்பமா?" எனும் ஒலியைக் கேட்டுத் திரும்பினேன்.

இரத்தம் சீறிப் பாயும் தனது வயிறை இடது கையால் பொத்தியபடி வலது கையைத் தூக்கினான் ஓர் வாலிபன். ஓர் சிவப்புத் தாள் அவனது கையில் இருந்தது. நான் அதனை வாங்கியபோது தனது கடைசி மூச்சை எனது காதுக்குள் புகுத்திவிட்டுக் கரையில் விழுந்தான். அவனது சிவப்புத் தாளும் கரையில் விழுந்தது. அதனை எடுத்துப் புரட்டிப் புரட்டிப் பார்த்தேன். எந்த எழுத்துமேயில்லை. புரட்டியதால் எனது கரங்களும் சிவத்தன. எனது விழிகள் கலங்கிக் கண்ணீர்த் துளிகளைக் கொட்டின.

"நீர்! நீர்! நான் நீரைக் கண்டுவிட்டேன்!" என்றபடி ஓர் சிறுவன் என் முன் வந்தான்.

"நீருக்காக நீ இப்படி ஏங்குவது ஏன்?" என நான் அவனிடம் கேட்டேன்.

"அமைதிக் கிராமத்தின் கிணறுகளில் நீர் இல்லை. அவைகள் வற்றியும் பூஞ்சணம் பிடித்தும் உள்ளன. எனக்கு நீர் தேவை."

"இந்தக் கடலின் நீரை நான் ஒருபோதுமே குடித்ததில்லை. அது இனிப்பானதா, உப்பானதா, உறைப்பானதா என்பதுகூட எனக்குத் தெரியாது. ஆனால் இது நீர் என்பது மட்டும் எனக்குத் தெரியும். உனக்குத் தாகம் இருப்பின் நீரின் நிறங்களைத் தேடாமல் இந்தக் கடலின் நீரைக் குடிக்கலாம்தானே."

"இந்தக் கடலும் வற்றிவிட்டது
எனது விழிகளைப் போல
இந்தக் கடலின் நடுவில்
தன்னை அடக்கம் செய் என
எனது காதலி கேட்டிருந்தாள்
எனது உடைந்த படகில்
எப்படி அவளை ஏற்றுவதாம்?
கரையில் படகு
படகின் அருகிலோ
அவளது மஞ்சள் உடலும்
அழுகிக்கொண்டுள்ளது."

"இந்தக் கவிதையை எழுதியது நீயா?"

"எழுதியவர் காணாமல் போய்ப் பல வருடங்களாகுகின்றன."

"இந்தக் கவிதையை மீளவும் எனக்காக வாசிப்பாயா?"

"அவளது மஞ்சள் உடலும் அழுகிக் கொண்டுள்ளது" என்றபடி தனது முதுகைக் காட்டியபடி அவன் நடந்தான்.

நான் திரும்புவதற்காகப் படகு என்னைக் கொண்டுவந்த கரையை நோக்கி நடந்தேன். வழியில் அமைதிக் கிராமம் என்று கிராமத்தின் பெயரை மட்டும் சொல்லிவிட்டு மறைந்த கிழவியைக் கண்டபோது அவள் என் முன் வந்தாள்.

"வந்ததும் வராததுமாக ஏன் இவ்வளவு அவதியாகத் திரும்பிப் போகின்றீர்கள்?"

"நான் திரும்பிப் போவதையும், அவதியாகத் திரும்பிப் போவதையும் நான் சொல்லாமல் உங்களால் எப்படி ஊகிக்க முடிந்தது?"

"உங்களது பாதங்களது மொழியை எனது காதின் விழிகள் வாசித்துவிட்டன."

"அலைகளை எண்ணும் வயோதிபரை நான் பார்க்க வேண்டும்."

"அலைகளை எண்ணும் மனிதரை உங்களுக்குத் தெரியுமா?"

"ஆம், அவரை எனக்குத் தெரியும்."

"அவர் இங்கு பிறந்தவர் என்பது எனக்குத் தெரியும். இங்கும் அலைகளை எண்ணியவரா?"

"தொடக்கத்தில் நான் சிரிக்கும்போது எனது சொக்கையில் விழும் குழிகளை எண்ண வெளிக்கிட்டவர்" என கிழவி சொன்னபோது, மடிப்புகளால் தொங்கிக்கொண்டிருந்த அவளது சொக்கைகளுக்குள் விழுந்த குழிகளை மிகவும் சிரமமாக என்னால் அவதானிக்க முடிந்தது."

"அவரது மனைவிகளில் ஒருத்தி நீங்களா?"

"அவரது மனைவிகள் அனைவரும் இறந்துவிட்டனர். நான் அவரது காதலியாக இருந்தேன். அவருக்குப் பல காதலிகள் இருந்தனர் என்பது எனக்குத் தெரியும். இதற்காக நான் பொறாமைப்படவில்லை. அவரது காதலியாக இருந்தேன் என்பதற்காகப் பெருமைப்படுகின்றேன். அவர் வாழும் கரைக்கு என்னை அழைத்துச் செல்ல முடியுமா?"

"படகு தொலைவில் உள்ளது."

"எனது பாதம் களைத்துவிடும் எனக் கருத வேண்டாம்."

நானும் கிழவியும் நடக்க வெளிக்கிட்டோம். நடக்கும்போது மூசியது கிழவியல்ல, நானே.

கூரையில்லா வீட்டின் முன் தரையில் படுத்துக் கிடந்த இளம் பெண் அப்போதும் படுத்துக் கிடந்தாள்.

"இவளை உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியாது. அலைகளை எண்ணும் வயோதிபரின் மகள் என என்னிடம் அவள் சொன்னதோடு மட்டுமல்லாமல், அவர் அலைகளை எண்ணிக்கொண்டிருக்கும் கரைக்குக் கூட்டிச் செல்ல முடியுமா எனவும் என்னிடம் கேட்டாள்."

"நீ விரும்பினால் அவளையும் கூட்டிச் செல்லலாம்."

அவளது மூடிக் கிடந்த விழிகள் தானாகத் திறந்தன. அதேவேளையில் அவளது உதடுகளும்.....

"எனது அண்ணன் கவிதைகள் எழுதுபவர். அவரைக் கண்டு பல வருடங்கள். அமைதிக் கிராமத்தில் நிறையக் கவிஞர்கள் இருந்தனர். அவர்கள் அனைவரும் காணாமல் போனபோது கூட என்னைப் பற்றிப் பேசக் கேள்விப்பட்டேன். அமைதிக் கிராமத்தில் நீங்கள் நடத்திய குறுகிய பயணத்தின்போது ஓர் கவிஞரைக் கண்டீர்களா?"

"இல்லை. ஓர் நொண்டியைக் கண்டேன். தான் வழிகாட்டியாக இருந்தாரென்றும் இங்கே வாழ்ந்த வழிகாட்டிகள் காணாமலும் காலமாகிவிட்டனர் என்றும் என்னிடம் சொன்னார். ஏன் அவர்களுக்கு இந்தக் கதி நடந்தது எனக் கேட்டபோது, 'வானிடம் கேள். கடலிடம் கேள். ஆனால் மனிதர்களிடம் மட்டும் கேட்டுவிடாதே' என்று சொல்லிவிட்டுத் தன்பாட்டில் சென்றுவிட்டார். அதன் பின்னர் உடல் முழுவதும் இரத்தம் வடிந்தபடியும் சாகும் தறுவாயிலும் ஓர் வாலிபனைக் கண்டேன். அவன் என்னிடம் எனக்குக் கவிதை விருப்பமா எனக் கேட்டுவிட்டு ஓர் தாளை வாசிக்கத் தந்தான். அதில் எந்த எழுத்துமே இருக்கவில்லை, ஆனால் இரத்தம் மட்டுமே இருந்தது. அவன் என்னிடம் தாளைத் தந்துவிட்டு இறப்பதற்கு முன் தனக்கு ஓர் சகோதரி இருப்பதாகச் சொல்லவில்லை. அதன் பின்னர் ஓர் சிறுவனைக் கண்டேன். அவன் எனக்கோர் கவிதையைச் சொன்னான். ஆனால், தான் அந்தக் கவிதையை எழுதவில்லையென்றும் எழுதியவர் காணாமல் போய் பல வருடங்கள் என்றும் சொன்னான். கவிதையை மீளவும் சொல்ல முடியுமா எனக் கேட்டபோது அதனது கடைசி வரிகளை மட்டும் சொல்லிவிட்டுச் சென்றான்."

"அவன் சொன்ன கடைசி வரிகளை எனக்குச் சொல்ல முடியுமா?"

"அவளது மஞ்சள் உடலும் அழுகிக் கொண்டுள்ளது."

"அது எனது அண்ணாவின் காதலி. உங்கள் முன் இறந்தது எனது அண்ணனே. அவரைக் கடைசியாகக் காணும் சந்தர்ப்பம் உங்களுக்காவது கிடைத்தது. எனக்கோ கிடைக்கவில்லை. அண்ணாவும் அப்பா போன்றவரே. ஆனால் மழைத்துளிகளை எண்ணுவதில் தனது காலங்களைச் செலவழித்தவர்."

"நீங்கள் விரும்பினால் அவர் எங்கே மரணித்தாரோ அங்கு சென்று அவருக்குக் கடைசி அஞ்சலியைச் செலுத்தலாம்."

அவரது உடல்கூட இப்போது காணாமல் போகும்படி செய்யப்பட்டிருக்கலாம். அங்கே போகாமல் நாங்கள் அப்பாவைக் காணச் செல்வோம்.

நானும், கிழவியும் இளம் பெண்ணும் படகை நோக்கி நடந்துகொண்டிருந்தபோது சிறிதாக மழை பெய்யத் தொடங்கியது. நாங்கள் ஒதுங்குவதற்குக் கூரைகளோ குடைகளோ இருக்கவில்லை. அவைகள் இல்லாதது எமக்கோர் பிரச்சினையாகவும் படவில்லை.

"ஆ! எவ்வளவு வருடங்களுக்குப் பின்னர் மழை பொழிகின்றது!" என்றபடி கிழவி வானத்தைப் பார்க்க வெளிக்கிட்டபோது, நாங்களும் பார்க்க வெளிக்கிட்டோம். அவர்களது முகங்களில் ஓர் இனம் புரியாத பிரகாசத்தை என்னால் அவதானிக்க முடிந்தது. மழையை இரசித்தபடி நாங்கள் கரைக்கு வந்தோம்.

நாங்கள் படகில் ஏறிக்கொண்டிருந்த போது நொண்டியும், சிறுவனும் எங்களை நோக்கி ஓடி வந்தனர். அவர்களையும் ஏற்றிக் கொண்டோம்.

மறுகரைக்குப் படகு எங்களைக் கொண்டுவந்து இறக்கியபோது, அங்கே இருளாக இருந்தது. எங்களை வரவேற்றது கோபம் கொண்ட காற்று. கொந்தளிக்கும் கடல் கரையை நோக்கி எறியும் அலைகளது ஒலிகள் எங்களது காதுகளைத் தொட்டன.

"அவர் எங்கே உள்ளார்?" எனக் கிழவி என்னிடம் கேட்டாள்.

"தொலைவில் இல்லை. ஆனால் காலநிலை மோசமாக இருப்பதால் அவர் கரையில் இருப்பாரா என்பதில் எனக்குச் சந்தேகம் உள்ளது."

"அவர் கரையில் இருப்பார்!" எனத் திட்டவட்டமாகச் சொன்னாள் கிழவி.

நாங்கள் நடந்தோம். நடந்துகொண்டிருந்தபோது காலநிலை அமைதிக்கு வந்ததுமல்லாமல் சூரியனும் தனது விழிகளைத் திறந்தது.

அவர் இருக்குமிடத்தில் யாரோ படுத்துக் கிடப்பது தெரிந்தது.

"அது எனது அப்பாவே!" எனக் கத்தியபடி இளம் பெண் ஓடியபோது நாங்களும் அவளைப் பின்தொடர்ந்தோம்.

அவரைத் தூக்கித் தனது மடியில் வைத்தபடி "அப்பா இறந்துவிட்டார்!" என மிகவும் அமைதியாகச் சொன்னாள். அவளது முகத்திலும் அவர்களது முகங்களிலும் கவலையையோ கண்ணீர்த் துளிகளையோ காண முடியவில்லை.

"அவரைப் பார்க்க எவ்வளவு ஆர்வத்துடன் இங்கு வந்தீர்கள். அவரோ இறந்துவிட்டார். ஏன் உங்களது விழிகளில் ஒரு கண்ணீர்த்துளிகள் கூட இல்லை?" எனக் கேட்டேன்.

"அவர் அலைகளை எண்ணி முடித்துவிட்டார்" எனச் சிறுவன் மிகவும் அமைதியாகச் சொன்ன வேளையில், சில அலைகள் வந்து அவரது உடலைக் கழுவிவிட்டுத் திரும்பிச் சென்றன.

**-க.கலாமோகன்**
**பாரிஸ்**

நன்றி : "புதிய கோடாங்கி"

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

# பெற்றோரைக் கௌரவிப்போம்

ஒரு குழந்தையின் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது, பெற்றோரின் மனப்போக்கு களைப் புரிந்துகொள்வது சில சமயங்களில் கடினமான காரியமாகும்.

தலைமுறைகளுக்கிடையே கருத்து வேறுபாடுகள் நிறைய ஏற்படுகின்றன. ஆனால், இது ஒரு பெரும் தடையல்ல, ஒருவர் தான் பலவீனப்படும்போது பிரச்சினைகளை எதிர்நோக்க முடியாமல் தப்பிக்கும் முயற்சிகளிலும் பொய் சொல்லும் நிலைகளிலும் உள் சென்று அடைக்கலம் புகுமளவிற்கு அவர்களுடைய மனது தூண்டப்படும். இம் மாதிரிச் செயல்கள்தாம் இடைவெளி என்ற சுவர் எழும்புவதற்குக் காரணமாக இருக்கின்றன.

குழந்தைகள், தங்கள் பெற்றோரோடு ஏற்படும் கருத்து வேறுபாடுகளைக் களைந்து ஒத்துப்போக முடியும். கடுமையாகச் சத்தம் போடும் நிலை ஏற்படுவதற்கு முன், அமைதி யாகப் பேசித் தீர்வு காணும் நிலைக்குக் கொஞ்சமாவது முயற்சி செய்ய வேண்டும். ஒரு பிள்ளையிடம் ஒளிவுமறைவில்லாத தன்மையும் நேர்மைத்தனமும் இருந்தால் மட்டும் அது உடனே உதவாது. மாறாக, நாம் ஒரு வேண்டு தலாக அதை வெளிப்படுத்த ஆரம்பிக்கும்போது, அது விரைவாக அவர்களது மனதைத் தொட்டு விடும்.

இரண்டு பக்கமும் நன்கு புரிந்துகொண்டு, மனமொத்துப் போகும் நிலைக்கு வரும்போது, இருவருக்கிடையே ஒரு சமாதானம் ஏற்பட மிகுந்த வாய்ப்புண்டு.

பொதுவாக நாம் மற்றவர்களோடு ஒத்துப்போவது என்பது அவ்வளவு சுலபமல்ல. இருந்தபோதிலும் நாம் முயற்சிப்பது நலம்.

**- 'மகிழ்ச்சி' எனும் நூலிலிருந்து.**

---

இலக் நய

# விடிவுக்குத் தேவை வீரம் வாழ்வுக்கு வழி விவேகம்

தருவது முழுநிலவன்

"மக்களை மேய்ப்பவர்கள் எல்லா ருக்கும் சண்டைதான் தேவையாயிருக் கிறது...... சட்" என்று கோபமாகச் சொல்லிய படி பேப்பரை வீசி எறிந்தாள் அருந்ததி.

குழந்தையோடு விளையாடிக் கொண்டிருந்த ராகவன் திரும்பிப் பார்த்தான்.

"பேச்சு சரிவராது...தமிழர்களின் கோபம் உக்கிரமடைந்து கொண்டிருக்கிறது..... தாக்கி அடித்தால்தான் வழிக்கு வருவார்கள்.... என்கிற விதமாகவே வீராவேசத்தை ஊட்டிக் கொண்டிருக்கி றார்கள். சண்டை வந்தால் அவதிப்படப் போகும் மக்களை நினைத்துக் கருத்துச் சொல்லும் பொறுப்புணர்வை எவரிடமும் காணோம்...."என்று சினந்தாள் அருந்ததி.



"உணர்ச்சிக் கொந்தளிப்பான சூழ்நிலையில் எந்நேரமும் மக்களை வைத்திருந்தால்தான், யதார்த்தத்தில் நிகழப்போகும் அவலங்களையும், பொதுவான மனித அறங்களையும், மறைத்து அமுக்கிவிட்டு வியாபாரம் நடத்தலாம்..... விலாசமெழுப்பலாம்..."என்று சிரித்தான் ராகவன்.

கோபம் வடியா மல் அவனைப் பார்த்தாள் அருந் ததி.

"உனக்குச் சிரிப்பாகக் கிடக் கிறதா?"

"சிரிக்கவும் முடி யாட்டில், இந்தச் சீரழிவுக் கொண்டாட்டங்களையும், தமிழாவேசக் கொச்சைகளையும் சகிச்சுக்கொள்ளுற தெப்படி?"

"ம்.....சரிதான்....எங்கடை ஆக்கள் எழுதுற நீதி நியாயங்களையும், மூடி மறைப்புகளையும் பார்த்தால் ஊரில் சண்டியனுக்குப் பின்னால் ஒரு எடுபிடி நிற்பானே, அவன் சொல்லும் தலையாட்டல் நியாயங்களாய்த்தான் கொச்சைத்தனம் ஓங்கி வழியுது..."

"கொடுமை என்னவென்றால், எங்களுடைய இந்த சண்டியர் எல்லாம் வல்லவர்....அவர் உதவியின்றி நாம் தலை நிமிர்ந்தே நடக்க முடியாது...எங்களுடைய இன மானம் முக்கியம்...அதற்கு அவர் வீரம் முக்கியம்...... என்ற இந்தக் கேடு கெட்ட பிலிஸ்டைன் குணத்தை நம் சமூகக்குண மாக வளர்த்து வைத்திருக்கிறோமே என்று வெட்கப்படத் தெரியாத சமூகக் கூட்டமாகவும் இருக்கிறோம்....."

"ஆமாம் இந்தக் கேடுகெட்ட குணங் களையே தமிழினப் பெருமையின் பேரால் நம் எல்லோர் மீதும் திணிக்கும் பாசிசம் தான் எல்லா ஊடகங்கள் வழியாகவும் கசிகிறது!"

"அனுக் கசிவு!" என்று சிரித்தான் ராகவன்.

"உனக்குச் சிரிப்பாயிருக்கு! மக்களைச் சண்டைக்குத் தயாராய் வைத்திருப்பதைத் தவிர, வேறு எந்த நிகழ்ச்சி நிரலும் வைத்துக்கொள்ளாத தமிழ் ஊடகங்களின் ஒருபக்கத் துதி பாட லும், ஒருபக்க வசைபாடலுமான 'பத்திரிகா தர்மம்' அசிங்கமாயில்லையா?"

"அசிங்கம்தான். ஆனால் அரசாங்கத் தரப்பிலும் நல்லதைச் செய்வதற்கு வேண்டிய துணிவைக் காண முடிய வில்லையே!"

"அவர்களுடைய அழுக்கும் இருக்கிறதுதான். ஆனால், பாதிக்கப்பட்ட வர்கள் என்று சொல்லி, நாம் சேமித்துக் கொண்டிருக்கும் அழுக்கைப் பற்றியும் பேசியாக வேண்டும். பேசாமல் விடுவதிலுள்ள பாசிசம்தான் நம் சமூகத்திற்குப் பேராபத்து...."

"நல்ல விஷயங்களை, நடக்குமா இது என்று செய்யாமல் விடுபவர்களை விடப் பெரிய கேடு சமூகத்திற்கு வேறில்லை.

"சரியாய்ச் சொன்னாய்" என்று ஆமோதித்த அருந்ததி தொடர்ந்து சொன்னாள். "நம் பிரச்சினை தீர்வதற்கு நேர்மறையான கருத்துகளைச் சொல்லாமல் எதிர்மறையாகவே பேசி, எழுதிக் கொண்டிருப்பவர்களைப் பார்த்தால், சண்டையில் சாகிறவர்களைப் பற்றிய இவர்களது அனுதாபம் போலிக் கண்ணீர் என்றுதான் கொள்ள வேண்டியிருக்கிறது."

"ம்....இறப்புகளை நிறுத்த வேண்டியதைப் பற்றிப் பேசாமல் சண்டையையும் வரவேற்று விட்டு, பிறகு மக்களுக்காகப் புலம்புகிறவர்களைப் பார்த்தால், வாக்காளர் எண்ணிக்கை குறைவதாய் அரசியல்வாதிகளும், இரசிகர்கள் குறைவதாய் ஊடகவிய லாளர்கள் மற்றும் பேனா மன்னர்களும், நுகர்வோர் குறைவதாய் வணிகர்களும் கண்ணீர் சிந்துவதாய்த்தான் கருத வேண்டியிருக்கிறது."

"மக்களைப் பற்றி இவர்கள் பேசுவதெல்லாம் வெறும் நடிப்புத்தான்! இவர்கள் வாய்ச் சவடால்களுக்கும் வீரப் பெருமிதங்களுக்குமாக அவர்கள் செத்துக் கொண்டிருக்க வேண்டும்."

ராகவன் குழந்தையிடம் பேசுவது போல அதைப் பார்த்தபடியே கூறினான்.

"நல்லதை நடத்தி முடிப்பதற்குத்தான் வீரம் வேண்டும். திருப்பியடித்தால் தெரியுந்தானே? என்று மிரட்டுவதில் வீரமில்லை; தெருச் சண்டித்தனம்தான் அதில் இருக்கிறது. முதலில் மக்களைப் பாதுகாக்கவும், சண்டை வராமல் தடுக்கவும் வழிவகை சொல்பவன்தான் வீரன்!"

"அப்படிப் பார்த்தால் நம்மவர்களில் பேசிக்கொண்டிருப்பவர்களும், எழுதிக் கொண்டிருப்பவர்களும் பெரும் பகுதி அழுக்கான உள்ளமும் கோழைத்தனமும் நிறைந்தவர்கள்தான்" என்று சொல்லிய படி அவனிடமிருந்து குழந்தையை வாங்கிக் கொண்டாள் அருந்ததி.

"நடக்குமா என்று சந்தேகம் கொள்ளாமல், நடக்க வேண்டும் என்ற உறுதியான சிந்தனையோடு விஷயங் களை அணுக வேண்டும் என்று பெரியவர்கள் அதுதான் சொல்லியிருக் கிறார்கள்!"

***'செய்குவம் கொல்லோ, நல்வினை?'***
***எனவே ஐயம் அறா அர், கசடு ஈண்டு***
***காட்சி நீங்கா நெஞ்சத்துத் துணிவு***
***இல்லோரே; யானை வேட்டுவன்***
***யானையும் பெறுமே; குறும்பூழ்***
***வேட்டுவன் வறுங் கையும் வருமே.....***

(புறம் : 214 : 1-5)

---

## சிந்தியா பதில்கள்

**✍ கிழக்கில் தொடர்ச்சியாகத் தமிழர்கள் கொல்லப்பட்டு வருகின்றனர். நம் பத்திரிகைகள் ஏவையும் துள்ளி மறிக்கக் காணோம்! ஆகை யால், இவை நம் விடுதலைக்குத் தேவையான கொலைகள்தான் என்று நிம்மதியாக இருக்கலாம் அல்லவா? நம் மக்கள் விட்டு விடுதலையாகி நிற்பதற்காக நம் மண்ணிலிருந்து அகற்றப்படும் இந்த உயிர்களுக்காக நாம் மனதில் சங்கடம் ஏதும் கொள்ளத் தேவையில்லை அல்லவா?**

-க.வாசன், வவுனியா.

ம்......ஆனால் விழிப்புடன் இருங்கள். மனிதநேயம், வன்முறை எதிர்ப்பு, கொலைகளைக் கண்டித்தல் போன்ற விஷயங்களில் நம் எழுத்தாளர்கள் இப்போது ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நம் விடுதலையைக் குழப்பக் கூடியவர்களை நம்மவர்கள் இன்னும் முழுமையாகக் கொன்று முடிக்கவில்லை. அவர்களும் ஆங்காங்கே கொலைகள் செய்யக் கூடும். அப்போது நாம் பொங்கியெழ வேண்டும். சமிக்ஞை கிடைக்கும். ஆவேசப்படத் தயாராயிருங்கள்!

**✍ வேறெங்கும் இல்லாத பல அரிய பழைய பாடல்கள் நம் இலங்கை வானொலி யில்தான் இருக்கிறது என்பது உண்மையா?**

-எம்.எம்.மிஹ்லார், குருணாகல்.

இருந்துமென்ன! அதன் அருமையைப் புதிய அறிவிப்பாளர்களும் உணர்ந்துகொள்ளும்படி பயிற்சியளித்துவிட்டுப் பழையவர்கள் போக வேண்டும் என்பதே நம் ஆதங்கம். இசைத்தட்டில் ஆங்கிலத்தில் எழுதியிருப்பதைப் பார்த்து, 'வானரதம்' படத்தை 'வண்ணரதம்' என்று சொல்லும்படியாகிவிடக் கூடாது. (கடந்த ஞாயிறுக்கு முந்திய ஞாயிறன்று அதிகாலையில் கேட்டது இது.)

**✍ 'சுக்ரன்' படத்தைப் பற்றி சிந்தியாவின் அபிப்பிராயம் என்ன?**

-எம்.ராஜு, கொழும்பு - 12.

இது சேரன், பாலா, செல்வராகவன், பாலாஜி, சக்திவேல், லிங்குசாமி ஆகியோர் காலம். இராமநாராயணன், குரு தனபால், எஸ்.பி.முத்து ராமன், எஸ்.ஏ.சந்திரசேகரன் போன்றோர் பெரிய மனது பண்ணி ஒதுங்கிக்கொள்ள வேண்டும்.

**✍ சமூகம் மதிப்புக்குரிய மனிதர்களாகக் கருதுபவர்கள் மீது கண்டனங்களையும் அவதூறு களையும் வீசுவோர் பற்றி....?**

-ஷர்மிளா பரீட், கலேவெல.

ரயிலிலே திருடுபவனைப் பிடித்துச் சிறையிலே தள்ளும் சமூகம், ரயிலையே திருடுபவனைப் பெரிய மனிதனாக மதிப்புக் கொடுத்து வைத்திருக்கிறது என்று யாரோ சொல்லியதுதான் ஞாபகம் வருகிறது.

**✍ பிறர் வாழ நம்மை அழித்துக் கொள்ளலாமா?**

-ஆர்.கோபிநாத், கம்பளை.

சுயநலக்காரர்கள் எல்லோரும் இதைப் போற்றுவார்கள் - மயங்கிவிடாதீர்கள்! பிறர் வாழ நாம் வாழ்ந்து உதவுவதே சரி.

**✍ உங்களைப் பற்றிய கேள்விகளுக்கே அதிக முக்கியத்துவம் கொடுப்பதாகத் தெரிகிறதே?**

-சுதாஷ் சுதாகரன், பூண்டுலோயா.

மற்றவர்களைப் பற்றி அந்தளவுக்குத் தெரியாது. அதனால்தான்!

**✍ பூனை குறுக்கே போவது நல்லதா, கெட்டதா?**

-ஜெ.லக்கி, பெரிய கல்லாறு - 02.

வெகு நாட்களுக்குமுன் கவிதை ஒன்று பார்த்தேன். எழுதியவர் பெயரும், வரிகளும் இப்போது ஞாபகமில்லை. விஷயம் இதுதான் :

வீட்டை விட்டு வீதியில் இறங்கும்போது பூனை ஒன்று கவிஞரைப் பார்த்துவிட்டுக் குறுக்காக ஓடுகிறது. சலித்துக்கொண்டு, போவதா, நிற்பதா என்று தடுமாறிக் கொண்டிருக்கையில், எதிரே வந்த வாகனத்தில் நசுங்குண்டு அந்தப் பூனை செத்துவிடுகிறது.


இப்போது இவருக்குக் கேள்வி, சகுனம் பிழைத்தது யாருக்கு.....அந்தப் பூனைக்கா?

**✍ எங்கு திரும்பினாலும் எரிச்சலைத் தரத்தான் ஆட்கள் இருக்கிறார்கள். என்ன செய்வது?**

-மனோ கோபாலன், ஹப்புத்தளை.

செத்த வீட்டில் தெரிந்தவர்கள் வந்ததும் பெண்களுக்கு அடிவயிற்றிலிருந்து ஒரு ஒப்பாரி வருமே....அது மாதிரியான ஒரு ஃபீலிங்தான் இப்போ எனக்கு!

சமீபத்தில் நான் அடைந்த ஓர் ஆறுதல்: சீறிவரும் தோட்டாவை பல்லால் கடித்துத் துப்புதல், ஒரு திருப்பாச்சி அரிவாளை வைத்துக்கொண்டு பொலிஸ், இராணுவம், முதலமைச்சர், பிரதம மந்திரி என்று சகலரையும் 'பஞ்ச்' வசனம் பேசிப் பதற வைத்தல், சிரிச்சு சிரிச்சு வரும் சீனா தானாக்கள், காது புளிக்கும் வரையான காதல் புராணம்...எல்லாவற்றையும் மீறியதாய் ஏதோ ஒரு பிரச்சினையை மட்டும் சொல்ல முயன்ற 'கண்ணாடிப் பூக்கள்' படம்!



சுக்ரன்
ரவிகிருஷ்ணா - நதீஷா

**✍ கிழக்கில் உதிக்கும் சூரியன் மறைவதற்குள் அங்கு பல உயிர்கள் மறைகின்றனவே?**

-என்.றம்ஸான், யாழ்ப்பாணம்.

கிழக்கு வெளுக்காதா? என்று ஆதங்கம் கொண்டிருந்த மக்கள், இப்போது எங்கள் பகுதிகள் எப்படி வெளித்தாலும் சரி, மற்ற இனத்தவர்க்குப் பாடம் புகட்டினால் போதும் என்ற ஆவேசத்தி லிருக்கிறார்கள். இந்தக் கொலைகள் எல்லாம் எங்கள் வீரத்தை உறுதிப்படுத்தி, சிங்களவரைக் கலவரப்படுத்துகிறது என்ற புளுகத்திலிருக் கிறார்கள். நம்மிடமுள்ள அறிஞர்களும், படித்தவர்களும் இந்த உயிரறுப்புகளைக் கண்டிப்பதை விட, தங்களுக்கு வேறு முக்கியமான கடமைகள் இருக்கின்றன என்பதை உணர்ந்து அவற்றைச் செய்துகொண்டிருக்கிறார்கள்!

**✍ உண்மையில் இலங்கை யாருக்குச் சொந்தம்?**

-ஜெ.நவபுத்திரன், அன்னமலை.

வேடர்களுக்கு.

**✍ எனது அபிமான நடிகை பிரீத்தா திருமணம் முடித்துவிட்டாரா?**

-எஸ்.பிரகாஷ், மத்துகம.

இயக்குநர் ஹரி மணம் முடித்தது இவரையா, இவரது அக்காவையா?.....நம் வாசகர்கள் சொல்லிவிடுவார்கள். பதறாது, ஒரு வாரம் பொறுத்திருங்கள் பிரகாஷ்.

**✍ அகத்தின் அழகு முகத்தில் எப்படித் தெரியும்?**

-எம்.எம்.எம்.முஸ்னி, தும்மோதர.

கண் + நாடி முகத்தில்தானே இருக்கிறது!

**✍ அநியாயம் என்று தெரிந்தும் கொலைகளைக் கண்டிக்காத மனநிலைக்கு நாம் எப்படி மாறினோம்?**

-கே.வைகுந்தவாசன், திருகோணமலை.

அந்த ஆரம்பத்தை அறிந்துகொள்ளாத இளையவர்களும் புரிந்து கொள்ளும்படியாகத்தான் இப்போது கிழக்கில் அந்தக் கட்டம் மீண்டும் அரங்கேறுகிறது. அதாவது, மக்கள் ஆதரவாக இல்லாமல் எதிர்த்துப் பேசுகிறார்கள் என்றால், தெரிவுசெய்து சில படித்தவர்கள், அதிகாரிகள், கலைஞர்களைக் கொலை செய்து பயமுறுத்தினால் போதும்.....பிறகு கொலை காரர்களுக்கு ஆதரவான குரல்களாக எல்லாமே மாறிவிடும். தொடர்ந்தும் தடையெதுவுமின்றிக் கொல்லக்கூடிய வல்லமையுடன் இருப்பதை நிரூபித்துக் கொண்டிருந்தால் போதும். நம்மவர்கள் இந்தக் கொலைகளை எதிர்க்க முடியாத குற்றவுணர்வை மறைக்க, எதிரிகளை உருப்பெருப்பித்து அவர்களிடமிருந்து இனத்தை மீட்பது பற்றி சவுண்டு விட்டுக் கொண்டிருப்பார்கள்!

**✍ பாகிஸ்தான் அணியின் வெற்றி?**

-ந.ஃப்ரஸா, கொழும்பு - 12.

அபாரம்! முதலில் தற்கொலைப் படையை அனுப்பி எதிர் முகாமை நிலைகுலைய வைப்பது....பின்னர் கப்டன் தலைமையிலான வீரர்கள் உறுதியுடன் விடாது போராடி வெற்றி கொள்வது என்ற ஃபோர்முலாவை இன்றைய தினத்தில் அற்புதமாகச் செய்து காட்ட இன்சமாமுக்குக் கிடைத்திருப்பது அஃப்ரிடி என்ற அதிரடிப் புதையல்.

**✍ பிரபுதேவா எங்கே காணோம்?**

-எம்.பி.ராஜ்குமார், போபிட்டிய.

தெலுங்கில் வெற்றிப் படங்கள் செய்து கொண்டிருக்கிறார். நடிகராகவோ, நடன இயக்குநராகவோ அல்ல; படத்தின் முழு இயக்குநராக!




உலக டெஸ்ட் கிரிக்கெட் வீரர்களின் சில தனித்தகவல்கள் பற்றி இப்போது பார்த்து வருகின்றோம். இந்த வகையில் தலையில் தொப்பியுடன் பந்து வீசிய வீரர்கள் பற்றிப் பார்ப்போம்.

ஒரு சில பிரபல கிரிக்கெட் வீரர்கள் டெஸ்ட் போட்டிகளின் போதும் தங்களது 'கெப்' தொப்பிகளுடன் பந்து வீசியுள்ளனர். முதல் தரப் போட்டிகளின்போது உலகில் ஆகக் கூடுதலான விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ள வில்பிரட் ரொட்ஸ், இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய மிகச் சிறந்த வேகப் பந்துவீச்சாளரான சிட்னி பான்ஸ், கிரிக்கெட் உலகில் ஆஜானுபாகுவான தோற்றத்துடன் காணப்பட்ட வொரிக் ஆம்ஸ்ட்ரோங், அவுஸ்திரேலியாவில் தோன்றியுள்ள மிகச் சிறந்த வீரர்களுள் ஒருவரான (சுழல் பந்து வீச்சாளர்) க்லெரிகிறிமெட், இங்கிலாந்து அணியில் இருந்த சிறந்த ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான ஜெப் பொய்கொட் போன்றவர்கள் பந்துவீச்சில் ஈடுபடுகின்றபோது தங்களது தொப்பிகளைக் கழற்றுவதில்லை. இப்படியான வீரர்கள் பட்டியல் பின்வருமாறு:-

வில்பிரட் ரொட்ஸ், வொரிக் ஆம்ஸ்ட்ரோங், சிட்னி பான்ஸ், பிரட் ஸ்போபர்த், ஜீ.எச்.சிம்சன் ஹேவர்ட், சனீ ராமடீன், க்லெரி கிரிமெட், ஹியு ட்ரம்பல், கிறெக் மெத்தீவ்ஸ், பி.ஜே.டி. பொசென் குவேட், ஏ.ஈ.ட்ரோட், ஜோர்ஜ் ஹர்ஸ்ட், ஜெப் பொய்கொட்.

இங்கிலாந்தில், லண்டன் நகரில் உள்ள மெடம் டுஷாட் கலையரங்கில் உலகில் வாழ்ந்த சிறந்த மற்றும் பிரபல நபர்களின் மெழுகுச் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. அந்தந்த நபர்களின் சொரூபங்களை அப்படியே பிரதிபலிப்பதாக இச் சிலைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

மெடம் டுஷாட் கலையரங்கில் ஒரு நபரின் சிலை அமைக்கப்பட்டால், அது அந் நபர் பெற்ற விசேடமான கௌரவமாகவே கருதப்படுகிறது. இதன்படி உலகப் புகழ்பெற்ற 23 கிரிக்கெட் வீரர்களின் உருவச் சிலைகள் இங்கு வைக்கப்பட்டுள்ளன. அவர்களின் பெயர்கள் பின்வருமாறு:-

டபிள்யூ.ஜே.கிறேஸ், ஜோ.டார்வின், பொப் வைட், பில் வுட்டில், லொனாட் ஹடன், நோர்மன் யாட்லி, டெட் டெக்ஸ்டர், காபீல்ட் சோபர்ஸ், விவியன் ரிச்சட்ஸ், ஆத்தர் செவுஸ்புரி, ஜெக் ஹொப்ஸ், டக்ளஸ் ஜாடின், டொன் பிரெட்மன், பீற்றர் மே, டெனிஸ் கொம்ப்டன், எம்.ஜே.கே. ஸ்மித், ஏ.ஈ.சேடோ டார்ட், ஹர்பட் சட்லிப்ட், வொலி ஹெமன்ட், எலெக் பெட்ஷர், பில் எட்ரிச், ஜிம் லேக்கர், கொலின் கவுட்லி, ஜெப் பொய் கொட்.

பண்டிதர்கள், மருத்துவர்கள் எனப் பலதரப்பட்ட தொழில் ரீதியானவர்கள் பல்வேறு காலகட்டங்களில் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் பங்குகொண்டுள்ளனர். இந்த வகையில் இங்கிலாந்தைச் சேர்ந்த மைக் பிரியர்லிக்கு கிடைக்கின்ற இடம் மிகவும் உயர்ந்ததாகும்.

இலக்கியம் தொடர்பாக உயர் வகுப்பு கௌரவப் பட்டம் பெற்ற மைக், சித்தாந்தம் தொடர்பில் டாக்டர் பட்டம் பெற்றவருமாவார். அதுமட்டுமல்லாது, இவர் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் மனோதத்துவத் துறையில் இரண்டாம் வகுப்பும் உயர் தேர்ச்சியிலும் பட்டம் பெற்றுள்ளார்.

இதன் பின்னர் இவர், கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் சித்தாந்த விரிவுரையாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

மைக் பிரியர்லி இங்கிலாந்து அணி சார்பாக 39 டெஸ்ட் போட்டிகளில் கலந்து கொண்டுள்ளார். இதன்போது 1,442 (சராசரி 22.88) ஓட்டங்களைப் பெற்றுள்ளார். இதில் 9 அரைச் சதங்கள் அடங்குகின்றன. அத்துடன் 52 'கெட்ச்'களையும் பிடித்துள்ளார். இவர் ஒரு போட்டியின் போது பெற்ற ஆகக் கூடுதலான ஓட்டங்கள் 91 ஆகும்.

இதில் 31 போட்டிகளில் இவர் இங்கிலாந்து அணிக்குத் தலைமை தாங்கியுள்ளார். 18 போட்டிகளில் வெற்றியும் 4 போட்டிகளில் மாத்திரம் தோல்வியும் கிட்டியுள்ளன.

இதே நேரம், இங்கிலாந்து அணி சார்பாக 202 டெஸ்ட் விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ள சிறந்த வேகப் பந்துவீச்சாளரான ஜோன் ஸ்னோ இரு பாகங்களைக் கொண்ட பெறுமதிமிக்க காவியமொன்றை எழுதியவராவார்.

இவரால் எழுதப்பட்ட சுயசரிதையானது பின்னர் 'கிரிக்கெட் கிளர்ச்சி' என்ற பெயரில் நூலாக வெளிவந்தது.

1941 ஒக்டோபர் மாதம் 13ஆம் திகதி பிறந்த ஜோன் ஸ்னோ, 1965 முதல் 1976 வரையில் 49 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றி 202 (சராசரி 26.66) விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார். இவரது சிறந்த பந்துவீச்சு 40 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுகளாகும்.

துடுப்பாட்டத்தின் மூலம் இவர் 772 (சராசரி 13.54) ஓட்டங்களைப் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

டெஸ்ட் கிரிக்கெட் வீரர்களின் தனிச் சிறப்புகள் பற்றி மேலும் அடுத்த இதழில் பார்ப்போம்.

**- மைந்தன்**

## எந்த கிழமையில் பிறந்தீர்கள்?

**மின்சார உலகின் வேகத்திற்கு ஏற்ப மனிதனுடைய பிறப்பு,இறப்பு பற்றிய விரிவான விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளவேண்டிய அவசியமற்ற இவ்வுலகில் மானிடத் தேவைக்கு ஏற்ப விரைவாக அவர்களது பிறப்பு எண்ணையும் (திகதி) பிறந்த கிழமையினையும் (திங்கள் - ஞாயிறு) கொண்டு தீர்க்கமாக என் அருள் ஞான ஜோதிட சித்தத்தில் கணிக்கப்பட்ட சுருக்கமான உங்கள் பலா பலன்களாகும்.**

**சொல்பவர் :**
**ஜோதிட அறிஞர், பேராசிரியர்,**
**டாக்டர் பீ.கே. சாமி J.D.G.A.N.,**
**(J.P.சமாதான நீதிபதி, கொழும்பு - இலங்கை)**

### ஆதிக்கம் 8 : பிறந்த கிழமை செவ்வாய்

எண்திசை, எண்கோணம் என்றவாறு எண் எட்டுக்குச் சிறப்புகள் உண்டு. உயர்ச்சியை உண்டுபண்ணும் என்று கூறக்கூடிய எண் எட்டு. அமைதிக்கும் சாந்தத்திற்கும் உரிய கிழமை செவ்வாய்க்கிழமை. இந்தச் சிறப்புக்களுக்குரிய ஜாதகத்தில் பிறந்த நீங்கள், வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்று நடப்பவர்கள். நீங்கள் நம்புகின்றவர் யோக்கியமானவராக இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பீர்கள். அவர் உங்கள் எதிர்பார்ப்பிற்கு மாற்றமாக இருந்தால், அதாவது கெட்டவராக இருந்தால் நீங்கள் அவரைவிடத் தீயவர். பொல்லாதவர். அவர் உண்மையிலேயே யோக்கியமானவராக இருந்தால், நீங்கள் அவரைவிட நல்லவர். நல்லவனுக்கு நல்லவன், கெட்டவனுக்குக் கெட்டவனாக இருந்தாலும் மனச்சாட்சிக்கு ஒரு நாளும் துரோகம் செய்யமாட்டீர்கள். உங்களுடைய மனச்சாட்சிக்கு முரணாக ஒரு நாளும் செயற்படமாட்டீர்கள்.

குற்றம் செய்பவனை அறிந்து அழைத்து உபதேசம் புரிவீர்கள். அறிவுரை கூறி, செய்த குற்றத்தை உணரச் செய்ய வைப்பீர்கள். மீண்டும் அவன் அந்தப் பிழையைச் செய்வதற்கு முயலாதவாறு நடந்துகொள்வீர்கள். நீங்கள் பல திறமைகள் உடையவராக இருந்தாலும் உங்களுடைய சிறிய பலவீனம் உங்கள் வாழ்க்கையினைப் பாதித்து விடும். ஒரு கப்பல் கடலில் அமிழ்வதற்கு சிறு ஓட்டை போதுமல்லவா? நீங்கள் ஒரு வேலையினைச் செய்வதற்கு எவ்வளவுதான் திட்டம் போட்டாலும் அதனை உடனே நிறைவேற்ற மாட்டீர்கள். நாளை செய்வோம் 'நாளை செய்வோம்' என்று காலத்தைக் கடத்துவீர்கள். இந்தச் சோம்பல் தன்மை உங்களைப் பாதித்து விடும்.

எந்தக் காரியத்தைச் செய்வதாக இருந்தாலும் உங்களிடம் ஆர்வம், அக்கறை என்பது இருக்காது. ஆர்வத்துடனும், அக்கறையுடனும் செய்கின்ற காரியங்கள் தாம் வெற்றியினையும், சிறப்பினையும் தரும் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். இதற்கு மாற்றமாக எந்தக் காரியமானாலும் அலட்சியப்போக்கு உங்களிடம் காணப்படும். அன்பே சிறந்த மருந்து என்பதற்கேற்ப எல்லோரிடத்திலும் அன்பாகப் பேசிப் பழகுவீர்கள். பிறரிடத்தில் புத்திசாலித்தனமாகப் பேசி உங்களுடைய காரியத்தைச் சாதித்து விடுவீர்கள்.

தொழில் முறையினைப் பொறுத்தவரையில் அயன் கலையாத சார்ட் அணிந்து கொண்டு அழுக்குப்படாமல் நீங்கள் வேலைபார்க்க முடியாது. சற்றுக் கடினமாக உடலை வருத்தி உழைக்கக்கூடிய தொழில்தான் செய்வீர்கள். சிறிய வயதிலிருந்தே தொழில்புரியத் தொடங்கி விடுவீர்கள். என்றாலும் ஆரம்பகாலத்தில் உங்களுக்குப் போதிய வருமானம் கிடைக்காது. இதனால் கொஞ்சம் கஷ்டப்படக்கூடிய நிலை தோன்றும். புத்திசாலியாக நீங்கள் இருப்பதனால் சமாளித்து வாழ்வீர்கள். இந்த நிலை 22 வயது வரை நீடிக்கும்.

உங்களுடைய 23ஆவது வயதில் இருந்துதான் நல்ல தொழில் அமையும். இதனால் அதிகளவு வருமானம் உங்களுக்குக் கிடைக்கும். இந்த நிலை ஏறக்குறைய 10 வருடங்கள் தொடரும். அதாவது 32 வயது வரை வருமானம் பெறுவீர்கள். அடுத்து வருகின்ற 10 வருடங்களுக்கும் (33-42 வயது வரை) வரவும் செலவும் சமனாகக் காணப்படும். பல வேளைகளில் செலவுக்குப் போதாது என்ற நிலைதான் இருக்கும். அடுத்து வரும் 10 வருடங்களுக்கும் (43-52 வயது வரை) சமநிலையான வருமானந்தான் கிடைக்கும். இதனால் நீங்கள் மத்திமமான வாழ்க்கைதான் வாழ முடியும். அதாவது உயர்ச்சியும் இருக்காது; தாழ்ச்சியும் ஏற்படாது. பிறந்தோம், உழைத்தோம், வாழ்ந்தோம் என்ற நிலையில் தான் நீங்கள் இருப்பீர்கள்.

ஒரு மனிதனுக்கு இறைவன் எல்லாவற்றையும் வழங்குவதில்லை. பணத்தைக் கொடுத்து நோயைக் கொடுப்பான். ஒன்றை இழந்துதான் ஒன்றைப் பெற வேண்டும் என்ற நியதிதான் இறைவனுடையது. சம வருமானத்தைத் தந்து, உங்களுக்கு ஆரோக்கியமான வாழ்க்கையினையும் இறைவன் ஏற்படுத்தி இருக்கின்றான். நீங்கள் நோயின்றி எவ்வித ஆபத்துக்களும் இல்லாமல் மிகச் சந்தோசமாகவும், ஆரோக்கியமாகவும் நீண்ட நாட்கள் வாழலாம். அனைத்துச் செல்வங்களைவிடவும் இந்தச் செல்வம் மேலானது.

உங்களுடைய அதிர்ஷ்ட எண் ஒன்பது. 9, 18, 27 ஆகிய திகதிகளில் நல்ல காரியங்களைச் செய்யுங்கள். வெற்றி கிடைக்கும். இந்தத் திகதிகள் செவ்வாய்க் கிழமையில் அமையுமாக இருந்தால் நற்பலன் சிறப்பாக அமையும். எல்லா நிற ஆடைகளும் உங்களுக்கு நன்மை தரும் நீங்கள் மோதிரம் அணிய விரும்பமாட்டீர்கள். எந்த இலக்கமுள்ள வீட்டில் வசித்தாலும் உங்களுக்கு நன்மையுண்டு.


ஆகவே, உங்களுடைய ஆதிக்க எண் 8ஐயும் செவ்வாய்க்கிழமையினையும் உடைய நீங்கள், வாழ்வில் அனைத்து நலன்களையும் பெற என் நல்லாசிகள்.

சம வருமானம் தரும் வாழ்க்கை செவ்வாயும் எண் எட்டும் தரும். தேக ஆரோக்கியமும் நீண்ட ஆயுளும் சுகவாழ்வோடு இணைந்து வரும்.

**அடுத்த வாரம் ஆதிக்கம் 8 புதன்கிழமை பிறந்தவர்களைப் பற்றிப் பார்ப்போம்.**

# இந்திய அணியின் போக்குத் தொடருமா?

கடந்த வாரம் இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் இரு வேறு விதமான டெஸ்ட் போட்டிகளும் ஒரு நாள் போட்டிகளும் இடம் பெற்றது யாவரும் அறிந்ததே.



ஆரம்பத்தில் TVS கிண்ண டெஸ்ட் போட்டித் தொடரில் இந்திய அணி தனது முழுத் திறமையையும் காட்டியிருந்தது. ஆயினும் அதற்கு ஈடு செய்யும் வகையில் பாகிஸ்தான் அணியும் தமது திறமைகளையும் காட்டி டெஸ்ட் தொடரை சமம் செய்தது. அந்த வகையில் அடுத்து Pepsi கிண்ணத்துக்காக 6 ஒரு நாள் போட்டிகள் என்ற நிலையில் களம் இறங்கிய இந்திய அணி ஆரம்ப இரு போட்டிகளிலும் பாகிஸ்தான் அணியை வெற்றி கொண்ட போதிலும், அடுத்தடுத்த 4 போட்டிகளிலும் தொடர் தோல்விகளைச் சந்தித்து இறுதியில் Pepsi கிண்ணத்தையும் பாகிஸ்தான் அணிக்கே தாரைவார்த்துக் கொடுத்தது. இந்த நிலையில் தொடர் வெற்றிகளைப் பெற்ற களிப்பிலும் தமது நாட்டை பிரதிநிதிப்படுத்திய சந்தோசத்தில் பாகிஸ்தான் அணியின் தலைவர் இன்சமாம் உல் ஹக் தனது அணியின் மீது மேலும் நம்பிக்கைகளை வளர்க்கும் பல நிகழ்வுகளை மைதானத்தில் நிகழ்த்திக் காட்டியது இங்கு குறிப்பிடத் தக்கது.

கான்பூரில் நடைபெற்ற ஒரு நாள் ஆட்டத்தில் இந்திய அணியினர், பாகிஸ்தானின் வேகப் பந்து வீச்சாளர்களுக்கு விளாசித் தள்ளியபோது அடுத்தடுத்த ஓவர்களை சுழல் பந்து வீச்சாளர்களுக்குக் கொடுத்தது இன்சமாமின் சிறந்த தலைமைப் பீடத்தை எடுத்துக் காட்டியது.

அதே வேளை, அதே போட்டியில் பாகிஸ்தான் அணி கூட இந்திய அணியின் வேகப் பந்துகளுக்கு ஓட்டங்களைக் குவித்தும் கங்குலி அடுத்தடுத்த ஓவர்களை மித வேகப்பந்து வீச்சாளர்களுக்கோ,




சுழல்பந்து வீச்சாளர்களுக்கோ கொடுக்காமல் தொடர்ந்தும் வேகப் பந்துகளையே வீசச் செய்தார். ஆயினும் பாக். அணி வெற்றி பெற 3 ஓட்டங்களே இருக்கும் இறுதி ஓவரில் மித வேகப்பந்து வீச்சாளரான சச்சின் டெண்டுல்கரை அழைத்தது அவர் தலைமைத்துவத்துக்கு பொருத்தமற்றவர் என்பதைத் தெளிவுபடுத்தியது.

தொடர்ந்தும் தோல்விகளைக் கண்டபோதும் அடுத்த போட்டியில் நாம் வெல்வோம் என்று இந்திய அணி கூறுவதை இன்னும் கைவிட்டதாகத் தெரியவில்லை. இறுதிப் போட்டியில் பாகிஸ்தானின் அரைவாசி ஓட்டங்களைக் கூடக் குவிக்க முடியாமல் திணறிய இந்திய அணி இரசிகர்கள் என்ன சொல்லித்தான் பேசினார்களோ தெரியவில்லை. விளம்பரங்களுக்குப் பலவாறாக போஸ் கொடுக்கும் இந்திய வீரர்கள், அந்த அக்கறையினைப் போட்டிகளில் காட்டினால் இன்னும் வெற்றிகளைப் பெறலாம்.

சரியான தருணத்தில் சரியான வழி நடத்தலைக் காட்டிய பாகிஸ்தான் அணியின் தலைவர் இன்சமாம் உல் ஹக் ஒரு சாதனை வீரர்தான். சொந்த மண்ணில். அதுவும் சொந்த மைதானத்தில் இந்திய அணியை திக்குமுக்காட வைத்த தலைமைத்துவம் வரலாற்றில் இருந்து மறையப்போவதில்லை.

## பன்முகத்திறன் மிக்க ஊடகவியலாளர் இரா.பத்மநாதன் காலமானார்



'தினமுரசு' வாரமலரின் முன்னை நாள் ஆசிரியரான இரா.பத்மநாதன் கடந்த 16ஆம் திகதி காலமானாரென்ற செய்தியை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். சிறிது காலம் நோய்வாய்ப்பட்டிருந்த இவர், கொழும்பு தேசிய ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வந்த வேளையில் காலமானார். மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், துணிச்சல் மிக்க ஊடகவியலாளராவார். வீரகேசரி, தினபதி, தினகரன், சுதந்திரன் ஆகிய பத்திரிகைகளிலும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றிலும் பணிபுரிந்துள்ளார். கொழும்பிலுள்ள அமெரிக்க உயர் ஸ்தானிகராலயத்தின் தமிழ் ஊடகப் பிரிவிலும் இவர் சிறிது காலம் பணிபுரிந்துள்ளார். இலங்கைத் தமிழ் ஊடகத்துறைப் பரப்பில் கிட்டத்தட்ட நான்கு தசாப்தங்களுக்கு மேலாகப் பன்முகத்துறை ஆற்றல்களை வெளிப்படுத்திய இவர், 'வானொலி மாமா' என்ற பெயரில் இலங்கை வானொலியில் நடத்திய நிகழ்ச்சி மிகப் பிரபல்யம் பெற்றதாகும். 'கோதண்டம் ஏந்திய கோமகன்' என்ற தலைப்பில் அவர் எழுதிய மகாபாரதம் பற்றிய வரலாற்று நூலொன்றினை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் வெளியிட்டமை குறிப்பிடத் தக்கது. 'கலாபூஷணம்', 'கலாபாரதி' ஆகிய விருதுகளைப் பெற்றவர் இவரென்பதும் குறிப்பிடத் தக்கது.

# நெப்போலியன் போனபார்ட் (1769 - 1821)

## உலகை வியக்க வைத்தவர்கள்

**பு**கழ்மிகு பிரெஞ்சு தளபதியும் பேரரசருமான முதலாம் நெப்போலியன் 1769இல் கார்சிக்காவிலுள்ள அஜேசியோவில் பிறந்தார். அவரது இயற்பெயர் நெப்போலியன் போனபார்ட். அவர் பிறப்பதற்கு 15 மாதங்களுக்கு முன்புதான் கார்சிக்காவை பிரான்ஸ் கைப்பற்றியது. நெப்போலியன் தமது இளமைப் பருவத்தில் கார்சிக்கா தேசியவாதியாக இருந்தார். அவர் பிரெஞ்சு நாட்டவரை ஆதிக்க வெறியராகவே கருதினார். ஆயினும் அவர் பிரான்ஸிலுள்ள படைத்துறைக் கழகங்களில் 1785இல் தமது 16ஆம் வயதில் தேர்ச்சிப் பெற்றார். பிறகு பிரெஞ்சுப் படையில் ஒரு துணை அதிகாரியானார்.

நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு பிரெஞ்சுப் புரட்சி வெடித்தது. சில ஆண்டுகளில் புதிய பிரெஞ்சு அரசாங்கம் பல அயல் நாடுகளுடன் போர்புரிய நேரிட்டது. நெப்போலியனுக்குத் தனது திறமையைக் காட்டும் வாய்ப்பு 1793இல் தூலோன் முற்றுகையின்போது ஏற்பட்டது. (அப்போது பிரான்ஸ், அந நகரை ஆங்கிலேயரிடமிருந்து திரும்பக் கைப்பற்றியது). அப்போது நெப்போலியன் பீரங்கிப் படை அதிகாரியாக இருந்தார். (அதற்குள்ளாக அவர் தமது கார்சிக்கா தேசியவாதக் கொள்கையைக் கைவிட்டுத் தம்மை ஒரு பிரெஞ்சுக் குடிமகனாகவே கருதினார்). தூலோன் வெற்றி அவருக்குப் பதவி உயர்வை அளித்தது. 1796இல் அவர் இத்தாலியில் பிரெஞ்சுப் படையின் தளபதியானார். அங்கு 1796-97இல் அவர் மாபெரும் வெற்றிகளைப் பெற்றார். பிறகு வீரராக அவர் பாரிஸ் திரும்பினார்.

1798இல் நெப்போலியன் எகிப்தின் மீது படையெடுத்தார். அப் படையெடுப்பு படுதோல்வியாக முடிந்தது. நிலத்தில் நெப்போலியனின் படைகள் பொதுவாக வெற்றி பெற்றன. ஆனால், ஆங்கிலேயக் கப்பற்படை நெல்சன் பிரபுவின் தலைமையில் பிரெஞ்சுக் கப்பற்படையை அழித்தது. 1799இல் நெப்போலியன் தம் படையை எகிப்தில் விட்டுவிட்டு பிரான்ஸ் திரும்பினார்.

பிரான்ஸ் திரும்பிய நெப்போலியன், பிரெஞ்சு மக்கள் தம் இத்தாலியப் படையெழுச்சியின் வெற்றிகளை மட்டும் நினைத்ததையும், எகிப்திய படையெடுப்பின் படுதோல்வியை மறந்து விட்டதையம் கண்டார். இதைப் பயன்படுத்திக்கொண்டு அவர் அபேசியேயுடனும் பிறருடனும் சேர்ந்து அரசாங்கத்தைக் கவிழ்த்தார். அதன் விளைவாகக் கான்சல்களின் குழு ஆட்சி ஏற்பட்டது. நெப்போலியனின் படைத்துறை வல்லாட்சிக்கு ஒரு முகமூடியாகவே இருந்தது. அவரோ அரசாங்கத்தைக் கவிழ்த்த பிறரையும் விரைவில் விஞ்சினார்.



நெப்போலியன் வியத்தகு விரைவுடன் உயர் அதிகாரத்தைப் பெற்றார். ஆகஸ்ட் 1793இல் தூலோன் முற்றுகைக்கு முன் அவர் யாருக்கும் தெரியாத, பிரெஞ்சுக் குடிமகன் என்று கூடச் சொல்ல முடியாத, 24 வயதுள்ள ஒரு கீழ் அதிகாரியாகவே இருந்தார். 6 ஆண்டுகளுக்குள்ளாக 30 வயதுள்ள அவர், பிரான்ஸின் ஈடற்ற தலைவரானார். அப் பதவியில் 14 ஆண்டுகளாக இருந்தார்.

நெப்போலியன் ஆட்சியிலிருந்தபோது பிரான்ஸின் ஆட்சித் துறையையும் சட்ட முறையையும் பெரிதும் திருத்தியமைத்தார். எடுத்துக்காட்டாக, அவர் நிதியமைப்பையும், நீதித் துறையையும் சீர்திருத்தினார். பிரான்ஸின் வங்கியையும், பிரெஞ்சுப் பல்கலைக்கழகத்தையும் நிறுவினார். பிரெஞ்சு ஆட்சித் துறையை ஒழுங்குபடுத்தினார். இம் மாற்றங்கள் பிரான்ஸின் முக்கிய நிலையான விளைவுகளை ஏற்படுத்திய போதிலும், உலகைப் பெரிதும் பாதிக்கவில்லை.

ஆயினும், நெப்போலியனின் ஒரு சீர்திருத்தம் மட்டும் பிரான்ஸின் எல்லைகளையும் கடந்து பெரும் விளைவுகளை ஏற்படுத்தியது. அதுதான் "நெப்போலியனின் சட்டத்தொகுப்பு" எனப்படும் புகழ்மிகு பிரெஞ்சு உரிமையியல் சட்டத் தொகுப்பு. பல வகைகளில் அச் சட்டத் தொகுப்பில் பிரெஞ்சுப் புரட்சியின் குறிக்கோள்கள் பொதிந்திருந்தன. எடுத்துக்காட்டாக, அச் சட்டத் தொகுப்பின்படி பிறப்பின் அடிப்படையில் எவர்க்கும் சிறப்புரிமைகள் இல்லை. சட்டத்தின் முன் அனைவரும் சமம். ஆயினும் இத் தொகுப்பு பழைய பிரெஞ்சுச் சட்டங்களையும் வழக்கங்களையும் ஓரளவு சார்ந்திருந்ததால் பிரெஞ்சு மக்களும் வழக்கறிஞர்களும் அதை ஏற்கவில்லை. பொதுவாக அது மிதமானதாகும். நன்கு தொகுக்கப் பெற்றதாகும். சுருக்கமாகவும் மிகத் தெளிவாகவும் எழுதப் பெற்றதாகவும் இருந்தது. ஆகவே, அச் சட்டத் தொகுப்பு பிரான்ஸில் நிலைத்து நின்றது மட்டுமல்லாமல், ஓரளவு மாற்றங்களுடன் பல நாடுகளிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. (இன்றைய பிரெஞ்சு உரிமையியல் சட்டத் தொகுப்பு "நெப்போலியன் சட்டத் தொகுப்பை" ப் போன்றேயுள்ளது).

நெப்போலியன் எப்போதுமே தாம் பிரெஞ்சுப் புரட்சியின் பாதுகாவலரென்று வலியுறுத்தி வந்தார்.

**(வியப்புக்கள் தொடரும்....)**

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை

*-காதில பூ கந்தசாமி-*

வணக்கம்!

இலங்கை சமாதான முயற்சிகளுக்கான ஒலிபரப்பு நிலையம். செய்திகளை எழுதி வாசிப்பவர் எரிக் சொல்ஹெயம்.

*முதலில் தலைப்புச் செய்திகள்*

**சமாதான முயற்சிகள் இறுதிக் கட்டத்தை அடைந்துவிட்டன.**

**ஒவ்வொரு நாளும் முந்நூறு பேர் இறந்தது தடுக்கப்பட்டு வருடத்துக்கு முந்நூறு பேர் கொல்லப படுகின்றனர்.**

**பொதுக்கட்டமைப்பு வெகுவிரைவில் அமைக்கப்படவுள்ளது. ஆனாலும் அரசினதும் புலிகளினதும் இணக்கப்பாடு தொடர்பில் இழுபறி தொடர்கிறது.**

**உப்பாறில் கடற்படைப் படகு மீது புலிகள் தாக்குதல் நடத்தியதாக ஒப்புக்கொண்டுள்ளனர். அடுத்த நாள் செய்திகளின்படி எவ்வித துப்பாக்கிச் சூடும் நடத்தப் படவில்லை. எவரும் காயப்படவில்லை.**

**இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் படுகொலைகள் அதிகரித்துவிட்டதால் சமாதான முயற்சிகள் பாதிக்காது. சர்வதேச அழுத்தம் காரணமாக புலிகளுடனும் படையினருடனும் கண்காணிப்புக் குழு பேச்சுவார்த்தை நடத்துகிறது.**

**தலைப்புச் செய்திகளை உங்களுக்கு வழங்க பிரதான அனுசரணை புரிவோர், உதவி வழங்குவதாகப் பூச்சாண்டி காட்டும் பெருச்சாளி நாடுகளும் அதன் துணை நாடுகளும்.**

*இனி விரிவான செய்திகள்*

மூன்று ஆண்டுகளுக்கு மேலாக நீடிக்கும் சமாதான முயற்சிகளை இலங்கை அரசாங்கமும், புலிகளுமே பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்று நோர்வே அரசு வலியுறுத்தியுள்ளது.

இரு தரப்பும் முழங்காலுக்கும் மொட்டைத் தலைக்கும் முடிச்சுப் போடும் விதமாக முன்னுக்குப் பின் முரணான விதத்தில் சனத்துக்குக் காட்டும் பம்மாத்தை சர்வதேச சமூகத்துக்கும் காட்டுவார்களானால் இச் சமாதான முயற்சிகளுக்கு ஏற்பாட்டாளராக, அறிமுகமான மத்தியஸ் தராகக் கௌரவ வேடம் ஏற்றிருக்கும் எரிக் அவர்கள் மேற்படி பாத்திரத்திலிருந்து விலகிவிடக்கூடும் என்றும் நோர்வே எச்சரித்துள்ளது.

யுத்தம் நடந்துகொண்டிருக்கும்போது ஒரு நாளைக்கு முந்நூறு பேர் இறந்தனர். ஆனால் தற்போது ஆங்காங்கே நடைபெறும் படுகொலைச் சம்பவங்களால் வருடத்துக்கு முந்நூறு பேரே கொல்லப்படுகின்றனர். இதுவே எம்மால் இலங்கைச் தேசத்துக்கு செய்ய முடிந்த நன்மையாகும்.

அதாவது கொத்துக் கொத்தாய்க் கொல்லாமல் தனித்தனியாயக் கொல் என்பதே எமது தாரக மந்திரமாகும். புலிகளுக்குப் பாராட்டுக்கள்.

இவ்வாறு பாராட்டுத் தெரிவித்த எரிக் அவர்கள் தனது பாராட்டுச் செய்தியில் தொடர்ந்து தெரிவித்திருப்பதாவது,

இது போன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்ட நாடுகளில் நடக்கும் வன்முறைகளை இலங்கையோடு ஒப்பிடும்போது மிக மிகக் குறைவாகவே உள்ளது என்று தனது உள்ளக் கிடக்கையை விபரித்துள்ளார்.

இக் கருத்துக்களுக்காக இவருக்குப் புலிகளின் தலைமை தேசியத்தின் நன்மைக்காக உழைத்தவர் என்று கௌரவித்துச் சிறப்பு விருது ஒன்றையும் வழங்கத் திட்டமிட்டுள்ளதாக அறிவித்துள்ளது குறிப்பிடத் தக்கது.

முதல் சுனாமிக்கான மீள்கட்டுமாணப் பணிகளை ஆரம்பிக்கப் பொதுக் கட்டமைப்பை நாம் வரைந்து கொடுத்துவிட்டோம். விரைவில் அது அமைக்கப்படும் என்றும் நம்புகிறோம்.

எமது நம்பிக்கைகளைத் தகர்க்கும் விதமாகப் பொதுக் கட்டமைப்புக்கு புலிகளும் அரசும் தங்கள் திருக்கரங்களால் பச்சைக் கொடியைத் தூக்கி இடப் பக்கமாகவும் வலப் பக்கமாகவும் ஆட்டவில்லை என்பது கவனிக்கத் தக்கதாகும் என்று நோர்வேயின் அறிக்கை விடும் அமைப்பு செய்தி வெளியிட்டுள்ளது.

உப்பாறில் கடற்படைப் படகு மீது தாக்குதல் நடத்தப்பட்டதை இனந்தெரியாதவர்களின் அல்லது தீய சக்திகளின் நடவடிக்கை என்று மறைப்பதற்கு முன்னர் புலிகளின் திருமலைப் பொறுப்பாளர் எழிலன் முந்திரிக் கொட்டை போல் தாங்கள்தான் தற்பாதுகாப்புக்காகச் சுட்டதாக உளறி விட்டார்.

இத் தாக்குதலைப் புலிகள் ஏற்றுக்கொண்டாலும் எமது சமாதான முயற்சிகளின் சரத்துப்படி புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்யவில்லை என்றும் அதனால் கண்காணிப்புக் குழு உறுப்பினர் காயமடையவில்லை என்றும் கண் காணிப்புக் குழு ஊடாக வழமையான சொதப்பல் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

ஆகவே, துப்பாக்கிப் பிரயோகம் நடந்ததாகவும், அதன்போது ஒரு கண்காணிப்புக் குழுப் பிரதிநிதி காயப் பட்டார் என்று நம்புபவர்களுக்கு ஆம் என்றும், இல்லையென்று நினைப்பவர்களுக்கு இல்லையென்றும் உறுதிப் படுத்திக்கொள்ளுமாறு புரிந்துணர்வு ஒப்பந்தம் அனைவரையும் கேட்டுக்கொள்வதாகத் தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் அன்றாடம் நடைபெற்றுவரும் அரசியல் படுகொலைகளைப் புரிபவர்கள் இனந்தெரியாதவர்கள் என்றால் வன்மையாகக் கண்டிப்பதாகவும், புலிகள்தான் என்றால் ஆமைப் பூட்டுப் போட்டு மௌனம் காப்பதாகவும் சர்வதேசத்தில் இல்லாத மனித உரிமை அமைப்புத் தெரிவித் துள்ளது.

இக் கொலைகளின்போது அவ்வப்போது கண்டனங் களும் விமர்சனங்களும் எழுப்பப்படுகின்றபோது கண் காணிப்புக் குழுவை அனுப்பி கண் துடைப்பு பேச்சுக்களை புலிகளுடன் நடந்துவதையும் புலிகளின் நியாயங்களையும் புலிகளின் ஊதுகுழல்கள் - மன்னிக்கவும் ஊடகங்கள் வெளியிட வேண்டியது தேசியக் கடமை என்றும் மேற்படி அமைப்பு கேளிக்கை - மன்னிக்கவும் கோரிக்கை விடுத்துள்ளது.

இத்துடன் இந்தச் செய்தியறிக்கை முடிவடைகிறது. வணக்கம் குட் மோர்னிங்.

என்னங்கோ! எரிக்கிட்டை என்ன செய்தியோடை வந்த னீங்கள் எண்டு கேட்டதற்கு மனிசன் வாசிச்சுக் காட்டினார். வாசிச்சுப் போட்டு போகேக்க உந்தப் பாட்டையும் போட்டார், கேளுங்கோ. "உங்க அப்பனுக்கும் பே......பே....உங்க பாட்டனுக்கும் பே.....பே....."

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

(21.04.2005 தொடங்கி 27.04.2005 வரை)

## சோதிட மாமணி தில்லை

### இந்த வாரக் கிரக நிலை

மீனம் - சூரியன், புதன், வெள்ளி, இராகு, மிதுனம் - சனி, கன்னி - வியாழன், கேது, மகரம் - செவ்வாய்.

சந்திரன் மீனம், மேடம், இடபம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம் :**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.) தொழில் நன்மை, காரியானுகூலம், பெரியோர் நட்பு, உயர்ந்த எண்ணம், புதிய முயற்சி, குடும்ப சௌக்கியம், உத்தியோக மேன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**இடபம் :**
(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.)
தொழில் மந்தம், செலவு மிகுதி, கூடிய முயற்சி, அன்னியர் சகாயம், பிரயாண மிகுதி, உத்தியோகக் கலக்கம், மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**மிதுனம் :**
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)
தொழில் மேன்மை, மன மகிழ்ச்சி, உறவினர் உதவி, இனசன நன்மை, உத்தியோக மகிழ்ச்சி, மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07.**

**கர்க்கடகம் :**
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.)
தொழில் பயம், பணியாளர் கெடுதி, செலவு மிகுதி, உறவினர் உபத்திரவம், உத்தியோகச் சிக்கல், வீண் குறை கேட்டல், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

**சிங்கம் :**
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்.)
தொழில் நன்மை, காரியானுகூலம், உயர்ந்த நிலை, பெரியோர் சகாயம், குடும்பக் கவலை, தேகசுகம் பாதிப்பு, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

**கன்னி :**
(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.)
தொழில் அலைச்சல், செலவு மிகுதி, மனக் கலக்கம், வெளியிட வாழ்க்கை, குடும்ப நன்மை, உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02.**

**துலாம் :**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.)
தொழில் சிக்கல், மனக் கலக்கம், உயர்ந்தோர் நட்பு, மனக் குறை நீங்கும், குடும்பச் செலவு, கடன்படல், உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**விருச்சிகம் :**
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை.)
தொழில் அலைச்சல், மன அமைதி குன்றும், செலவு மிகுதி, குடும்பக் கவலை, பெரியோர் உதவி, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 05.**

**தனு :**
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)
தொழில் மாற்றம், புதிய முயற்சி, செலவு மிகுதி, அன்னியர் நட்பு, இனசன மகிழ்ச்சி, உத்தியோக நன்மை, பதவிகளில் மாற்றம், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் நன்மை.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

**மகரம் :**
(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை.)
தொழில் நன்மை, காரியானுகூலம், வெளியிட வாழ்க்கை, குடும்பக் கவலை, உத்தியோகச் சிரமம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**கும்பம் :**
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.)
தொழில் மேன்மை, உயர்ந்த நிலை, பிரயாணக் கஷ்டம், குடும்பக் கலகம், பிள்ளைகள் தொல்லை, உத்தியோக முயற்சி, புதிய ஸ்தானம் கிடைத்தல், மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07.**

**மீனம் :**
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி.)
தொழில் மந்தம், பணச் செலவு, வீண் துயர், உயர்ந்தோர் உதவி, குடும்ப நன்மை, மன மகிழ்ச்சி உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மாற்றம், புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

Regd. as a News Paper at the G.P.O.(QD/81/NEWS/2004)



# நீராவி

வானவெளியில் நிகழும் ஆச்சரியங்களுக்கு அளவேயில்லை. கோடை காலங்களில் அதிகமான வெப்பம் நிலவும் நாட்களில் கடல் நீரானது ஆவியாகி, வானத்தை நோக்கிச் செல்லும் அதிசயங்கள் நிகழ்வதும் உண்டு. கடந்த இரு கிழமைகளுக்குமுன் கூட, வெள்ளவத்தை கடலோரப் பகுதியில் இது இடம் பெற்றது. இங்கு காணப்படுவது கடல் நீர் ஆவியாகும் ஒரு காட்சியே. ஆயினும், இது சாதனைக்குரிய ஒன்று. எப்படியென்றால் அமெரிக்காவின் மேற்குப் பகுதிக் கடலோரத்தில் 24 மணித்தியாலத்தில் 148 ஆவிப் பெருக்கு (டோனேடோர்ஸ்) ஏற்பட்டது. இந் நிகழ்வைக் காணாத கண்களுக்காக நாம் இதைத் தருகிறோம்.


# குன்று

உலகில் மிகப் பெரிய பள்ளத்தாக்காக அமெரிக்காவின் அரிசோனா மாநிலத்தில் உள்ள கொலரேடோ பள்ளத்தாக்குக் கருதப்படுகிறது. இதில் விசேட அம்சம் என்னவென்றால், பள்ளத்தாக்குகளுக்கு இடையில் சிறிய ஓடை ஒன்று காணப்படுவதே. இந்த ஓடையானது 446 கிலோ மீற்றர் (777 மைல்) நீளமுடையது. அதுமட்டுமல்ல, இது 16 கிலோ மீற்றர் அகலமும், 1.6 கிலோ மீற்றர் ஆழமும் உடையது. சிறிய ஓடைதானே என்று காலை வைத்தால்..........



# போலிக் கை

இந்த மனிதரின் கையைப் பார்க்கும் போது ஏதோ வேற்று உலக ஜீவராசி போல் தோற்றமளிக்கிறதா? இல்லவேயில்லை. இவர் 48 வயதான அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த க்ளயின்ட் கெலம் என்பவர். சிறிய விபத்தொன்றின்போது முற்றாகத் துண்டிக்கப்பட்ட இவரது கை, 14 மணித்தியால சத்திரசிகிச்சையின் மூலம் ஒன்றாக இணைக்கப்பட்டது. இது தற்போதுள்ள சாதனையாகும். இது 1998ஆம் ஆண்டு பிரான்ஸில் நடைபெற்றது.



# பணப்பரிசு

தினமுரசு வாரமலரின் ஸ்தாபகரும் ஆசிரியருமான அற்புதன் மறைந்த 5ஆம் ஆண்டு நினைவையும் முரசின் 11ஆவது ஆண்டின் நிறைவையும் சிறப்பிக்கும் விதமாக 600ஆவது முரசில் இருபது கேள்விகளைக் கொண்ட பொது அறிவுப் போட்டி நடத்தப்பட்டது. இப் போட்டியில் முறையே முதலாம் பரிசு 5,000/=, இரண்டாம் பரிசு 2,500/=, 3ஆம் பரிசு 1,500/= என அறிவிக்கப்பட்டது. இப் போட்டியில் பல்லாயிரம் வாசகர்கள் பங்குகொண்டனர். அவர்களில் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்டு, முதலாவது பரிசினை வெல்லும் அதிர்ஷ்டசாலி வாசகர் M.I.M அஸ்ரப் அவர்களுக்கு எமது வாழ்த்துக்கள்.




# சீட்டு கட்டு வீடு

பல வகையான வடிவங்களில் கட்டிடங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகின்றன. கட்டிடங்களைக் கொங்கிறீட் கொண்டுதான் கட்டவேண்டுமா? என்று நினைத்த பிரைன் பேக் எனும் அமெரிக்க இளைஞன், இங்கு சீட்டுக் கட்டுக்கள் மூலம் 131 மாடிகளைக் கொண்ட கட்டிடம் ஒன்றை உருவாக்குகிறார். இதற்காக இவர் 1,765 சீட்டுக் கட்டுக்களைப் பாவித்து 7.71 மீற்றர் உயரமான, (25 அடி 3 அங்குலம்) கட்டிடம் ஒன்றை உருவாக்கி சாதனை படைத்துள்ளார். இவரின் இச்சாதனை இன்னும் முறியடிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.



# ஒன்றாய்ப் பிறந்தோம்

உலகில் இரட்டையர்கள் பிறப்பது நாம் அறிந்ததே. ஆனால் இங்கு ஒரே தடவையில் ஏழு குழந்தைகளைப் பிரசவித்து சாதனையைப் புரிந்துள்ளார் அமெரிக்காவைச் சேர்ந்த பொபி மெக்கோல். இவர் முப்பத்தொரு கிழமைகளில் இச்சாதனையை நிலைநாட்டியுள்ளார். 4 ஆண்களும், 3 பெண்களும் எனக் கடவுள் கொடுத்த அதிக அளவு சொத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறார். அதேவேளை, இந்தியாவின் ஆந்திர மாநிலத்தில் 22 வயதான சிரிஸா எனும் இளம் பெண் கடந்த வாரம் 7 குழந்தைகளைப் பிரசவித்தபோதும், துரதிர்ஷ்டவசமாக அவையொன்றும் உயிருடன் இல்லை.

